Reg.No: QD/76/NEWS/2005

விலை 15/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு

பக்கம் - 24

வார வெளியீடு

நாதம் - 02 டிசம்பர் 2[illegible] - 29 / 2005 வெள்ளி 41



## இனியும் ஒரு முறை எம்மை அழ வைக்காதே..

வாசகர்களுக்கு இனிய நத்தார் வாழ்த்துக்கள்

## பேரலை சொல்லிச் சென்ற வேதனை கணங்கள்

## யாழ்.நகரில் படையினர் வன்முறை!

## கேள்விக்குறியாகிவிட்ட சிறிலங்கா புலனாய்வுத் துறை

### சிந்தனைக்கு

தர்மமும் உண்மையும் எம் பக்கம் சார்ந்திருக்கின்றன, அதுவே எமது பலம். அதர்மமும்-பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்திருக்கின்றன, அதுவே அவனின் பலவீனம். ஈற்றில் வெற்றி கொள்வது நாம், ஏனெனில் என்றுமழியாத தர்மம் எமக்குப் பக்க பலமாக இருக்கின்றது



தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110,
078-8723447, 078-8722960.
இணையத்தளம் : www.battieezhanatham.com
www.battieelanatham.com
மின்னஞ்சல் : batti@eezhanatham.com
editor@battieelanatham.com
23.12.2005

## பொங்கி எழுக தேச மீட்புக்காக!

சிங்கள இனத்தின் இனவெறியாட்டம் தொடர்ந்து செல்கின்றது. அடிதடி, சுற்றி வளைப்பு, சோதனைக் கெடுபிடி என ஆரம்பித்த சிங்களப் படையின் நடவடிக்கைகள் இப்போது விரிவடைந்து விட்டது. காம வெறியாட்ட ம் கண்டபடி தமிழனைச் சுட்டுத் தள்ளுவது எனத் தனது பழைய பணியை இப்போது ஆரம்பித்துள்ளது. சாதாரண பொதுமக்களிலிருந்து உயர்கல்விச் சமூகம் வரை சிங்களப் படைகளின் துப்பாக்கிகளிலிருந்து குண்டு மழை பொழிகின்றன. அமைதி வழிமுறையில் படையின் அராஜகத்தனத்தைக் கண்டித்து அமைதிப் பேரணி நடாத்துவதற்கு அனுமதியில்லையா? அகிம்சை வழிப் போராட்டங்கள் கூட எமது தாயக மண்ணில் முன்னெடுக்க முடியாதா?

சிறிலங்காவின் தலைநகரில் இனவாதிகள் இப்போது விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்ய வேண்டுமெனக் கோசமெழுப்பிப் பேரணி நடாத்துகின்றனர். அது ஜனநாயகம். அதற்குச் சிங்களப் பொலிஸ்காரர்களின் பாதுகாப்பு, பேரினவாத ஊடகங்களின் பெரிதுபடுத்தல், ஆனால் சிங்களப் படை ஒரு தமிழ் பெண்ணைக் காம இச்சையைத் தீர்த்துப் படுகொலை செய்த சம்பவத்தைக் கண்டித்து அமைதிப் பேரணி நடாத்திய போது, அந்தப் பேரணியை வழிமறித்து வந்தவர்களைச் சுட்டு, அடித்துக் காயப்படுத்துவது தான் சிங்களக் கூலிப் படைகளின் தார்மீக செயற்பாடா? கடந்த கால் நூற்றாண்டு கால விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மண்ணை சிங்களப்படை ஆக்கிரமித்திருந்த காலகட்டத்தில் செய்தது இதுதான்.

வீதிகளில் தமிழர்களின் உடல்கள் டயர்கள் போட்டு எரித்த நிலையில், படைமுகாம்களில் சிங்கள இனவெறியர்களினால் சித்திரவதைப்படுத்தப்பட்டுத் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். பாரம்பரிய தமிழ் கிராமங்களிலுள்ள மக்களை ஒரே நாளில் வெட்டியும், சுட்டும் இரத்த வேட்கையைத் தீர்த்துக் கொண்டனர். இப்போதும் அதுதான் நடக்கின்றது. சமாதானம் என்பது சிங்களத் தலைமைகளிடமில்லை. அவர்கள் சமாதானம் எனக் கூறுவது காலத்தை இழுத்தடிப்பதுடன் தமிழினத்தை அழிப்பதற்கான காலவகாசம் படையினர் கெடுபிடி இன்று அதிகரித்து விட்டுப் போர் நிறுத்த உடன்படிக்கையை வரம்பு மீறிப் படையினர் கெடுபிடிகள் தலைவிரித்தாடுகின்றது.

கிழக்கில் நிழல் யுத்தம், வடக்கில் அராஜகம், சிங்கள தேசத்தில் கூட தமிழன் சென்று வரமுடியாத துர்ப்பாக்கிய நிலை, கொழும்பு நகரில் தமிழன் என்று அடையாளம் காணப்படுபவர்கள் கைதாகித் தடுத்து வைக்கப்படுகின்றனர். இந்த நிலையில் சிங்களத் தரப்பின் சமாதான நகர்வுகள் என்பது வெறும் வார்த்தை ஜாலம், இன்னும் இன்னும் ஏமாற்றும் அரசியல் நாடகம் தான் அவை. பண்டாரநாயக்கா, டட்லிசேனநாயக்கா, ஜே. ஆர். பிரேமதாஸா, சந்திரிகா, ரணில், மகிந்த இந்த அரசியல் தலைமைகள் எல்லாம் ஏமாற்றுப் பேர் வழிகள். இவர்கள் இதய சுத்தியுடன் எமது தமிழினத்தின் பிரச்சினைக்குத் தீர்வு காண, தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்கின்ற எந்த அடிப்படைக் கொள்கைகளையும் சிங்களப் படைகள் கொண்டிருக்கவில்லை.

எனவே இன்னும் ஒரு முறை தமிழினம் ஏமாற்றப்படமாட்டாது. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு, சமஷ்டி ஆட்சி இந்தப் பேச்சுக்களெல்லாம் போலியானவை. ஏனெனில் இரு தரப்பு நேரடிப் பேச்சுக்களை நடாத்துவதற்கான இடத்தில் இப்போது கபடத்தனமான கருத்துக்களைச் சிங்கள அரசு திட்டமிட்டுக் கூறிவருகின்றது. தமிழர்களுக்கு யாரும் அனுதாபம் காட்ட முனையக் கூடாது. சிங்களவர்களுக்குத்தான் சர்வதேசம் இரங்க வேண்டும் என்பதுதான் இன்றைய சிறிலங்கா அரசின் நோக்கம். இந்நிலையில் தமிழினம் இன்னும் சமாதான மாயையில் மூழ்கிவிடக் கூடாது. எமது விடுதலையை, எமது இலக்கை அடைவதற்காகத் தேசியத்தலைவரின் பின்னால் அணிதிரள்வது தான் அனைத்துத் தமிழினத்தின் தார்மீக கடமை.

இல்லாது விடின் இன்று தர்சினியோடு மட்டும் சிங்களப் படையின் காமவெறியாட்டம் முற்றுப் பெற்று விடாது. இன்னும் தொடர் கதையாக்க முயல்வர். நாம் அணி திரண்டு தமிழனின் தேசத்தை மீட்க வேண்டும். தமிழ் மண்ணை ஆக்கிரமித்திருக்கும் ஒட்டு மொத்தச் சிங்களப் படைகளையும் ஓடஓட விரட்டி அடிக்க வேண்டும். தென்னிலங்கை அப்போதுதான் தமிழனின் பலத்தை உணரும். யாழ். நகரில் சிங்களப் படையின் வன்முறையினால் கொதிப்படைந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஐநூறு பேர் தற்காப்புப் பயிற்சி பெறவும், தாயக விடுதலைக்காக இணையவும் தமது விருப்பைப் பகிரங்கப்படுத்தியுள்ளனர். இந்த உணர்வு ஒட்டுமொத்தத் தமிழர் தாயகத்திலிருந்து பொங்கி எழவேண்டும். இன்னும் எதிரிகள் எம் தேசத்தை ஆக்கிரமித்திப்பதை அனுமதிக்க முடியாது. எனவே பொங்கி எழுங்கள், தேச மீட்புக்காக.

# யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கடிதம்

## அன்புக்குரிய தென்தமிழீழ மக்களுக்கு,

தென்தமிழீழ இஸ்லாமிய மக்களிடத்திலே நல்ல ஒரு மாற்றம் காணப்படுகின்றது மகிழ்ச்சியைத் தருகின்றது. இம்மக்கள் தங்கள் அச்சங்களை அல்லது சந்தேகங்களைத் தமிழீழத் தேசியத்தலைவரிடம் நேரடியாக கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள். இதுவரவேற்கக் கூடிய மாற்றமாகும். மக்கள் தமது சந்தேகங்களை வேறு நபர்களின் ஊடாகத் தெரிவிப்பதிலும் பார்க்கத் தாங்களே நேரடியாகத் தெரிவிப்பது பல வழிகளிலும் நன்மை பயப்பதாகவே இருக்கும்.

தமிழ்பேசும் மக்களைப் பிரித்து, அவர்களது சுதந்திர வாழ்வுக்குத் தடைபோட விரும்பிய பேரினவாதிகளுக்கு இது தர்மசங்கடமான நிலையைத் தோற்றுவித்திருக்கும். விடுதலைப் புலிகளைப் பற்றித் தவறான கருத்துக்களைப் பரப்பிடுவோர் அதற்குத் துணை போகின்றவர்களுக்கு நிட்சயமாக இந்த நேரடித் தொடர்பு கசக்கவே செய்யும். தமிழ், முஸ்லிம் உறவுகளுக்குத் தீங்கு செய்வோர் யார்? ஆவர்கள் செய்யும் சீரழிவுகள் யாவை என்பன தற்பொழுது அம்பலமாகி வருகின்றன.

தங்கள் சுய நலத்திற்காகத் தமது சமூகத்தையே பலி கொள்ளும் அரசியலாளர்களை இனம் காணக்கூடிய நிகழ்வுகள் அண்மையில் தென்தமிழீழத்தில் நடந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். கருணாகுழுவுக்கு முகாம் அமைக்க உதவும் அமைச்சர்கள் பற்றிய விபரங்களும், அதே கருணா குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம்கள் மீதான தாக்குதல் எல்லாம் வெளிவந்துள்ளமை உண்மையில் யார் இவற்றில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

எனவே காத்தான்குடிப் பள்ளிவாசல் சம்மேளனம் தமிழீழத்தேசியத் தலைவருக்கு நேரடியாகக் கடிதம் எழுதியமை காலத்திற்குச் சாலப்பொருத்தமான செயலாகும். இக்கடிதத்தில் தலைவர் மிகமென்மையான இதயம் கொண்டவர் என்று குறிப்பிட்டுள்ளமையும் நல்ல கணிப்பாகவே கருதப்படுகின்றது.

மென்மையான இதயம் உள்ள ஒருவராலேயே மக்களின் துன்ப, துயரங்களை உணரமுடியும். மற்றவர்களால் அதனை உணரவும் முடியாது, அதனை எதிர்த்து உறுதியாகவும் நிற்கமுடியாது. சிங்களப் பேரினவாதம் தமிழ் பேசும் மக்களுக்குச் செய்த செய்கின்ற இடர்களை மென்மையான இதயத்தை கொண்ட தலைவரால்தான் உணரமுடிந்தது.

அதன் வெளிப்பாடாகவே தமிழ்பேசும் மக்களைக் காப்பதற்கான போராட்டமாக இது உறுதிகொண்ட ஒரு தலைவனாலேயே மேற்கொள்ளப்பட முடியும். எனவேதான் இன்று இப் போராட்டம் மிகவும் உணர்ந்த நிலையிலே முன்னெடுக்கப்படுகின்றது.

இப்போராட்டத்தைக் குழப்ப வேண்டும் தமிழ் பேசும் இனத்தைப் பிளவுபடுத்த வேண்டும். இதற்கான அத்திவாரங்களை இட்டவர்கள் தற்பொழுது தமது நோக்கத்தையும், திட்டத்தையும் வெளிப்படையாகவே சொல்லுகின்றனர். பேரினவாதிகள் தமது அடிவருடிகள் மூலம் இதனைச் சொல்ல வைத்துள்ளனர். சிங்களப் பேரினவாதத்திற்கெதிராக ஆயுதம் ஏந்த வேண்டிய முஸ்லிம்கள் தனிப்படையாக சிறிலங்கா இராணுவத்தில் இருக்க வேண்டும் என்ற குரல் எழுப்ப வைக்கின்றது.

முஸ்லிம்களைத் தனிப்படையாக உருவாக்கித் தமிழர்களுடன் மோதவிட்டுச் சிங்களப் படைகள் உயிரழிப்பின்றி இருப்பதற்கான திட்டமே இந்த முஸ்லிம்களுக்கான தனிப்படைப் பிரிவின் நோக்கமாகும். இதற்குத் துணை போவதற்கென்று சில முஸ்லிம் தலைவர்கள் புறப்பட்டுள்ளார்கள் என்பதே கவலையக்குரியதாகும். இந்த உள்நோக்கத்தை அடிப்படையாக கொண்டே தமிழ், முஸ்லிம் மோதல்களை உண்டாக்குகின்றார்கள்.

இத்தகையவர்களுக்கு மக்கள் உரிமைகளிலே சிறிதளவு கூட அக்கறை இல்லை என்பதை மக்கள் அறிந்து கொள்ளவேண்டும். சிங்கள அரசு விடுதலைப்புலிகளை உலக அரங்கில் பயங்கரவாதிகளாகக் காட்டுவதற்காகப் பெரிய பரப்புரைகளைச் செய்து வருகின்றது.

இதற்காகத் தங்களது ஆதரவுக் குழுக்கள் மூலம் முஸ்லிம்களின் மேல் தாக்குதல்களை நடத்திவிட்டு அவற்றைப் புலிகள் செய்ததாகக் குற்றம் சுமத்துகிறார்கள். இதனைப் பின்னர் உலகெங்கும் பறைசாற்றித்திரிகிறார்கள் இந்தப் பிரசாரப் பின்னணியிலேயே அரபு நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துத் தற்போதைய நிலைமை பற்றிக் கூறப் போவதாகச் சில அமைப்புக்கள் கூறி வருகின்றன.

எனவே முஸ்லிம் மக்கள் தங்கள் பிரச்சினைகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி சந்தேகங்களை நீக்க எடுக்கும் முயற்சிகளை வரவேற்கும் அதேநேரத்தில், இந்த வகையான தொடர்புகள் தொடரவேண் டும் என்பதே பலரதும் விருப்பமாகும்.

நிற்க, யாழ்ப்பாணத்தில் இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரித்துள்ளது. திடீர் திடீரெனச் சுற்றிவளைப்புக்கள் நடைபெறுகின்றன. மக்களின் இயல்பு வாழ்க்கை மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு முரணான வகையில் சிறிலங்காவின் படைகள் நடந்து கொள்கின்றன.

மக்களை உளரீதியாகப் பாதிக்கின்ற வகையிலும், பயமூட்டும் வகையிலும் படையினர் தராதரத் தேர்வு நடைபெறும் பொழுது இவ்வாறு படையினர் நடந்துகொள்வது மாணவர்களின் கல்வியையும் பெரிதும் பாதிப்படையச் செய்கின்றது. முன்பு யுத்தம் நடைபெற்ற காலங்களில் கூட அமைதிகாப்பதாக வெளியில் கூறிவிட்டுத் தேர்வு நேரங்களில் குண்டுகளை வீசித் தேர்வு எழுதிய மாணவர்களைப் பயமுறுத்தியதை மறக்க முடியாது.

சிங்களப் பேரினவாதம் எப்பொழுதும் ஒரே நோக்கம் கொண்டதே என்பதே உண்மையாகும். சிங்களச் சிந்தனையாளர்கள் மாறுவார்களேயின்றி அவர்களது சிந்தனைகள் மாறுவதில்லை என்பதனையே இன்றைய யாழ்ப்பாண நிலைவரம் எடுத்துக் காட்டுகின்றது.

சுற்றிவளைப்பு என்ற போர்வையில் 15.12.2005 காலை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் நமது ஈழநாடு பணிமனைக்குள் படையினர் அத்து மீறிப் புகுந்து தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர். ஊடகத்துறைக்கு எதிரான அச்சுறுத்தலாகவே இது கருதப்படுகின்றது.

ஊடகத்துறை சனநாயக உரிமை பற்றிப் பேசிக்கொண்டு தமிழ் மக்களது உரிமைக்காக எழுதிவரும் ஊடகங்களுக்குப் பயமூட்டும் நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். இவையாவும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல்களேயாகும். 1958ல் தமிழினத்தின்மேல் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தடைசெய்ததுடன் தந்தை செல்வாவின் "சுதந்திரன் செய்தித்தாளை" பண்டார நாயக்கா தடைசெய்தார். அங்குவைத்து மூடிப் பூட்டினார். அன்று தொடங்கிய தமிழ் ஊடகங்களுக்கெதிரான அடக்குமுறை, தணிக்கை , தடை என்பன இன்று வளர்ந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள முடியாத நிலைக்கு இட்டுவந்துள்ளது.

அண்மையில் யாழ் பல்கலைக்கழக சமூகம் நடத்திய அமைதிவழிப் போராட்டம் எவ்வாறு சிறிலங்கா படைகளால் எதிர் கொள்ளப்பட்டது என்பது உலகறிந்ததே. அங்கும் ஊடகவியலாளர்கள் குறிவைத்துத் தாக்கப்பட்டனர். எனினும் பேனாமுனையின் பலத்தை துப்பாக்கி முனையால் அடக்கிவிட முடியாதென்பதை வரலாறு எப்போதும் மெய்ப்பித்தே நிற்கிறது.

அன்புடன்
மாசிலான்.

# மட். மாவட்டத்தில் அதிகரித்து வரும் படையினர் கெடுபிடி

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மை காலமாக இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளது. சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு போர் நிறுத்தம் அமுலில் உள்ள போதும் பொதுமக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெரும் சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

மாவட்டத்தின் இராணுவக் கட்டுபாட்டு பகுதிகளில் பல்வேறு அசம்பாவிதங்கள் நாளாந்தம் இடம் பெற்றுக் கொண்டே வருகின்றது. போர் நிறுத்த உடன்படிக்கையில் பொது மக்கள் நம்பிக்கை வைத்து தமது இயல்பு வாழ்க்கை வழமைக்குத் திரும்ப வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். உடன்படிக்கையில் உள்ள விடயங்கள் சிறந்த முறையில செயற்படுத்தப்பட வேண்டும் என மிகவும் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. பாடசாலைகள், கோயில்கள் மற்றும் பொதுகட்டடங்கள் போன்றவற்றில் உள்ள இராணுவத்தினர் அகற்றப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் பழமையாக இருந்தாலும், இதில் எந்த நடவடிக்கையில் எந்தளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதனை சிந்தித்து பாருங்கள். யுத்த நிறுத்தம் ஏற்பட்டு நான்கு வருடம் முடியும் தருணத்தில் மக்கள் அடைந்துள்ள நன்மைகள் எந்தளவு என்பதனை பாருங்கள்.

2001ல் ஏற்பட்ட சமாதானத்தின் மூலம் சிறியதொரு கால இடைவெளியில் மக்கள் நிம்மதியாக வாழ்ந்தாலும் அந்தக் காலப் பகுதியிருந்து இன்று வரைக்கும் கூடுதலான துன்பங்களையே இப்பகுதி மக்கள் மாத்திரமல்ல, வடகிழக்கு வாழ் மக்கள் அனைவரும் எதிர் நோக்கியுள்ளார்கள். மட்டக்களப்பினைப் பொறுத்த வரையில் போர் நிறுத்தக் காலப் பகுதியில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இராணுவம் மற்றும் இராணுவப் புலனாய்வு அவர்களின் கூலிப் படைகள் தேச துரோகிகளால் இக்காலப் பகுதியில் பொதுமக்கள் மற்றும் போராளிகள் என கொல்லப்பட்டுள்ளார்கள். அத்துமீறல்கள் ஒரு புறமிருக்க போக்குவரத்து மேற்கொள்கின்ற அப்பாவி பொதுமக்கள் மீது பல்வேறு தொந்தரவுகளை இன்றும் கூட செய்வதனை காணக் கூடியதாகவுள்ளது.

இதில் ஒரு கட்டம் தான் 2002ம் ஆண்டு காலப்பகுதியில் முஸ்லிம் உறவுகளைச் சீர்குலைக்கும் நோக்குடன் இராணுவம் பொலிஸாரினால் கட்டவிழுத்து விடப்பட்ட வன்முறைகளால் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். அனேகமான தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டது. இதற்கு இராணுவத்தினரும், பொலிசாரும் பின்னணியில் செயற்பட்டார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் தலைவர்கள் கொல்லப்பட்டது. உட்பட 2005ம் ஆண்டு நடுப் பகுதியில் சந்திவெளியில் வீதிதடையை அகற்றக் கோரி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவத்தினரின் அடாவடித்தனங்களினால் அப்பகுதியைச் சேர்ந்த வயோதிபர் சுட்டு கொல்லப்பட்டதுடன் பாடசாலை மாணவர்கள் உட்பட 20க்கு மேற்பட் ட பொதுமக்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

இப்பகுதியில் ஆயுத குழுக்களுக்கு ஆதரவாக அமைக்கப்பட்ட சிறிய இராணுவக் காவலரண் ஒன்று அமைத்து போக்குவரத்தின் போது பொது மக்களுக்கு அசௌகரியத்தினை ஏற்படுத்தி வந்தார்கள். இவற்றினை ஆட்சேபித்து இராணுவத்திற்கு எதிராக மக்கள் போராட்டம் செய்தார்கள். அதாவது சுருக்கமாகக் கூறினால் ஒரு காவலரணை அகற்றக் கோரியமைக்காக விலை மதிக்க முடியாத ஒரு உயிர் கொல்லப்படுவதும் மக்கள் காயப்படுத்தப்படுவதுமாகும். இதே போன்று தான் அம்பாறை மாவட்டத்திலும் சிறிலங்கா இராணுவத்தினால் மேற் கொள்ளப்பட்ட போர் நிறுத்த மீறல்களையும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

- சுகுணம் -

எனினும் அண்மைக் காலமாக இராணுவம் யுத்தம் ஏற்படும் என்ற உணர்வில்தான் செயற்பட்டு வருகின்றது. புதிதாக வீதி யோரங்களில் காவலரண்களை அமைக்கின்றார்கள். முகாம்களில் பதுங் குழிகளை வெட்டி முகாமைப் பலப்படுத்து கின்றார்கள். அத்துடன் சுற்று வேலிகளை அமைக்கின்றார்கள். ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதம் மற்றும் பல்வேறு வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றார்கள்.

மாவட்டத்தின் சில இடங்களில் இனம் தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ வாகனத் தொடரணி மீதான கிளைமோர் தாக்குதல் மற்றும் கைகுண்டு தாக்குதலினால் அச்சமடைந்த படையினர் வீதியில் இருமருங்கிலும் உள்ள காடுகள் மற்றும் சிறு பற்றைகளை வீதியால் செல்லும் பொதுமக்களை அச்சுறுத்தி வெட்டி அகற்ற வைக்கின்றார்கள். இதுதான் பொது மக்கள் மீது இராணுவத்தினரின் இன்றைய நிலையாகயுள்ளது.

இதே போன்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னிலையில் போர் நிறுத்த மீறல்களை மேற்கொண்டு வருகின்றார்கள். ஏறாவூர் பகுதியில் அமைக்க தீர்மானிக்கப்பட்டிருக்கும் கடற்படை இராணுவ முகாம், வெல்லாவெளிப் பகுதியில் சூனியப் பிரதேசம் நோக்கி இராணுவ முகாம் பலப்படுத்தல் மற்றும் வாகரை கிரிமிச்சை பகுதியில் சூனிய பிரதேசம் நோக்கி இராணுவத்தினர் முன்னேறியுள்ளமை அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகவுள்ளதைக் காணலாம்.

இராணுவக் கட்டுப்பட்டுப் பகுதியில் உள்ள மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் போதும் அவர்களின் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் மக்களும் இன்றும் எவ்வளவோ சிரமத்தினை எதிர்நோக்குகின்றார்கள். அண்மையில் கூட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் பொருள்கள் எடுத்து செல்ல தடைவிதிக்கப்பட்டது.

அதே போன்று கிரான் பாலத்தினூடாகச் செல்லும் விவசாயிகள் வயல் பகுதிக்குச் செல்ல முடியாது. விவசாயச் செய்கைக்குத் தேவையான பசளை வகைகளைக் கூட எடுத்துச் செல்வதற்கும் தடைவிதித்துள்ளார்கள். கறுத்தப் பாலத்தினால் சென்ற இளைஞர்கள் ஒட்டுப்படைனரினால் கைது செய்யப்பட்டு சுட்டு கொல்லப்பட்டார்கள். களுவாஞ்சிகுடி மண்முனை அம்பிளாந்துறை, வவுணதீவு போன்ற பாதைகளினூடாகப் போக்குவரத்தினை மேற்கொள்ளும் மக்களும் பல்வேறு இடையூறுகளைச் சந்திக்கின்றார்கள்

பொருள்கள் எடுத்துச் செல்வதற்குப் பயணிகள் செல்லு வதற்கு மட்டும் அல்ல படுவான்கரையில் அச்சிடப்படும் பத்திரிக்கையான ஈழநாதம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டு செல்வதையும் விசேட அதிரடிப்படையினர் தடைவிதித்தார்கள். அதே வேளையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத் திற்கு பத்திரிக்கைகளை விநியோகிக்கும் அப்பாவிகள் இராணுவத்தின் புலனாய்வு பிரிவினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**இராணுவக் கட்டுப்பட்டுப் பகுதியில் உள்ள மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் போதும் அவர்களின் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் மக்களும் இன்றும் எவ்வளவோ சிரமத்தினை எதிர்நோக்குகின்றார்கள். அண்மையில் கூட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் பொருள்கள் எடுத்து செல்ல தடைவிதிக்கப்பட்டது. அதே போன்று கிரான் பாலத்தினூடாகச் செல்லும் விவசாயிகள் வயல் பகுதிக்குச் செல்ல முடியாது. விவசாயச் செய்கைக்குத் தேவையான பசளை வகைகளைக் கூட எடுத்துச் செல்வதற்கும் தடை விதித்துள்ளார்கள்.**

தமிழ் இளைஞர்கள் சுட்டு கொல்லப்படுகின்றார்கள். வீதி வீடுகள் என நாளாந்தம் சோதனை நடவடிக்கை. இரவு வேளையில் இனம் தெரியாத ஆயுதபாணிகளின் நடமாட்டம், ஆங்காங்கே கைக்குண்டு வீச்சு, துப்பாக்கிப் பிரயோகம், குண்டு தாக்குதல், சில கிராமங்கள் சுற்றிவளைப்பு, தமிழ் இளைஞர்கள் கைது, இடையிடையே முஸ்லிம்கள் கொலை கர்த்தால், கடையடைப்பு இதே போன்று தமிழ் பகுதி களில் கர்த்தால் ஆர்ப்பாட்டம் எனப் பல சம்பவங்கள் தொடர்வதாகவே உள்ளது.

இத்தனைக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதான வீதியின் 20க்கு மேற்பட்ட இராணுவ முகாம்கள் மற்றும் 15க்கு மேற்பட்ட பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ள போதும் வீதிப் பாதுகாப்பு என இராணுவம், பொலிஸ் என இரவு பகலாக ஈடுபடுத்தினாலும் படுகொலைகள், கொள்ளை, ஆட் கடத்தல் என தொடர்ந்து இடம் பெறுகின்றது. எனினும் பொதுமக்களால் இது தொடர்பான எத்தனையோ முறைப்பாடுகள் செய்யப்பட்டாலும் இதுவரையில் இச்சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் அல்லது தடயங்கள் என எதுவும் கைப்பெற்றப் படவில்லை என்று தான் கூற வேண்டும்.




அண்மையில் கூட வந்தாறுமூலையில் இரு சகோதரிகள் படுகொலை செய்யப்பட்டார்கள். அதே போன்றே கிரான் கோரகல்லிமடு பகுதியில் இளைஞர்கள் சுட்டு கொல்லப்பட்டார்கள். இவ்வளவு நடந்தும், என்ன நடந்தது? இது இவ்வாறு இருக்க புதிய அரசு பொதுமக்கள் விடயத்தில் அசமந்தப் போக்கினையே தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்றது. இப்படியான நிலை மேலும் தொடர்ந்தால், இறுதியில் மக்கள் போராட்டம் ஏற்படுவதனை யாராலும் தடுக்க முடியாது.

பல ஆண்டு காலமாக தமிழ் மக்கள் பல துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்துள்ளார்கள். இனியும் இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்க மாட்டார்கள். இப்பகுதியில் உள்ள இராணுவம் பொலிஸ் மற்றும் ஆயுதகுழுக்களை இம் மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் காலம் மிகத் தொலைவில் இல்லை. விடுதலை பெற்ற நாடான தென்னாபிரிக்காவில் கூட இறுதியில் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து தான் அவர்களுக்கான சுதந்திரத்தினை வெள்ளையர்களிடமிருந்து பெற்றார்கள்.


உலகில் மக்கள் சக்திக்கு முன்னால் எதுவும் தூசி தான் அப்படியான நிலையே வடகிழக்கிலும் ஆரம்பித்து விட்டது என்றுதான் கூற வேண்டும். இதற்கான ஏற்பாடுகளில் ஒன்றுதான் கிராமங்களில் கிராமிய பாதுகாப்பு படைகள் உருவாக்கப்பட்டு வருகின்றது. சிறுபான்மையாக இருந்தாலும் தற்துணிவும் சிறந்த வழி நடத்தலும் இருக்கும் வரை விடுதலை என்பதற்கான போராட்டத்தினை அழித்து விட முடியாது. இதைச் சிறிலங்கா அரசு மட் டுமல்ல உலக நாடுகளும் உணர்ந்து கொ ள்ள வேண்டும்.





# எது பயங்கரவாதம்?

## மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்



அந்த அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருக்கின்ற மக்கள் கூட, எங்களைத்தான் புலிகளைத்தான் ஆதரிப்பார்கள். தேர்தலைப் புறக்கணித்தார்களே யாழ்ப்பாண மக்கள்.

40 ஆயிரம் படையினரை வைத்துக் கொண்டு உங்களால் வாக்களிக்கச் சொல்ல முடிந்ததா? தேர்தலை நடத்த முடிந்ததா? முடியாது.

பிரபாகரன் வன்னியிலிருந்து கொண்டு பகிரங்கமாகக் கூடச் சொல்லவில்லை. மறைமுகமாகச் சொன்னார்- தேர்தல் தேவையில்லை என்று.

### எது பயங்கரவாதம்? பயங்கரவாத வரையறை என்ன? அடுத்து பயங்கரவாதம்....

பயங்கரவாதம் என்ற சொல்லைப் பயன்படுத்தி எங்களைத் தடுத்து வைத்திருக்கிறீர்கள். சரி.. தலைவர் கேட்கிறார்

அப்படியானால் பயங்கரவாதம் என்றால் எது? எங்களுக்குச் சொல்லுங்கள் என்கிறார்.

ஆனால் இல்லையே... ஐயா ஒவ்வொரு நாடும் பயங்கரவாதத்துக்கு விளக்கமாக ஒவ்வொன்றை வைத்திருக்கிறார்கள்.

இந்தியாக்காரனுக்கு பயம். தெளிவான வரைவிலக்கணம் கொடுத்தால், அங்கே நீதியின் அடிப்படையில்,தருமத்தின் அடிப்படையில் உரிமை கேட்டுப் போராடுகின்ற எத்தனையோ தேசிய இனங்களினது போராட்டத்தை இந்தியாக்காரர் அமுக்கி வைத்துள்ளார்.

ரஷ்யாக்காரன் அமுக்கி வைத்திருக்கிறான்.

உலகத்தின் பல்வேறு நாடுகளில் பல்வேறு தேசிய இனங்களை நசுக்கிக் கொண்டு இருப்பவர்கள் எல்லோரும் ஒன்று ஐக்கிய நாடுகள் சபையில் போய் ஒரு தெளிவான ஒரு வரைவிலணக்கத்தை போட முடியுமா? முடியாது- முடியவில்லை.

இவ்வளவு காலமாக பயங்கரவாதத்தின் பெயரில் எத்தனையோ இயக்கங்களைத் தடை செய்துள்ளீர்கள்.

ஆனால் உங்களால் "பயங்கரவாதம்" என்ற வரைவிலக்கணம் தர முடியாது!

நீதிக்காக-நியாயத்துக்காக-தர்மத்துக்காகப் போராடும் விடுதலை இயக்கங்களை நீங்கள் பயங்கரவாதிகள் என்கிறீர்கள்.

இதை சாதகமாக வைத்துக் கொண்டு அரச பயங்கரவாதிகள் இருக்கிறார்கள். அதாவது அரசுகள் செய்கிற பயங்கரவாதம் பற்றி ஒருவருக்கும் கவலை இல்லை.

அமெரிக்காவினது தலைமையிலே பயங்கராவாதத்துக்கு எதிரான ஒரு இயக்கம்- இதை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று இந்தியா-இலங்கை-ரஷ்யா எல்லாரும் சேர்ந்து தங்களது நாட்டில் தாங்கள் செய்கின்ற அரச பயங்கரவாதத்தை மூடி மறைக்கிறார்கள்.

ஆகவே புலிகள் காலம் காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குக்காக- இனப்படுகொலை மக்களுக்காக- ஆயுதம் எடுத்துப் போராடி 18 ஆயிரம் போராளிகளைப் பலிகொடுத்து இன்னமும் உலகத்தையே எதிர்த்து தன்மானத்தோடு தலை வணங்காமல் நிற்கிறான் பிரபாகரன்.

அப்படியான எங்களை பயங்கரவாதிகள் என்று நீங்கள் சொல்வது நியாயமா? என்று தலைவர் கேட்கிறார்.

நாங்கள் அரச பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடிய போராளிகள்.

எங்கள் மீது ஏன் தேவையில்லாத இந்த முத்திரை குத்துகிறீர்கள்? ஒற்றையாட்சியை நீயே வைத்துக் கொள்... எங்களுக்கு புலி ஆட்சி இருக்கிறது. மகிந்த ராஜபக்ஷ...

இவர் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி ஆகியவைகளுடன் என்ன மாதிரியான ஒப்பந்தங்களைச் செய்த்வர்? இவற்றுக்கு மகிந்தவின் சிந்தனைகள் என்கிறார்கள்.

தலைவர் சொல்கிறார்... மகிந்தாவுக்குக்கும் எங்களுக்கும் அவரது சிந்தனைகளுக்கும் எங்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக் குமான இடைவெளி மிகப் பெரியது என்கிறார்.

இனி மகிந்தவின் கொள்கைகளைப் பார்ப்போம்...

அவர் நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார்...

ஒற்றையாட்சிக்குக் கீழ்தான் தீர்வு.. ஒற்றையாட்சியை விடமாட்டோம் என்கிறார்.

நாங்கள் சொல்கிறோம்.

சரி நீ ஒற்றையாட்சி வைத்துக் கொள். நாங்களும் ஒரு ஒற்றையாட்சிதான் வைத்துக் கொள்ளப் போகிறோம்.

நீ சிங்கள நாட்டில் புத்த பிக்குகளைக் கட்டிக்கிட்டு ஒரு ஒற்றையாட்சியை வைத்துக்கொள்.

எங்கள் தாயகத்தில் புலிகளின் ஒற்றையாட்சி இருக்கப் போகிறது.

இது எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஒரு புதிய தலைவன் இதை நேர்மையாகச் சொல்றான். அவர் ஒற்றையாட்சி வைப்பதில் எங்களுக்கும் பிரச்சினை இல்லை.

எங்களுக்கு யார் பிரச்சினை என்றால் சமஸ்டி ஆட்சி தருவோம்- கூட்டாட்சி தருவோம் என்று சொல்கிறவர்கள்தான்.

மகிந்த நல்ல மனிதர். வைத்திருக்கட்டும் தனியாட்சியை... நாங்களும் தனியாட்சி வைத்திருப்போம்.

மற்றது தமிழர் தாயகம் இல்லை என்கிறார் மகிந்த.

சரி... நீங்கள் சொன்னதால் தமிழர் தாயகம் இல்லாமலா போய் விடும்?

நாங்கள் 70 வீதத்தை மீட்டு வைத்துள்ளோமே ஐயா...அங்கே பாருங்கள் எங்கள் காவல்துறை இருக்கிறது.

நீங்கள் பிரபாகரனை சந்திக்க வரப்போவதாகச் சொல்கிறீர்கள்.. நீங்கள் வந்தால் எங்கள் காவல் துறைதான் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும். விசா எடுக்க வேண்டும். சும்மா வர முடியாது. (மக்கள் கை தட்டல்.. அடங்கா விசில் சப்தம்).

ஆகவே சிங்களவர்களுக்கு மேல்மாடியில் (மூளையில் ஒன்றும் இல்லை) என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?

தாயகம் தரமாட்டேன் என்று சொல்கிறீரே... 70 வீதமான நிலத்தை நாங்கள் மீட்டு வைத்திருக்கிறோம் அல்லவா! அங்கே ஆட்சியும் வைத்திருக்கிறோம் அல்லவா! இன்னொரு 30 வீதம்தான் இருக்கிறது. அதற்கும் வெகுகாலம் ஆகாது. அதுவும் வந்து விடும். (அடங்காத மக்கள் கைதட்டல்).

அதேபோல் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை தரமாட்டாராம் மகிந்த.

உன்கிட்ட யார் ஐயா சுயநிர்ணய உரிமை கேட்டது...? அந்தக் காலம் எல்லாம் போய்விட்டது.

இப்போது நாங்கள் முடிவெடுத்துள்ளோம். நாங்களாகவே எங்களது தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறோம். நீ என்ன செய்யப் போகிறாய் என்று பார்ப்போம்!

உங்கள் ஆட்சியமைப்பு வேண்டாம் என்று தமிழ் மக்கள் தீர்மானித்து விட்டார்கள். நாங்கள் தனி வழியே போகிறோம் என்று சொல்லி விட்டார்கள் தமிழ் மக்கள்.

ஆகவே ஒற்றையாட்சி வைத்திருக்கிறோம்- தமிழருக்கு சுய நிர்ணய உரிமை தரமாட்டோம்-தமிழர் தாயகத்தை ஏற்கமாட்டோம் என்று சொல்வதில் இனி அர்த்தம் இல்லை.

ஏனென்றால் நாங்கள் இனி செல்லும் பாதை வித்தியாசமானது.

நாமாகப் போராடி வென்றெடுக்கப் போகிறோம் எமது உரிமைகளை. (மக்களின் கை தட்டல்)

மகிந்த சொல்கிறார் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றி அமைப்பேன் என்று.

என்ன என்று ஐயா நீங்கள் மாற்றி அமைக்கப் போகிறீர்?

போர் நிறுத்த ஒப்பந்தம் என்பது இருவர் செய்த உடன்பாடு. மேலும் சர்வதேச கண்காணிப்புக் குழுவும் உட்பட்டு இருக்கிறது. பல வெளிநாடுகள் இதில் தொடர்பு கொண்டுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் என்பது புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமான உடன்பாடு அல்ல. அது ஒரு சர்வதேச உடன்பாடு.

அப்படியான நிலையில் இதை நீ ஒரு தலைபட்சமாக மாற்றியமைப்பேன் என்று சொன்னால் முடியுமா? முடியாது.

எங்களைக் கேட்காமல், எங்களது அனுமதியில்லாமல் முடியாது. அப்படி செய்தால் போர் நிறுத்தம் உடையும்.

அப்படி நீயாக போர் நிறுத்தத்தை உடைக்க விரும்பினால் உடை. அதற்கும் நாம் தயார்!!

சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி எல்லா கட்சியுடன் சேர்ந்து பேசி முடிவெடுக்கப் போகிறாராம் மகிந்த ராஜபக்ஷ.

சர்வகட்சி மாநாடு என்றால் என்ன என்று எங்களுக்குத் தெரியும்.

காலம் காலமாக சிங்கள அரச தலைமைகள், தமிழர் பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்க கையாளுகின்ற ஒரு கருவிதான் சர்வகட்சி மாநாடு.

27 முகங்களைக் கூட்டிப் பேசி ஒரு ஒத்திசைவான தீர்மானத்தை எடுக்கப் போகிறீர்கள் என்று நாங்கள் நம்பத்தான் வேண்டுமா?

ராஜபக்ஷவுக்கு 27 கட்சிகளது ஆதரவு இருந்தாலும் சிறுபான்மை மக்களை- தமிழர்களை இவர் பிரதிநிதிப்படுத்தவில்லை.

ஆனால் ஒரு ஆளை ஒரு அமைச்சராக வைத்துள்ளார் மகிந்தா. அவர் யாரென்று தெரியும்...

அவருக்கு என்னமோ சமூக சேவை பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

என் நண்பர் சொன்னார்... சமூக சேவை அமைச்சர் இல்லை பாலா அண்ணா, சமூக விரோத சேவை அமைச்சு என்றார்.

அவரது தகுதிக்கான தகுந்த பொறுப்புதான் அது.

### இடைவெளியா? காலக் கெடுவா?

மகிந்தவுக்கு கடைசியாக தலைவர் என்ன சொல்கிறார்....

நான் ஒரு சிறிய இடைவெளி தருகிறேன். நீங்கள் உங்களை நடைமுறை அரசியல்வாதி, யதார்த்தவாதி, புலிகளோடு பேசப்போகிறேன், புதிய அணுகுமுறையை கையாளப் போகிறேன் என்று சொல்லுகிறீர்கள்.

சரி.. நீங்கள் நேசக்கரம் நீட்டும் போது நாங்களும் உம்மை தூக்கி எறியவில்லை. உனக்கும் ஒரு சந்தர்ப்பம் தருகிறேன். ஆனால் ஒரு குறுகிய காலம்தான் தருவோம்.

நீ அதற்குள் என்ன செய்யப் போகிறாய்?

சமாதானம், போர் நிறுத்தம், தமிழ் மக்களுக்கு எவ்வித நீதி வழங்கப் போகிறார் என்பதை கொஞ்சக் காலம் பொறுத்திருந்து பார்க்கிறோம். உம்முடன் மோதவரவில்லை.

உமக்கும் ஒரு சின்ன இடைவெளி தருகிறோம்.

அடுத்த வருடம் நீ வந்து எங்கள் மக்களுக்கு ஒன்றும் செய்யாமல் பேச்சுவார்த்தை என்று இழுத்தடித்தால் அடுத்த வருடம் நாங்கள் எங்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவோம் என்கிறார் தலைவர். (மக்கள் ஆர்ப்பரிப்பு)

தலைவரது அறிக்கை வெளியானதும் சில செய்தித் தாபணங்கள் தலைவரது அறிக்கையை திரித்து எழுதியிருக்கின்றன.

தலைவர் சிறிது இடைவெளி கொடுத்திருக்கிறார்...அடுத்த வருடம் என்பது அடுத்த ஆண்டு இடையிலும் இருக்கலாம் அல்லது ஆரம்பத்திலும் இந்த இடைவெளி இருக்கலாம்.

ஆனால் இவர்கள் போட்டிருக்கிறார்கள்.. இந்த மாதத்துக்குள் பிரபாகரனின் காலக்கெடு விதித்துள்ளதாகவும் ஒரு மாதத்தில் சண்டை தொடங்கப் போகிறார் என்றும் செய்திகளைத் திரித்து போட்டிருக்கிறார்கள்.

அப்படி பிரபாகரன் சொல்லவில்லை. ஒரு மாத காலக் கெடுவை பிரபாகரன் விதிக்கவில்லை. ஒரு சிறிய காலம் என்றும் அடுத்த வருடம் என்கிறார். ஒரு திகதியைக் குறிப்பிடவில்லை. ஆனால் நீண்டகாலத்துக்கு பொறுக்கமுடியாது என்றும் சொல்லி இருக்கிறார்.

தலைவர் முக்கியமாக சொல்லி இருக்கின்ற முக்கியமான இறுதியான செய்தி,

எத்தனை இடர்கள் வந்தாலும்
எத்தனை துன்பங்கள் வந்தாலும்
எத்தனை சவால்கள் வந்தாலும்
அதை எதிர்த்து நின்று போராடி
தாயக விடுதலையை மீட்டெடுப்போம்!

என்று தலைவர் இறுதியாகச் சொல்லி இருக்கிறார்(ஆர்ப்பரிப்பு ஓயாத கைதட்டல்) இதுதான் தலைவரின் செய்தி என்றார்.

**"போர் நிறுத்த ஒப்பந்தம் என்பது இருவர் செய்த உடன்பாடு. மேலும் சர்வதேச கண்காணிப்புக் குழுவும் உட்பட்டு இருக்கிறது. பல வெளிநாடுகள் இதில் தொடர்பு கொண்டுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் என்பது புலிகளுக்கும் அரசாங்கத்துக் குமான உடன்பாடு அல்ல. அது ஒரு சர்வதேச உடன்பாடு. அப்படியான நிலையில் இதை நீ ஒரு தலைபட்சமாக மாற்றிய மைப்பேன் என்று சொன்னால் முடியுமா? முடியாது."**

## சுனாமி ஒரு சுனாமி

**ஆழிப் பேரலைகள் தந்த சுவடுகள்**
**ஆறாத ரணங்கள் தான் – ஆனாலும்**
**அலைகள் சொல்லிச் சென்றது**
**அத்தனையும் உண்மைதான்.**

**நிஜம் என்று நினைத்தவற்றை**
**நிழல் என்று சொல்லிச் சென்றது சுனாமி**
**நிலையில்லை வாழ்க்கை என்பதை**
**நினைக்க வைத்துச் சென்றது சுனாமி.**

நா.கலாவதனி 'செல்வகம்'
மண்டூர் -01

# பேரலை சொல்லிச் சென்ற வேதனைக் கணங்கள்....





**டிசம்பர் 26ம் நாள்!**

மனித குலம் மறக்க முடியாத பேரழிவு நிகழ்ந்த சோக நாள். இப்போது ஓராண்டு உருண்டோடி விட்டது. பல ஆயிரக் கணக்கான மக்களின் உயிர்களைக் காவு கொண்ட அந்தச் சுனாமிப் பேரழிவு ஏற்படுத்திச் சென்ற பாதிப்புக்கள் ஓராண்டுக்குள் நிரப்ப முடியாத இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. உயிர் அழிவுகள், சொத்துக்கள் அழிப்பு, மக்கள் இடம்பெயர்வு, கல்விநிலை பாதிப்பு, தொழில் பாதிப்பு, மனஉளைச்சல், எனப் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஓராண்டு நிறைவடையும் தறுவாயில் இந்தப் பேரழிவின் தாக்கம், அழிவின் சுவடுகள் இன்னும் மக்கள் மனங்களில் இருந்து மறையவில்லை என்பது தெளிவு. தமிழர் தாயகத்தில் சுனாமி அனர்த்தத்தினால் ஆறு மாவட்டங்களிலும் 36 வீதமான நிலப்பரப்பு பாதிக்கப்பட்டது. பல்வேறு தரவுகளின்படி எண்பதாயிரத்து ஐந்நூற்று முப்பத்திரெண்டு வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடலில் இருந்து இருநூறு மீற்றர் எல்லைக்குள் 62949 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. சுனாமிப் பேரலையினால் அதிக உயிர் அழிவு ஏற்பட்ட மாவட்டம் அம்பாறை மாவட்டம். 12345 பேர் உயிரிழந்துள்ளனர். 2643 பேர் காணாமல் போயுள்ளனர். இரண்டையும் கூட்டிப் பார்க்குமிடத்து அம்பாறை மாவட்டத்தில் சுமார் 15000 பேரின் உயிர்களை சுனாமிப் பேரலை காவு கொண்டுள்ளது. கல்முனையில் மட்டும் 3500க்கு மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர்.

சுமார் 35,459 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 3500க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 1033 பேர் காணாமல் போயுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடி, நாவலடி, திருச்செந்தூர், முகத்துவாரம் ஆகிய இடங்களில் அதிக உயிரழிவுகள் ஏற்பட்டது. அதேபோன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரையிலும் அதிக உயிர்கள் பலியாகியிருந்தன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 3000 க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். முல்லைத்தீவு நகரையே சுனாமிப் பேரலை சுருட்டிக் கொண்டு கடலுக்குள் கொண்டு சென்று விட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 552 பேர் காணாமல் போயுள்ளனர். 1076 பேர் பலியாகியும், 337 பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் 1167 பேர் உயிரிழந்தும் 540 பேர் காணவில்லை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 30 பேர் இறந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒட்டு மொத்தத்தில் தமிழர் தாயகத்தில் சுமார் 20,000 பேர் வரை சுனாமிப் பேரலையால் பலியாகியுள்ளனர். இந்தப் பேரலையினால் சுமார் இரண்டு இலட்சம் வீடுகள் வரை பாதிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் ஒரு இலட்சம் வீடுகள் வரை முழுமையாகப் பாதிப்படைந்துள்ளன. இந்த ஒரு வருட காலத்தில் இந்த வீடுகள் மீளவும் அமைக்கப்பட்டு மக்களின் மறுவாழ்வு மீள் திரும்பியதற்கான மாற்றங்கள் எவையுமில்லை.

தமிழர் தாயகத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது இனமத பேதங்களுக்கு அப்பாற்பட்டு தமது துயர் துடைப்புப் பணியில் ஈடுபட்டது. இன்றுவரை அதன் பணி ஓய்ந்திருக்கவில்லை. இடைத்தங்கல் முகாம், தற்காலிக வீடு, நிரந்தர வீடுகள் என பணி விரிவடைந்து செல்கின்றது. அதேவேளை பன்னாட்டு தொண்டு நிறுவனங்கள், உள்நாட்டுத் தொண்டு நிறுவனங்களும் சுனாமியால் பாதிப்புற்றோருக்கு பல்வேறு புனரமைப்புப் பணிகளை மேற்கொண்ட போதும் அதனை முழுமையாக மேற்கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது. இதில் பிரதான விடயம் இடப்பெயர்வாகும். சுமார் இரண்டு இலட்சம் வீடுகள் பாதிப்படைந்த நிலையில் மக்கள் பிறிதொரு இடத்தில் இடம்பெயர்ந்து வாழ்வதென்பது ஆரோக்கிய வாழ்க்கை முறைமையாக அமையாது. அடிப்படை வசதிகள், அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இன்று மாதிரிக் கிராமங்களில் தற்காலிக வீடுகளில், கூடாரங்களில் மக்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்டாலும் கடலோரக் கிராமங்களில் சொந்தமான வீடுகளில் வாழ்ந்த அந்த இயல்பான வாழ்வு இன்னும் மக்களிடையே ஏற்படவில்லை என்பது அவர்களைச் சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்ற போது அறியக்கூடியதாகவுள்ளது.

அடுத்ததாக சுனாமிப் பேரலையின் தாக்கம் மக்களின் கல்வி நிலையை படுமோசமாகப் பாதிப்படையச் செய்துள்ளதென்றே கூறலாம். வடக்குக் கிழக்கில் சுனாமிப் பேரலையினால் 2392 மாணவர்கள் பலியாகியுள்ளனர். ஆசிரியர்கள் உட்பட கல்விசார் ஊழியர்கள் 52 பேர் உயிரிழந்துள்ளனர். 127 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. இவற்றில் 67 பாடசாலைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டன. ஒரு கணப் பொழுதில் தாயகத்தில் 2392 மாணவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டமை, பாடசாலைகள் சேதமடைந்தமை என்பன கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பாடசாலைகளில் 50 வீதமான பாடசாலைகள் கடலோரப் பகுதியில் அமைந்திருந்தன.

இவ்வாறு பாதிப்படைந்த பாடசாலைகளை பிறிதொரு இடத்தில் நிர்மானித்து கல்வியைத் தொடர்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பாடசாலைகளுக்கான காணியைப் பெறுதல், மீள அமைப்பது போன்ற விடயங்களில் இன்னும் சிக்கல் நிலை உருவாகியுள்ளது. இதற்கான தீர்வு இன்னும் கிடைக்காத காரணத்தினால் கல்வி நிலை பாதிப்படைந்துள்ளது.

**பிரவீனா**

இதில் கற்பித்தல் தவிர கற்றலிலும், உளவியல் ரீதியாக மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். கடலலை ஏற்படுத்திய பீதி, உடன் இருந்து கல்வி கற்றசக மாணவர்களைப் பிரிந்த துயரம், தாய் தந்தையரை இழந்த மாணவர்களின் ஏக்கம் என்பன கற்றலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தொழில் ரீதியாகப் பார்க்குமிடத்து சுனாமிப் பேரலை கடற்றொழிலை, மீனவர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை முழுமையாகப் பாழடித்து விட்டது.

பொத்துவில் தொடக்கம் யாழ் தீவகம் வரையிலான கடலோர மீனவர்களின் பொருளாதாரம் இந்தச் சுனாமிப் பேரலையில் முழுமையாகப் பாதிக்கப்பட்டு விட்டது. ஆயிரக் கணக்கான மீன்பிடிப் படகுகள், தோணிகள், மீன்பிடி உபகரணங்கள் போன்றவற்றையெல்லாம் சுனாமி பறித்துக் கொண்டது. அதே போன்று மீனவர் குடும்பங்களுக்கு ஏற்பட்ட உயிரழிவு, இடம் பெயர்வு என்பன இன்னும் எஞ்சியிருக்கும் மக்கள் மனங்களில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மீளவும் கடற்றொழிலை ஆரம்பிப்பதற்கு பல்வேறு தொண்டு நிறுவனங்கள் மீன்பிடிப் படகுகள், தோணிகள், மீன்பிடி உபகரணங்களை வழங்கிய போதும் இன்னும் அவ்வாறான உதவிகள் கிடைக்கப் பெறாத மீனவர்கள் ஆதங்கப்படும் நிலையும் காணப்படுகின்றது. பல மீனவர்கள் விரக்தியில் கடற்றொழிலே வேண்டாம் என்ற நிலையும் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் இவ்வாறான நபர்கள் தமது சொந்த பந்தங்களை இழந்த பரிதவிப்புத்தான் என்பது தெளிவு.

ஒட்டு மொத்தத்தில் கடற்றொழில் வழமைக்கு இன்னும் திரும்பவில்லை. மீனவர் சமூகம் இன்னும் அந்தப் பாதிப்பிலிருந்து மீளவில்லை என்பதே உண்மை. அடுத்தது சுனாமிப் பேரலை ஏற்படுத்திச் சென்ற தாக்கம், ஏக்கம் இன்னும் மக்களது அடிமனதிலிருந்து மறையவில்லை. அது உளவியல் ரீதியாக பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

குடும்பத்தை இழந்தோர், கணவனை இழந்தோர், தாயை இழந்தோர், பிஞ்சுக் குழந்தைகளை இழந்தோர் அந்த இழப்புக்கள் ஏற்படுகின்ற போது ஏற்பட்ட மரண அவலம் என்பன அவர்களது ஆழ்மனதில் இன்னும் தேங்கி நிற்கின்றன. இதில் குழந்தைகளின் பாதிப்புக்கள் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

புள்ளி விபரங்களின்படி தமிழர் தாயகத்தில் 995 சிறுவர்கள் தாய், தந்தையை இழந்துள்ளனர். 3409 சிறுவர்கள் தாய் அல்லது தந்தையை இழந்துள்ளனர். 106 சிறுவர்களைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. மொத்தம் 4500 சிறுவர்களுக்கு இன்று உளவியல் ரீதியான பாதிப்புக்களை சுனாமி ஏற்படுத்தியுள்ளது.

உளவளத்தை ஆற்றுப்படுத்தும் நிகழ்ச்சிகள் உளவியல் ரீதியான ஆலோசனைகள் என்பன முன்னெடுக்கப்பட்ட போதும் சிறார்களின் மனநிலை இன்னும் பூரணமாகத் திரும்பவில்லை என்றே கூறவேண்டும். அதுமட்டுமன்றி வளர்ந்தவர்களிடமும் இந்த உளவியல் பாதிப்புக் காணப்படுகின்றது. 'கடல் வருகின்றது' என்று ஒரு வதந்தி பரவியவுடன் மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ள முனையும் வேகம், பதைபதைப்பு அவர்கள் உளவியல் ரீதியான பாதிப்பை பரந்தளவில் சுனாமி ஏற்படுத்தியுள்ளதை அறியக் கூடியதாகவுள்ளன.

உளவியல் ரீதியான கருத்துப்படி இவ்வாறான அதிர்ச்சி மறைவதானால் இன்னும்பல வருடங்கள் செல்ல வேண்டும் எனக் கருதப்படுகின்றது. இவை தவிர மத வழிபாட்டுத் தலங்கள் பல சுனாமிப் பேரலையினால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் அவை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. ஒட்டு மொத்தத்தில் சுனாமிப் பேரலையினால் சுமார் ஒரு இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த மூன்றரை இலட்சம் மக்களை இடம்பெயர வைத்ததுடன் அதன் ஒட்டுமொத்தத் தாக்கம் தமிழர் தாயகத்திலுள்ள அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் பாதிப்படையச் செய்தது எனலாம்.

இந்த ஒருவருட காலத்தில் சிறிலங்கா அரசு அம்பாந்தோட்டை, காலி, மாத்தறையில் ஏற்பட்ட சுனாமி அழிவுகளையே முதன்மைப்படுத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு, மறுவாழ்வுத் திட்டங்களைத் தாராளமாக மேற்கொண்டு வரும் நிலையில் வடக்குக் கிழக்கு முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசத்தில் இருந்து வருகை தந்த பிரதிநிதிகளைக் கூட அதாவது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் போன்றவர்களைக்கூட தமிழீழ தேசத்தில் கால் மிதிக்காது சிங்களப் பேரினவாதம் கதவடைப்புச் செய்தது. அதே சமயம் அரச தரப்புப் பிரதிநிதிகள், அமைச்சர்கள் வழங்கிய வாக் குறுதிகள் எல்லாம் காற்றில் பறந்து விட்டது. சுனாமிப் பேரழிவிலிருந்து தமிழர், முஸ்லிம் சமூகத்தின் வாழ்வாதாரத்தை மீளமைக்க முன்வைக்கப்பட்ட சுனாமிப் பொதுக் கட்டமைப்புக்கு சிங்களப் பேரினவாதத்தினால் அழித் தொழிக்கப்பட்ட நிலையில் சுனாமிப் பேரழிவு ஓராண்டாகின்றது. அந்தப் பேரழிவு ஏற்பட்டுச் சொல்லிச் சென்ற வேதனைக் கணங்கள் இன்னும் மனித மனங்களை விட்டு மறையவில்லை என்பது உண்மை.

**01. வடக்குக் கிழக்கு இணைப்புக்கு எதிரான போக்கு. அதாவது கிழக்கை தனியாக துண்டாடுவது.**
**02. முஸ்லிம்களிடையே ஆயுதக் குழுவொன்றை உருவாக்குவது.**
**03. அவ்வாறான ஆயுதக்குழுவை தமிழ் மக்கள் மீதான வன்முறைகளுக்குப் பயன்படுத்துவது.**
**04. தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை மலினப்படுத்தும் வகையிலான கருத்துக்களைத் தெரிவிப்பது.**

# அதாவுல்லா ஆவேசமா?



தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த ஒட்டுப்படையைச் சேர்ந்த இரு இளைஞர்களும் போட்டுடைத்த இரகசியங்கள் இப்போது அதனோடு தொடர்புடையவர்களின் இரத்தத்தை உறைய வைத்திருக்கிறது. ஏன் இந்தியா கூட மறுப்பறிக்கைவிடும் அளவிற்குத் தேனக ஊடகவியலாளர் மாநாட்டு செய்திகள் சுட்டெரிக்கின்றன.

இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சேனநாயக்கா தீவுச்சேனைக்குச் சென்று தேர்தலில் பத்தாயிரம் வாக்குகளைப் பெறுவதற்காக ஒட்டுப்படையினரின் உதவியை நாடியிருந்தார் என்ற கருத்து சரணடைந்த இருவராலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இச் செய்தி ஊடகங்களில் வெளியான போது! சூட்டோடு சூடாக தான் அவ்வாறானதொரு உதவியை நாடவில்லை எனவும், தீவுச் சேனைக்குச் செல்லவில்லை எனவும் மைத்திரிபால மழும்பலாகத் தெரிவித்து நளுவிவிட்டார்.

டக்ளஸ் தேவானந்தா ஒட்டுப்படையுடன் வைத்திருக்கும் உறவு என்பது தமிழ் மக்கள் அறிந்த விடயம். எனவே டக்ளசோ அல்லது ஈ.பி.டி.பியோ எவ்வளவு தூதரம் இதனை மறுத்தாலும் இதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதற்குத் தயாரில்லை என்பது உண்மை.

கருணா இந்தியாவில் இருப்பதாகவும் சரணடைந்த இளைஞர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தனர். இது இந்தியாவின் தூதரகம் வரை நுழைந்து அப்படி கருணாவை இந்தியா வைத்திருக்கவில்லை என்று கூறுமளவிற்குத் தேனகம் ஊடகவியலாளர் மாநாடு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இவை எல்லாவற்றையும் விட அமைச்சர் அதாவுல்லா அவர்கள் தான் அளவுக்கு அதிகமாகக் கொதிப்படைந்திருக்கிறார். ஒட்டுப்படைகளுடன் உறவு கொள்ளவில்லை என அவர் கூற முனைந்தாலும் அண்மையில் சிறிலங்கா தொலைக்காட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் ஆவேசத்துடன் தெரிவித்த கருத்துக்கள் அண்மையில் அக்கரைப்பற்றில் தமிழ் பத்திரிகைகளைத் தீயிட்டுக் கொழுத்தி எரித்து அட்டகாசம் செய்தமை என்பன அவரது அரசியல் அநாகரீகத் தன்மையை வெளிப்படுத்தியது என்பது உண்மை.

01. வடக்குக் கிழக்கு இணைப்புக்கு எதிரான போக்கு. அதாவது கிழக்கை தனியாகத் துண்டாடுவது.

02. முஸ்லிம்களிடையே ஆயுதக் குழுவொன்றை உருவாக்குவது.

03. அவ்வாறான ஆயுதக்குழுவை தமிழ் மக்கள் மீதான வன்முறைகளுக்குப் பயன்படுத்துவது.

04. தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை மலினப்படுத்தும் வகையிலான கருத்துக்களை தெரிவிப்பது போன்ற விடயங்கள் அதாவுல்லாவின் ஆழ்மனதில் உறைந்து கிடப்பதானது ஒட்டுபடைகளுடன் அமைச்சர் கொண்டிருக்கும் உறவினை நிரூபித்துக் காட்டுகின்றது.

இனி ஒவ்வொரு விடயத்தையும் சற்று ஆராய்வோம்.

வடக்குக் கிழக்கு என்பது தமிழ் பேசும் சமூகத்தின் தாயகம். இதில் எவ்வித மாற்றமுமில்லை. நிலத்தால், மொழியால் பாரம்பரியமாக இணைந்த இந்தப் பூமியைக் கூறுபோட்டு சிறுபான்மை இனங்களை சிறுமைப்படுத்த அரச பேரினவாதம் மேற் கொண்ட பல்வேறு முயற்சிகள், சதித்திட்டங்கள் என்பன முறியடிக்கப்பட்டன. இது வரலாறு உணர்த்தும் உண்மை. இவ்வாறு தாயகத்தை கூறாக்குவதற்கு முளைவிட்ட சக்திகள் கூட இன்று இருந்த இடம் தெரியாமல் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா பிரதேசவாதத்தைக் கிழப்பி வடக்கு கிழக்கை கூறுபோட எத்தனித்த சதிகூட தேசியத் தலைமை மீது தமிழினம் கொண்டிருக்கும் அதீத பற்றுறுதியினால் நிர்மூலம் செய்யப்பட்டது யாவரும் அறிந்த விடயம்.

**எஸ்.கே**

இவ்வாறு மக்களால் ஓரங்கட்டப்பட்ட கருணாவின் பெயரை கருணாகுழு என வெளிக்காட்ட நினைக்கும் படைப்புலனாய்வுப் பிரிவுடன் இயங்கும் ஒட்டுபடை என்பன படை ஆக்கிரமிப்புப் பகுதிகளில் பிரதேச வாதத்தைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு பயனளிக்காத நிலையில் இதே பிரதேச வாதத்தை நோக்காகக் கொண்டும் கிழக்கைப் பிரிப்பதற்கான கருத்துக்களைத் தெரிவித்து வரும் அமைச்சர் அதாவுல்லா ஒட்டுபடையுடன் உறவு தொடர்பு வைத்திருக்காமல் இருந்திருப்பாரா?

இவ்வாறான ஆயுதக் குழுவுடன் இணைந்திருப்பது கிழக்கைப் பிரிப்பதற்கு பலம் என அமைச்சர் கருதி செயற்பட்டிருப்பதற்கான ஆதாரமாகவே கருத வேண்டியுள்ளது.

அடுத்த விடயம்:- முஸ்லிம்களிடையே ஆயுதக்குழுவை உருவாக்குவது என்ற கருத்து ஆகும். முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல்கள் தொடரும் பட்சத்தில் நிச்சயம் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவார்கள் என அமைச்சர் அதாவுல்லா தெரிவித்திருக்கின்றார். இவரது கருத்தில் இருந்து அமைச்சரின் பின்பலத்தில் ஒரு ஆயுதக்குழுவை இயக்குவதான ஒரு ஆசை வளர்ந்து நிற்கின்றது. இந்த முஸ்லிம் ஆயுதக் குழுவுக்கான பலமாக இந்த ஒட்டுபடை இருக்கிறது என்பதும் இக்கருத்துக்களிலிருந்து தெரிகிறது. முஸ்லிம்கள் இன்று உலக நாடுகள் பலவற்றில் விடுதலைக்காகப் போராடுகின்ற இனமாக அடையாளப்பட்டு நிற்கின்றதென்பது உண்மை. இலங்கையைப் பொறுத்தமட்டில் அவர்களின் இனவிடுதலை தமிழினத்துடன் ஒட்டி நிற்கின்றது.

தமிழினம் விடுதலை அடையும் போது சமபங்களவில் முஸ்லிம் இனமும் தமது மொழி கலாசாரங்களைத் தனித்துவமாகப் பேணுகின்ற வகையிலான அபிலாசைகளைப் பூர்த்தியாக்கின்ற வகையிலான அதிகாரப் பகிர்வினை பெறுவர். இதில் விடுதலைப் புலிகளும், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடமும் உறுதியாக இருக்கின்றனர்.

இவ்வாறான ஒரு நிலையில் முஸ்லிம் இனம் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறானதொரு ஆயுதப் போராட்டம் என்பது தமிழினத்திற்கு எதிரானதாக அமையுமிடத்து அது இன வன்முறைகளையே உருவாக்குவதுடன் சிங்களப் பேரினவாதமே நன்மையடையும்.

இதற்கான ஒரு முயற்சியினையே இப்போது அமைச்சர் அதாவுல்லா ஏற்படுத்த முனைகின்றார். முஸ்லிம்களிடையே ஆயுதக்குழு உருவாவதானது சிறிலங்கா அரசின் பின்புலத்திலேயே இயங்க வேண்டும். படைதரப்பின் அனுமதி அல்லது அரச அங்கீகாரமின்றி முஸ்லிம் பிரதே சத்துக்குள் ஒரு ஆயுதக்குழுவை உருவாக்குவது கடினமானது. இவ்வாறு தமிழ் மக்கள் மீது அவர்கள் ஏவிவிடப்படுமிடத்து அது நிச்சயம் அரச துணையுடன் இயங்கும் ஆயுதக்குழுவாகவே கருதவேண்டியிருக்கும். இது இன அழிவுகளுக்கே வழிவகுக்கும்.

அதேவேளை கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக நீண்டதொரு விடுதலைப் போராட்டத்தை நடத்தி சிறிலங்கா அரசையே கதிகலங்கச் செய்யும் வகையில் வளர்ச்சியுற்றிருக்கும் விடுதலைப் போராட்டத்தை அதாவுல்லா ஆசைப்படுவது போல் உருவாகும் ஆயுததாரிகள் எவ்வாறு எதிர் கொள்ளப்போகின்றனர் என்பது மற்றொரு கேள்வி.

இதேவேளை தமிழின விடுதலைப் போராட்ட இலட்சியத்தை எந்த ஒரு சக்தியும் விலைபேசி விட முடியாது. ஒட்டு மொத்த தமிழினத்தின் பலமே விடுதலைப் போராட்டமாகும். ஆனால் பணம் இருந்தால் மட்டும் போதும் என அமைச்சர் கூறியிருப்பது தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையேயான உறவைச் சீர்குலைக்கின்ற பொறுப்பற்ற வார்த்தைகளாகும்.

இதேவேளை இன்னும் ஒரு விடயத்தையும் இங்கு பார்ப்போம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் கொலை நடந்தது எப்போது? அதில் சிங்கள அரசியல் கட்சிகளின் சதி என விடயங்கள் அம்பலமாகியுள்ள நிலையில், அமைச்சர் அவர்கள் விடுதலைப்புலிகள் மீது பழிபோடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

ஒட்டு மொத்தத்தில் கிழக்கை துண்டாடுவதற்கும் முஸ்லிம் தமிழ் உறவை பிரிப்பதற்கான ஆயுதக்குழு ஒன்றை உருவாக்கும் முயற்சி செய்கின்றார் என்பது சந்தேகத்துக்கிடமின்றி தெளிவாகத் தெரிகின்றது.

ஒட்டுப்படையிலிருந்து விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த இரு இளைஞர்களும் அம்பலமாக்கிய விடயங்கள் ஊடகங்களில் வெளிவந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாதவராய் அவரது ஆதரவாளர்கள் எனக் கூறும் சிலர் கடந்த வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்று பள்ளிவாயலுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்திருந்ததுடன் தினக்குரல், சுடர் ஒளி நாள் இதழ்களையும் தீமூட்டி எரித்து ஆத்திரம் தீத்திருந்தனர்.

உண்மையில் இது கண்டிக்க வேண்டிய விடயம். கருத்துக்களை கருத்துக்களால் எதிர்க்க வேண்டும். அவ்வாறு இல்லாமால் ஊடகங்கள் மீது ஆவேசம் கொள்வது ஜனநாயக பண்பாகாது. தமிழ் முஸ்லிம் சமூகமானது பிட்டும் தேங்காய் பூவும் போன்றவர்கள். வடக்குக் கிழக்கு இணைந்த தாயகத்தில் இரு சமூகங்களின் ஒற்றுமை, ஐக்கியம் அவசியமானது.

அண்மையில் கிழக்கில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது காத்தான்குடி அனைத்து பள்ளிவாயல்கள் சம்மேளனம் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுக்கு எழுதிய மடல் தமிழின விடுதலைப் போராட்டம் மீதும், தேசியத் தலைவர் மீதும் முஸ்லிம் சமூகம் கொண்டிருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடு. இதேவேளை மூதூர், தோப்பூர் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அப்பிரதேச முஸ்லிம் பிரமுகர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கு, மிடையில் உடன்பாடு எட்டப்பட்டது.

இவ்வாறு இனஐக்கியம் வலுவுறும் நிலையில் தமிழ் முஸ்லிம் சமூகங்களிடையிலான ஒற்றுமையைச் சீர்குலைக்கும் சக்திகளை இனங்காண்பதுடன் அவ்வாறானவர்களின் நோக்கத்திற்கும் துணை போகாமல் இரு சமூகமும் ஒன்றுபட்டு வாழ்வதற்காக இணைந்திருப்பது அவசியம்.

**“வடக்குக் கிழக்கு என்பது தமிழ் பேசும் சமூகத்தின் தாயகம். இதில் எவ்வித மாற்றமுமில்லை. நிலத்தால், மொழியால் பாரம்பரியமாக இணைந்த இந்தப் பூமியைக் கூறுபோட்டு சிறுபான்மை இனங்களை சிறுமைப்படுத்த அரச பேரினவாதம் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகள் சதித்திட்டங்கள் என்பன முறியடிக்கப்பட்டன. இது வரலாறு உணர்த்தும் உண்மை. இவ்வாறு தாயகத்தை கூறாக்குவதற்கு முளைவிட்ட சக்திகள்கூட இன்று இருந்த இடம் தெரியாமல் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.**




11

# தம்பி ஜெயத்திற்கு.......



**மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆணிவேராக இருந்தவர் உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன். தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுத்ததிலும் இவருக்குப் பெரும் பங்குண்டு. அதுபோலவே இவரது இல்லம், குடும்பத்தினர் எல்லாமே. அவர்களின் தொடர்புகள் மூலமே மெல்ல மெல்ல உறுதியாக மட்டு - அம்பாறையில் வேர்விடத் தொடங்கியது. இந்த விடுதலை விருட்சம். காசியானந்தனை விடுத்து தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சொல்ல முடியாது. அந்தவகையில் வீரச்சாவடைந்த தனது தம்பி மேஜர் வள்ளுவன்/ஜெயம் (காத்தமுத்து சிவஜெயம்) அவர்களை நினைத்து செப்டெம்பர் 89 அண்ணன் காசியானந்தன் அவர்கள் எழுதிய ''தம்பி ஜெயத்திற்கு................" என்ற நூலைத்தொடராக அளிக்கின்றோம். காலத்தின் தேவை கருதி - அடுத்த தலைமுறையினருக்கு போராட்டத்தின் உருவாக்கம் குறித்த சில மனப்பதிவுகளை ஏற்படுத்த இந்நூல் உதவும்.**

வீட்டில் நான் இல்லை என்று தெரிந்ததும் அவர்கள் சினந்து விழுந்தார்கள்.

படைக்கும்பல் இன்பத்தைத் தேடிப்பாய்ந்தது. அவன் யார் என்பது தெரியாமலேயே அவன் தாக்கப்பட்டான்.

நானும் நீயும் எங்கே என்று கேட்டு அவனை யாரோ நம் உறவினர் என்ற நினைவில் ஏறிமிதித்து விட்டு நகர்ந்தார்கள்.

பின்பு - யாழ்ப்பாணத்தில் சிங்கள வெறிப் படையால் கொடுமையாகக் கொல்லப்பட்ட இன்பம் - அன்று அடையாளம் காணப்பட்டதால் உயிர்பிழைத்தான்.

நீ -

அந்த நாட்களில் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் அயர்வின்றிச் சுழன்றாய்.

தீவிரவாதிகளைத் திரட்டினாய் - தமிழீழ மண்ணில் சிங்களர் குடியேற்றத்தைத் தடுக்கப் பாடுபட்டாய் - சிங்களப் பகுதிகளில் இருந்து அடி உதை வெட்டுக்கு இலக்காகி - இரத்தம் தோய்ந்து தமிழீழ மண்ணுக்கு ஓடிவந்த அகதிகளைத் தாங்கினாய்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தேட விழைந்தாய்.

தலைவர் பிரபாகரனோடு நான் தமிழ்நாடு சென்று மட்டக்களப்புக்குத் திரும்பியிருந்த நாட்க்களில் ஒரு நிகழ்வு.

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மலையகத் தமிழ் அகதிகள் உறவினர்களைச் சிங்கள வெறிக்குப் பழி கொடுத்தவர்களாய் கண்ணீரோடும், இரத்தத்தோடும் மண்டூர் கிராமத்தில் வந்திறங்கினர்.

நீ-

மூட்டை மூட்டையாக அரிசி, சீனி, மாவு, உடைகள், பால்மா, உணவு, கீரை, காய்கறிகள், கருவாடு பாத்திரங்கள் இப்படியெல்லாம் ஊரில் சேர்த்து மண்டூர் அகதிகளுக்கு எடுத்துச்செல்ல முனைந்தாய்.

ஆனால் -

மட்டக்களப்பில் இருந்து இருபதுகல் தொலைவில் உள்ள மண்டூர் கிராமத்துக்குச் செல்லும் வழியில் சிங்களப்படை வெறிகள் அகதிகளுக்குப் பொருள் ஏற்றிச்செல்லும் வண்டிகளைத் தடுத்து அந்தப் பொருட்களைத் தங்கள் முகாம்களுக்குப் பறித்துச்செல்லும் மனிதாபிமானமற்ற கொடுமை அன்று நிகழ்ந்து கொண்டிருந்தது.

இந்த நிலையில்-

பொருட்க்களை எப்படிக் கொண்டு சேர்ப்பது என்று எவருக்குமே புரியவில்லை. அந்தச் சுவரொட்டியில் என்புகைப் படமும் வெளியாகியிருந்தது. என்னுடைய தலைக்கும் சிங்கள ஆட்சியாளர் இருபத்தையாயிரம் ரூபா விலை வைத்திருந்தார்கள்.

மட்டக்களப்பில்-

நானும் என் தம்பி போலவே என்னோடு பழகிய

## கவிஞர் காசியானந்தன்

நண்பர் நடேசானந்தமும் கைதானோம்.

வெலிக்கடைக் கடற்படை முகாமில் முட்கம்பி வேலிகளின் பின்னால் அரசு எங்களைத் தள்ளிற்று.

இன்னும் சில இளைஞர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கைதிகளாக வந்து வெலிக்கடைச்சிறை கடற்படைமுகாமில் எங்களோடு இணைந்தார்கள்


அந்தக்காலத்தில் -

எங்கே எந்த வன்முறை வெடித்தாலும் சிங்கள அரசு என்னைத்தான் முதல் எதிரியாகக் கணித்தது. நான்தான் அவர்கள் கண்களை உறுத்திக் கொண்டிருந்தேன்.

சிங்களப் படைமுகாம் ஒன்றில் பயிற்சி பெறும்படை வீரர்களுக்கும் குறிபார்த்துச்சுடப் பழகுவதற்காக என்னுடைய தாடியோடு கூடிய முகம் வரையப்பட்ட தட்டிகளையே வைக்கிறார்கள் என்று ஒரு சேதி கூட அந்த நாளில் சுதந்திரம் வார இதழில் வெளியாகியிருந்தது.

வெலிக்கடைக் கடற்படை முகாமில் ஒரு திங்கள் சிறைவாசம் இருந்து வெளியே வருகிறேன்.

இதேயாண்டுதான் -



நமது தலைவர் பிரபாகரன் கியூபாவில் நடைபெற்ற உலக இளைஞர் விழாவுக்கு என்னையும் ஏனைய நான்கு இளைஞர்களையும் அனுப்பிவைத்தார்.

பதிவுசெய்யப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி இளைஞர் பேரவையின் பெயரை எங்கள் பயணத்துக்கு பயன்படுத்திக் கொண்டோம்.

72. நாடுகளில் இருந்து பன்னிரண்டாயிரம் போராளர்கள் கியூபாவின் தலைநகரில் கலந்து கொண்ட இவ்விழாவில் தமிழீழ விடுதலைப்போர் பற்றியும், விடுதலைப் புலிகளின் புரட்சிகரமான பங்களிப்பு பற்றியும் எடுத்தியம்பினேன்.

அதுமட்டுமல்ல -

இதேயாண்டுதான் 1978 செப்ரெம்பரில் மட்டுநகர் வீதிகளில் ஆட்சியாளர்களுக்கு எதிரான துண்டறிக்கை ஒன்றை வழங்கிக் கொண்டிருந்த போது காவல்த்துறையினர் திரும்பவும் என்னைக் கைதுசெய்தார்கள்.

முதல் நாள் மட்டக்களப்பில் பள்ளிக்கூட மாணவர் பேரூந்து ஒன்றில் யாரோ சில இளைஞர்கள் வெடிகுண்டு வைத்த நிகழ்வுக்கும் எனக்கும் தொடர்பு உண்டு என்று முரட்டுத்தனமாக உளவுத்துறை கூறிற்று.

போகம்பரைச் சிறைச்சாலையில் தள்ளப்படுகிறேன்.

பிற்காலத்தில் மட்டக்களப்பில் சிவகுமாரன் என்று மக்களால் அழைக்கப்பட்ட இளைஞன் குண்டுவீச்சு நிகழ்வொன்றில் காவல்துறையிடம் சிக்கிவிடக் கூடாது என்பதால் மட்டுநகர் உப்பேரியில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டான்.

மாணவன் பெஞ்சமிண் அன்று கைதான இளைஞர்களில் ஒருவனாய் கண்டி போகம்பரை சிறைச்சாலையில் என்னோடு இருந்தான்.

மட்டக்களப்பு மண்ணில் நெஞ்சை உருக்கிய முதல் மரணம் பெஞ்சமினுடையது.

(தொடரும்.............)

# எப்போது விடியும் என் இரவு?

வெளியே.........
பனித்துளிகள் இலைத் துளிர்களில்
பட்டுத் தெறிக்கின்றன.

என் உள்ளேயோ.........
ஆறாத பெரும் தணலின் வெப்பம்,
அணுவணுவாய் என்னைத் தீய்க்க,
வெந்து உருகுகிறேன் நித்தமும்........
எப்போது விடியும் என் இரவு?

இந்த நான்கு சுவர்களுக்குள்
சிலுவை சுமப்பது நான் மட்டுமல்ல
ஆணியிலறையப்பட்ட
என் உணர்வுகளும் தான்.......
எப்போது விடியும் என் இரவு?

மாற்றமெதுவுமின்றிப் புலரும் காலைகளும்,
தோலைத் துளைத்து
உயிரைச் சில்லிட வைக்கும்
கொடும் பனியினூடு நகரும்
எனது இரை தேடும் பயணமும்...
எப்போது விடியும் என் இரவு?

நினைவில் வந்து நிழலாடும் ~ என்
வயோதிப அன்னையும்
மணமாலைக்காய் காத்திருக்கும்
முதிர்க்கன்னியரான சகோதரியரும்.....
நட்சத்திரங்களை வீட்டினுள்
இருந்தவாறே எண்ணவல்ல ~ எம்
மாற்ற முடியாத வறுமையும்........

நித்தமும் வேகுகிறேன்
வெந்துடல் நோக்கின்றேன்.........
எப்போது விடியும் என் இரவு?

**செந்தணல்.**

# பாங்கொக் ஆசிய சுனாமி மாநாட்டில்

# கவனத்தையீர்த்த ஆசிரியர் பிரச்சினை

பாங்கொக்கில் நடைபெற்ற ஆசியப் பிராந்திய சுனாமி மாநாட்டில் ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர்களின் பிரச்சினைகள் அதிக முக்கியத்துவம் பெற்றன.

ஜப்பான் ஆசிரியர் சங்கம் கடந்த வாரம் தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் அம்பாசிடர் விடுதியில் இம்மாநாட்டை நடாத்தியது.

ஆசியாவில் உள்ள 21 நாடுகளின் 27 ஆசிரியர் சங்கங்களைச் சேர்ந்த 100 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

சர்வதேசக் கல்வியகத்தில் இணைக்கப்பட்ட ஆசிரியர் சங்கப் பிரதிநிதி கலந்து கொண்டனர். சர்வதேச கல்வியகத்தின் இலங்கைக்கான இணைப்பாளர் பஷில் சில்வா தலைமையில் 7 பிரதிநிதிகள் இலங்கையின் சார்பில் சமூகமளித்திருந்தனர்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரசார செயலாளர் வி.ரி சகாதேவராஜா சிறுபான்மையினம் சார்பில் பங்கு பற்றியிருந்தார். பாதிக்கப்பட்ட இரு ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

யாழ். தென்மராட்சியைச் சேர்ந்த குணரட்ணம் ஜெயசுதன் எனும் ஆசிரியரும், களுத்துறையைச் சேர்ந்த திருமதி லக்ஷ்மி ராஜகருணா எனும் ஆசிரியையும் தமது சுனாமி அனுபவங்களை உணர்வு பூர்வமாக எடுத்துக் கூறினார்கள். யாழ். தென்மராட்சியைச் சேர்ந்த கு.ஜெயசுதன் தனது மனைவி (சட்டத்தரணி சிவமதி)யை சுனாமியில் பறிகொடுத்தவர். கோப்பாய் அரச ஆசிரியர் கலாசாலையில் பயிலும் இவர் தனது அனுபவத்தைக் கூறினார்.

ராஜகருணா லக்ஷ்மி தனது கணவர் மற்றும் பிள்ளையைச் சுனாமியில் பறிகொடுத்தவர். அவர் அழுதழுது தனது அனுபவத்தைக் கூறினார். இதன் போது, மாநாட்டில் கலந்து கொண்டோர் மிகவும் சோகமான நிலையில் உணர்ச்சிவசப் பட்டனர்.

மேலும் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி வி.ரி.சகா தேவராஜாவின் 08 பக்கத் தரவுகளுடனான சுனாமி அறிக்கை சர்வதேசக் கல்வி ஆசியப் பிராந்திய இணைப்பாளர் அலோசியஸ் மத்தியூசிடம் வாசித்துக் கையளிக்கப்பட்டது. இவை மாநாட்டில் இலங்கை தொடர்பாகப் பாரிய கவனத்தை ஈர்த்தது. சில உதவிகள் கிடைக்கவும் வகை செய்தது. ஜப்பானிய உளவியலாளர் யசாகினால் 5 நிமிட நேர ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் நடாத்தப்பட்டது. இப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்பட்டால் சுனாமியை விட மிக மோசமான அழிவு எதிர்நோக்கப்படலாம்.

எனவே இங்கு சமூகமளித்துள்ள சர்வதேச சமூகம் இலங்கை அரசிற்குப் போதிய அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு ஆசியப் பிராந்திய சுனாமி மாநாட்டில் அறிக்கை சமர்ப்பித்து உரையாற்றிய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி வி.ரி.சகாதேவராஜா வேண்டுகோள் விடுத்தார். தாய்லாந்து, பாங்கொக் அம்பாஸிடர் விடுதியில் நடைபெற்ற மாநாட்டில் அவர் மேலும் பேசுகையில் "ஆழிப் பேரலை அனர்த்தத்தில் இலங்கையும், இந்தோனேசியாவும் கணிசமானளவு பாதிப்பைச் சந்தித்துள்ளன. குறிப்பாக இலங்கையில் 30 ஆயிரம் பேர் மரணித்துள்ளனர்."

வட - கிழக்கில் மட்டும் 37 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் பலியாகியுள்ளனர். அவர்களது பின்னுருத்தாளிகளுக்கு இதுவரை 11 மாதங்களாகியும் மாதாந்த வேதனம் எதுவும் வழங்கப்படாதது வேதனைக்குரியது.

இலங்கையில் 176 பாடசாலைகள் பாதிக்கப்பட்டன. 261 பாடசாலைகள் நலன்புரி நிலையங்களாக இயங்கின. வட - கிழக்கில் பாதிக்கப்பட்ட 72 பாடசாலைகளில் இதுவரை ஒரு பாடசாலைகூட நிருமாணித்து முடிக்கப்படவில்லை. இதே போன்று நிரந்தர வீட்டின் நிலைமையும் தாமதமாகிக் கொண்டே செல்கின்றது.

ஆசிரியர்களுக்கான கடன் திட்டம் கூட வழங்கப்படவில்லை. ஏனையோருக்கு வழங்கப்பட்ட நிவாரணங்களை விட ஆசிரியர் சமூகத்திற்கென புறம்பான எந்த உதவியும் இதுவரை வழங்கப்படவில்லை.

கடந்த ஜனவரியிலிருந்து கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. சுனாமி நிவாரண விசேட கொடுப்பனவு 5000 ரூபா பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இரு மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளன.

மொத்தத்தில் பலியான அல்லது பாதிக்கப்பட்ட ஆசிரியர்களது வாழ்க்கையில் புதிய அத்தியாயம் எழுதப்படுவதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத

**- வி.ரி.சகாதேவராஜா -**

நிலையே இருந்து வருகின்றது. சர்வதேசக் கல்வியகம் இலங்கை ஆசிரியர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்றார். இவர் சமர்ப்பித்த அறிக்கையில் பல்வேறு தரவுகள் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு அங்காடி வியாபாரக் கடைகளிலும் பெண்களின் ஆதிக்கமே அதிகம். நாம் ஏதாவது ஒரு பொருளுக்கு விலை கேட்டால் அவர்கள் கல்குலேட்டரில் உரிய விலையை அடித்துக் காட்டுவார்கள். பதிலுக்கு நாம் குறைந்த விலையை தட்டிக்காட்டினால் பொருந்தினால் தருவார்கள். இன்றேல் " Can't" என்று மறுப்பார்கள்.

அங்காடி வியாபாரக் கடைகளின் நடுவே நீலப் படங்களில் இறுவட்டுகள் பகிரங்கமாகத் தாராளமாகப் பெண்களால் விற்பனை செய்யப்படுகின்றது. நீலப் படங்களின் படங்கள் வீதியால் செல்வோரைத் தூண்டி இழுக்கும்.

இதற்கும் மேலாக "மாஸாஜிங் சென்ரர்" என்ற நிலையமும் உள்ளது. ஒரு மணி நேர சேவைக்கு 1000 பாத். அதாவது எமது நாணயத்தில் 2500 ரூபா ஆகும். அங்கும் பெண்களே சேவையில் ஈடுபடுகின்றனர். இதற்கும் அப்பால் இரவு வேளைகளில் வீதிகளில் இரவு ராணிகள் பரவலாகப் பகிரங்கமாக வலம் வருகின்றார்கள். அங்கு அதற்கு சட்ட ரீதியான தடையில்லையென்றே கூறப்படுகின்றது.

சில வேளைகளில் தனியாக வரும் ஆண்களை வலிந்து இழுப்பதையும் காணக் கூடியதாக இருந்தது. விருப்பமானால் மட்டுமே அழைப்பை ஏற்கின்றார்கள். மேலும் அவர்களது உணவு வகைகள் முற்றிலும் வித்தியாசமானது. சோறு, பாண், மீன்கறிகளைக் காண்பதென்பது அபூர்வம்.

அங்கு நாணயம் பாத் (Baht) என்பதாகும். எமது நாணயத்தின் இரண்டரை மடங்கு பெறுமதி அது.

பாங்கொக்கில் அன்றாடம் நடைபெறும் கருமங்களில் 90 வீதம் பெண்களே பங்கெடுத்துக் கொள்வதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. நாம் விமான நிலையத்தில் இருந்து அமர்வு இடம்பெற்ற அம்பாஸிடர் விடுதி வரை சென்ற வான் சாரதியும் ஒரு இளம் பெண்தான்.

நெடுஞ்சாலை (Highway) என்று சற்று உயரத்தால் பாதையொன்று உள்ளது. அப்பாதையைப் பயன்படுத்துவோர் ஒரு குறிப்பிட்ட கட்டணத்தை 20 கிலோமீற்றருக்கு ஒருதடவை கட்ட வேண்டும். ஒரே தடவையில் அருகருகாக ஐந்து வாகனங்கள் 100 மீற்றர் வேகத்திற்கும் அதிகமாகச் செல்லக்கூடாது.

ஏனைய கீழ்ப்பாதைகளும் தரமாக அமைக்கப்பட்டுள்ளது. பெரிய பஸ்களைக் கூட பெண்களே செலுத்துகின்றனர். வளைவாக உயர்ந்த பலமாடிக்கட்டடங்களின் நிருவாகமும் பாரிய சந்தையில் இருக்கும் விற்பனையாளர்களும் பெண்களே. அவர்களது மொழி "தாய்" ஆகும். இன்னிசையுடன் கூடிய மென்மையான மொழியாக உள்ளது. ஆசியப் பிராந்திய பிரதம இணைப்பாளர் அலோசியஸ் மத்தியூஸ் கூறுகையில்:-

ஆழிப்பேரலையால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையிலும், ஆச்சேயிலும் 40 பாடசாலைகளை எமது சர்வதேசக் கல்வியகம் மீளக் கட்டுகின்றது. ஆச்சேயில் 5000 ஆசிரியர்கள் இருந்தார்கள். சுனாமியில் 2300 ஆசிரியர்கள் பலியானார்கள்.

1662 பாடசாலைகள் அழிக்கப்பட்டன. நாம் தலையிட்டதன் பேரில் ஆச்சே நிருவாகம் ஜனவரியில் 552 ஆசிரியர்களை நியமித்தது. நாம் விரைவில் 2000 புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளோம் என்றார்.

ஜப்பானிய நிபுணர்களான சதோஷி தகாஷி, யோஷிகி தொமினகா ஆகியோர் சுனாமியின் பின்பு உளவள ஆலோசனை சேவையின் முக்கியத்துவம் பற்றி விபரித்தனர். ஒவ்வொரு நாட்டினதும் அனர்த்த விளைவு, மீள் கட்டுமானம் தொடர்பாக ஒவ்வொருவரும் உரையாற்றினர்.

அனர்த்தத்தின் பின்பு ஆசிரியர்களின் ரடிபங்கு பற்றி கன்டா, சுஜிசுவா ஆகியோர் சிறப்பான சமர்ப்பணம் செய்தனர். இலங்கையின் பஷில்டிசில்வா, அஞ்சலா, விஜேசிங்க, ஜெயபாலதாசன் ஆகியோரும் பூரண ஒத்துழைப்பை வழங்கினர். யப்பான் செயலாளர் யசுராதக்கமுரா நன்றி கூறினார். பயனுள்ள ஒரு மாநாட்டில் கலந்து கொண்ட திருப்தியில் நாடு திரும்பினோம்.




## உங்கள் குரலும் தேசியத்திற்காய் ஒலிக்கட்டும்



ஆறுமுகனுக்கு!

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையப் போகின்றன. மலையகம் வடக்குக் கிழக்கு என்ற வேறுபாடுகள் அற்று தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படுவது எதிர்காலத்தில் முற்போக்கான செயல் வடிவத்தைக் கொடுக்கும் எனத் தமிழினம் கருதுகின்றது.

சிங்களப் பேரினவாதத்திடம் கையேந்தி அமைச்சுப் பதவிகளையோ, அல்லது அரச சலுகை, சுக போகங்களை அனுபவிப்பதால் தமிழர் தாயகத்தின் உரிமைகள் கிடைத்து விடப் போவதில்லை. இதில் தமிழினம் உறுதியாக இருக்கின்றது.

எனினும் கடந்த அரசியல் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கையில் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பல்வேறு வடிவங்களில் புகுந்து விளையாடி ஆளும் தரப்புகள் கைப்பற்றி வைத்திருந்ததை வரலாறு காட்டுகின்றது.

எனினும் தென்னிலங்கையின் அபிவிருத்தியுடன் ஒப்பிடும் போது பேரினவாத அரசுகளால் மலையகத் தமிழினத்தின் அடிப்படை வசதிகள் தாராளமாகத் தீர்த்து வைக்கப்படவில்லை.

இன்னும் முதுகு வலிக்க கொழுந்து பறிக்கும் பெண்களின் வியர்வை, கண்ணீர் அவர்களது லயன் காம்பிராக்களின் வாழ்க்கை என அவலங்கள் தொடர்கின்றன. கல்வியில் கூட இன்னும் பின்தங்கிய நிலையில் மலையகம் காணப்படுகின்றது.

எனவே சிங்களப் பேரினவாதம் சிம்மாசனம் ஏற உங்கள் பிரதிநிதித்துவத்தை வழங்குவதனால் மலையக மக்களுக்கு விமோசனம் கிடைத்து விடுமோ? எனவே இப்பொது உங்கள் தீர்மானம் நல்லதாகத் தெரிகின்றது.

தமிழர் தாயகத்தின் தமிழர் தேசியத்தை வலியுறுத்தும் தமிழ்க் கூட்டமைப்புடன் உங்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைவது, இது போன்று மலையக மக்கள் முன்னணி போன்ற கட்சிகளும் இணைவது எதிர்காலத்தில் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பலம் பொருந்தியதாக இருக்கும்.

சிங்கள தேசத்தின் இனவாதக் கட்சிகளின் பலத்தினைத் தமிழ்க் கட்சிகளின் ஒன்று பட்ட பலம் கேள்விக் குறியாக்கி விடும் என்பது உண்மை. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பியும், ஐ.தே.கட்சி போன்ற சிறுபான்மைக் கட்சிகளின் துணையுடன் செங்கம்பங்களில் பவனிவந்த தலைமைகளுக்கு அப்போதுதான் சாட்டையடி விழுந்து விட்டது என உணர்வார்கள்.

ஒன்றிணைந்த கட்சிகளின் கூட்டைப் பிரிப்பதற்குக் கூட சிங்களப் பேரினவாதம் இனித் திட்டமிட லாம். மீண்டும் உங்களுக்கு அதிகாரங்கள், அமைச்சுப் பதவிகள், கை நிறையச் சலுகைகள் வாருங்கள் எங்களுடன் எனக் கூவி அழைப்பார்கள்.

அவதானத்துடன் இருந்தால் தமிழினம் பலமும், வலிமையும் பெற்றிருப்பதைச் சிதைக்க முடியாது. அல்லது மீண்டுமொருமுறை யானை, அல்லது கை, கதிரை என கட்சி தாவுவதும் தற்போதுள்ள ஒற்றுமை என்பதன் அர்த்தத்தைச் சரித்து விடும்.

எனவே அமைச்சுப் பதவி, அரசியல் சலுகை என்ற பேரப் பேச்சுகளுக்குள் சிக்குண்டு போகாமல் வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு உரமூட்டுங்கள். தமிழர் தாயகம் தமிழ் மக்களின் தலைமைத்துவம் ஒரு போதும் மலையகத்தைக் கை விடாது. எனவே உங்கள் குரலும் தேசியத்திற்காய் ஒலிக்கட்டும் என்று கூறி மடலை நிறைவு செய்கின்றேன்.

இங்ஙனம்,

ஈழமகன்.

# மகளிர் மகுடம்



## பேசுபவரின் நட்பைப் பலப்படுத்த

பிறர் பேசும் பொழுது உங்களுடைய முகத்தில் லேசான புன்னகையைத் தவழ விடுவதனால் பேசுபவரின் ஆர்வம் ஆதிகமாகும். உங்கள் கண்கள் பேசுபவர்களை நோக்கியே இருக்க வேண்டும். தலையைச் சொறிதல், விரல்களைச் சொடுக்குதல், கொட்டாவி விடுதல் போன்றவைகளைச் செய்யக் கூடாது.

பேசுவதைக் கவனிக்க முடி



யா விட்டால் கவனிப்பது போல நடிக்கக் கூடாது. இயலாமையை மென்மையாக வெளிப்படுத்தி பின்பு வந்து பார்க்கும்படி கூறி அனுப்ப வேண்டும். அவர்கள் கூற விரும்பாத விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டக் கூடாது. அவர்களுடைய வாயிலிருந்து வார்த்தைகளை வலுக்கட்டாயமாக வரவைக்க வேண்டாம். அவர்களாகவே பேசி முடிக்கும் வரை பொறுமையாக இருக்க வேண்டும்.

பிறர் பேசுவதைப் புரிந்து கொண்டால் அதன் வெளிப்பாட்டை முகத்தில், உடல் அசைவுகளில் தெரியப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் பேசுபவர்கள் தொடர்ந்து பேச இயலும். கண்டிப்பாக ஏதாவது ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லியே ஆக வேண்டும் என்று நினைத்து பொருத்தமற்ற வார்த்தைகளை. உறுதி மொழிகளைப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும். பிறர் பேசிக் கொண்டிருக்கும் போது இடையிடையே அர்த்தமற்ற குறுக்குக் கேள்விகள் கேட்பதையும், பேசுபவரின் நடையுடை பாவனைகள் பற்றிக் கேலி செய்வதையும் விட்டு விட வேண்டும்.

பேசுபவர் சொல்லி முடிப்பதற்குள் அரைகுறையாகப் புரிந்து கொண்டு குறுக்கே தலையிட்டுக் கேள்விகளைக் கேட்காமல் இருப்பது நல்லது. அவர் பேச வருவதைப் புரிந்து கொண்டாலும் கூட தடையின்றிப் பேச விட வேண்டும்.

வாய் திறந்து பேசுவது மட்டுமன்றி பேசுபவர்களது உடல் அசைவுகளையும் அவர்கள் எழுப்பும் சிறு ஒலிகளையும் புரிந்து கொள்ள வேண்டும். எனவே சகோதரிகளே மேற் கூறிய சில வழிமுறைகளை மனதில் கொண்டு செயற்பட்டால் தமது நட்புலகில் மட்டுமின்றி எல்லோரிடமும் சுலபமாகப் பழகி மகிழ்ச்சியைப் பெற முடியும்.

*கே.எல்.ஹில்மி,*
*சாய்ந்தமருது.*

## இது திசை மாறுவது சரியா?

தமது பிள்ளைகளை அன்போடும், பண்போடும் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் கட்டாயத் தேவை தாயினுடையதாகும். பிள்ளைகளைப் பெற்றெடுத்தால் மாத்திரம் போதுமா? அவர்களது எதிர்கால வாழ்வின் உன்னதமான நலனுக்காகவும், அவர்



களின் இலட்சிய நோக்கத்தின் வழியிலும் அதன் பொருட்டு தாய் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

தமது பிள்ளை பாடசாலை சென்று எழுத, வாசிக்க மாத்திரம் கற்றுக் கொண்டாலே போதும் என ஒரு சில தாய்மார்கள் கருதுகின்றார்கள்.

மற்றும் சிலர் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்புவதனால் எவ்வளவு பணம் செலவாகின்றது என நினைத்து பாடசாலை செல்வதற்குத் தடை விதித்து சின்னஞ் சிறிய வயதிலே ஆண்பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவதும், பெண் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைப்பதும் தொடர்கதையாக வளர்ந்து கொண்டு வருகின்றது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் பெற்றோரை எதிர்த்துப் பேச முடியாத நிலைக்குப் பிள்ளைகள் பின் தள்ளப்படுகின்றனர். அறியாமையின் காரணமாகப் பெற்றோர் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்குப் பிள்ளைகள் அடிபணிந்து அடங்கி, ஒடுங்கி வாழவேண்டிய கட்டாயத்திற்குள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனால் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு கேள்விக் குறியாய் மாறுகின்றது.

பாடசாலைகளில் கல்வி கற்கும் காலங்களில் பிள்ளைகளின் கலைத் திறமைகளை பரீட்சிக்கும் முகமாகப் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகளை மேற் கொள்கின்றனர். கலை நிகழ்வுகள் எனும் போது நாடகம், அபிநயம், தனிநடனம், குழுப்பாடல், வில்லிசை போன்ற நிகழ்வுகள் இடம் பெறக் களம் அமைத்துக் கொடுக்கின்றனர்.

கலைகளில் ஆர்வமுள்ள பிள்ளைகள் தாமாகவே முன்வந்து தாம்மால் முடிந்தளவிலான கலைத் திறமைகளுக்குத் தம்மாலான பங்களிப்பினை வழங்குகின்றனர்.

அதில் அவர்கள் முழுமூச்சாய் செயற்பட்டு வெற்றி கண்டு பூரிப்படைந்து கொள்ளை மகிழ்வில் இன்பமடைகின்றனர். பலரது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் பெற்று பல துறைகளில் தேர்ச்சி பெற்று முன்னோக்கி நகர வெற்றி நடை போடுகின்றனர். இத்தகைய நிலைக்கு இவர்கள் மென்மேலும் வளர்ந்து செல்வதற்கு பெற்றோரின் உன்னதமான வழிகாட்டலும், ஊக்கு விப்பு செயல்முறைகளுமே முதன்மையளிக்கின்றது.

பல பிள்ளைகளிடத்தில் கலையாற்றல் இலை, மறை காய்களாக மறைந்து கிடக்கின்றன. அதை வெளிக் கொணர்ந்து தமது திறமைகளை வெளியுலகிற்குக் காட்டவேண்டுமென பெற்றோரிடம் அனுமதி கோரும் வேளை பெற்றோரின் வார்த்தை குறிப்பாகத் தாயின் வார்த்தை பிள்ளைகளுக்கு பேரிடியாக மாறுகின்றது. தாய் இவ்வாறு தடை விதிக்கும் நேரம் அப்பிள்ளையின் பார்வை கலையாற்றல்களில் ஆதிக்கம் செலுத்தும் பிள்ளைகளின் பக்கம் நகர்கின்றது. அவர்களும் என் வயதை ஒத்தவர்கள் தானே. அவர்கள் கலை வளர்ச்சியில் எப்படி எல்லாம் சுதந்திரமாகச் சிறகடித்துப் பறக்கின்றார்கள்.

ஏன் என் பெற்றோர் என்னுடைய சிறகை ஒடித்து குற்றுயிராக்க முனைகின்றனர். அவர்கள் மகிழ்ச்சியில் ஆனந்தமாய் பேசும் வேளை என்மனம் சோகத்தின் மத்தியில் ஆதங்கம் அடைகின்றதே.

என பிள்ளையின் மனம் வேதனைப்படுகின்றது. மற்றவர்களைப் போல் நானும் எனது பங்களிப்பை முன்னெடுத்துச் செல்லக் கூடாதா? என அங்கலாய்க்கின்றது. பெற்றோர்களே! நீங்களும் தான் சற்றுச் சிந்தித்துப் பாருங்களேன்.

தீபத்தை ஏற்றி மூடிவைத்தால் அதன் ஒளி பிரகாசிக்குமா? அதைப் போலதான் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து அவர்களை வீட்டுக்குள் பூட்டி வைத்தால் அவர்களின் திறமை வெளிப்படுமா? இல்லைதானே. ஆதலால் திறமைகளை வெளிக் கொணர்வதன் மூலம்தான் பிள்ளைகளின் வாழ்வும் ஒளி பெறுகின்றது.

எனவே நாம் இருளின் மத்தியில் எந்தவிதப் பயனையும் அடையப் போவதில்லை. வெறும் சடப் பொருளாக்க் கிடந்து சிதைவடைந்து போவதுதான் உறுதி.

பெற்றோர்களே! ஒவ்வொரு பிள்ளைகளிடத்திலும் பயனுள்ள சத்தான திறமைகள் இருக்கின்றன. உங்களது அன்பும், ஆதரவும் உச்ச சக்தியும் போதியளவு கிடைக்காமையினாலேயே அவற்றின் வளர்ச்சி கருகிக் கொண்டு வருகின்றது. உங்கள் ஒத்துழைப்பை உவகையோடு வழங்குங்கள். அவர்கள் வானுற ஓங்கி வளம் பெற்றுத் திகழ்வார்கள்.

*(தொடரும்............)*

*ச.சந்திரமதி,*
*மகிழவட்டவான்,*
*ஆயித்தியமலை.*

## பெண்களின் தேவைகளைக் கருத்தில் எடுங்கள்

சிங்கள அரசின் அடக்குமுறைகளாலும், வன்முறைகளாலும் ஒட்டுமொத்தமான தமிழ் சமூகமும் பாதிக்கப்பட்டாலும் கூடுதலான பாதிப்பு பெண்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த யுத்த காலத்தினால் ஆயிரக் கணக்கான பெண்களின் வாழ்க்கை கேள்விக் குறியாக ஏராளமான தமிழ்ப் பெண்கள் கணவனை இழந்தனர். அநேகமான இளம் பெண்களின் கல்விக் கலாசாரம் சீரழிக்கப்பட்டது.

அநேக சிறார்கள் அனாதைகளாக்கப்பட்ட ஒரு துர்ப்பாக்கிய சூழல் தமிழர் தாயகப் பிரதேசத்தில் காணப்பட்டது. வறுமைக் கோட்டிற்குள் தள்ளப்பட்ட நிலையில் பெண்களின்



வாழ்வாதாரம் பாரிய சிக்கலையும் எதிர்நோக்கினர்.

இவ்வாறான சூழ்நிலையிலே கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் தமிழர் தாயகப் பிரதேச மக்களினுடைய வாழ்வை மேலும் ஆட்டம் காணச் செய்தது. இத்தகைய கொடிய அனர்த்தத்தின் விளைவால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும், சிறார்களுமே என புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

இவ்வாறு சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வாழும் அநேகமான பெண்களின் தேவைகள் இன்னும் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படாமலேயே உள்ளது. சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஓராண்டு உருண்டோடிய வேளையிலும் பாதிப்புற்ற பெண்களுக்கான வேலைத் திட்டங்கள், தேவைகள் மட்டக்களப்பு மாவட்டம் உட்பட ஏனைய மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படாததன் விளைவாகப் பெண்கள் தொடர்பான அபிவிருத்தி நிலைப்பாடுகள் கவலைக்குரிய விடயமாக உள்ளமை ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைகளில் இன்று நாடளாவிய ரீதியில் பெண்களின் நலன் பேணும் அமைப்புகள் எண்ணிலடங்காத தொகையில் உள்ளன. இவ் அமைப்புக்கள் பெண்களுடைய தேவைகள், அவர்களுக்கான பாதுகாப்பு வசதிகள் என்பன உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டும், பேணப்பட்டும் வருகின்றதா என்பதைக் கவனத்திற் கொண்டு அவர்கள் மூலமான ஆதங்கங்கள் வெளிக் கொணரப்பட வேண்டும். இதுவே பாதிக்கப்பட்ட பெண்களின் எதிர்பார்ப்பாகும்.

## ஊட்டமிக்க சோயா

தினசரி உணவில் நாம் சோயாவைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் பல்வேறு வகையான புற்று நோய்களிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ளலாம். வெகு நாட்களாகக் குணப்படாமல் இருக்கும் நோய்களைக் கட்டுப்படுத்துவதில் வேறெந்த உணவு வகைகளுக்கும் இல்லாத சக்தி சோயாவில் அடங்கியுள்ளது.

பெண்களுக்கு மாதவிலக்கு நின்ற பின் உடலில் ஏற்படும் சங்கடங் களைக் குறைத்து எலும்புகளின் உடல் முதிர்ச்சியைத் தாமதப்படுத்து கின்றது. இவ்வுணவில் இரும்புச் சத்தும், கல்சியமும் நிறைந்துள்ளதால் கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மாருக்கும் ஏற்றது.

வளரும் பெண்களுக்கு இவ்வுணவில் அடங்கியுள்ள பீட்டா கரோட்டின் எனப்படும் வைட்டமின் சருமத்தை மென்மையாக்குவதுடன், கண் சம்பந்தமான நோய்களை முக்கியமாக மாலைக்கண் நோயையும் தடுக்கின்றது. குழந்தைகளுக்கு மாற்று உணவாகச் சோயாவைக் கொடுப்பதனாலும் உடல் எடை, உயரம் மற்றும் நினைவாற்றல் கூடுவதுடன் இரத்த நிறமிகளின் எண்ணிக்கையும் உயரும்.

இதனை உணவில் இளம் பெண்கள் சேர்த்துக் கொள்வதன் மூலம் மகனீசியம், மற்றும் பொஸ்பரஸ் போன்ற போசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இது சிறு குழந்தைகளின் பற்களை உறுதிப்படுத்துவதுடன் நரம்பு சம்பந்தமான நோய்களையும் தடுக் கின்றது.

சோயா உணவு உட்கொள்வதன் மூலம் யூரிக் அமிலம் கட்டுப்படுவதுடன் மூட்டு வலியும் குறைந்து சிறு நீரகக் கோளாறுகளிலிருந்தும் பாதுகாக்கின்றது. அத்துடன் விளையாட்டு வீரர்களுக்கும் இது மிகவும் அவசியமான ஊட்டச் சத்தையும் அளிக்கக் கூடிய உணவாகக் காணப்படுகின்றது.

*யோ.புவிதா,*
*தாழங்குடா.*

## ஒரு மகளின் மனதில் போராட்டம்

தினம் தினம் புண்படுத்தினேன்
நான் வார்த்தைகளால்
சுட்ட சொற்களைத் தாங்க முடியாத
என் அன்னை

மனதிற்குள் அழுது
கொண்டிருப்பது
புரிந்தும் புரியாதவளாய்

காதல் என்ற வேதனையால்
பலரைப் புண்படுத்தி
மனதிலே போராட்டத்தோடு
வாழும் நிலைக்குள்ளாகிய
காதலனையும், காதலையும்
கொலை செய்ய
என் ரத்தம் கொதித்தது.

நான் பைத்தியகாரியாய் மாறி
பலரைப் பைத்தியமாக்கும்
என்னையும் கொலை
செய்யத் துடிக்குது என் மனது.

தினம் தினம் கண்களால் காதல்
பேசி எனைக் காதல் சிறைக்குள்
அடைத்து வேதனையோடு
வாழவிட்டுச் சென்றவனை
இன்றும் தேடிக் கொண்டிருக்கிறது.

என் கண்கள் அவனோடு
வாழ்வதற்கல்ல அவன்
உயிரைக் குடிக்க ஆத்திரமும்,
கோபமும் எனக்குள் அத்துமீறி
அலைபாய்ந்து கொண்டிருக்கின்றது.

*(தொடரும்..........)*

*சிவலிங்கம் சுமதி,*
*ஏறாவூர் - 04.*

இவ்வார சிறுகதை

# விடிவை நோக்கி...

தன் கையடக்கத் தொலை பேசியின் சிணுங்கலில் கண்விழித்துக் கொண்ட கலா எழுந்து கொள்ள மனமில்லாமல் படுத்த படியே ''ஹலோ'' என்றாள்.

''ஹாய் வணக்கம்! எப்ப வந்தாய்? எப்ப வருவாய்? உனக்காக இங்க என் வாண்டுகள் பள்ளிக்கூடம் கூடப் போகாமல் இருக்கின்றார்கள்'' என்ற நண்பி சாந்தியை இடைமறித்த கலா.

''எல்லாத்தையும் இப்பவே சொன்னா நேரில என்னத்தைக் கதைப்பது. இப்ப ஆறுமணி, நான் உடனே வெளிக்கிட்டு ....கல்முனையிலிருந்து கல்லடிக்கு ஒன்று அல்லது ஒன்றரையில் பஸ் வந்திடும் தானே! ஆயத்தமாக நில் என்று தொலை பேசிய நிறுத்திய கலா எழுந்து காலைக்கடன்களை முடித்து உடை மாற்றி வந்து பஸ் ஏறிய போது மணி ஏழாகியிருந்தது.

பஸ் புறப்படத் தயாரான போது திடீரென கலா தான் கைப்பையைப் பார்த்தவள் நான்கு வங்கிப் புத்தகமும் பத்திரமாய் இருப்பதை உணர்ந்தவள். இருக்கையில் வசதியாய் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டாள். கண்களை மூடினாலும் தெரியும் ஒரே முகம் புவியினுடையது. ! புவியை நினைக்க கலாவின் மூடிய கண்கள் கூட குளமானது. அன்பான ஒரு உறவு அணைந்து விட்டதை நினைக்கவே மனம் அலையாய்க் கொதித்தது. கலாவின் வாயிலிருந்து மெலிதாய் ஒலித்தது. புவி.... புவி....புவி அண்ணா!

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கலா யுத்தத்தால் இடம்பெயர்ந்து பின் உறவுகளின் துணையால் தந்தையும் தாயும் லண்டன் சென்றுவிட சில சட்டச் சிக்கலினால் கலாவின் பயணம் தடைப்பட மட்டக்களப்பிலே தன் படிப்பைத் தொடர்ந்து கொண்டபோது கிடைத்த சிநேகிதி தான் சாந்தி!

மூன்று சகோதரிகளும், ஒரு சகோதரனும் சாந்தி கடைசிப்பிள்ளை. தகப்பனாரின் கூலித் தொழிலினால் தான் குடும்ப வண்டி ஓடியது. பணம் இல்லாவிட்டாலும் பாசமான அந்தக் குடும்பத்தில் தான் கலா தன்னையும் இணைத்துக் கொண்டு அவர்களுக்கு உதவியாகவும் இருந்தாள்.

வசதியாய் இருக்க வேண்டிய கலா, வறிய குடுபத்தினருடன் ஒட்டி உறவாடுவதைப் பொறுக்க முடியாத உறவுகள் கலாவின் பெற்றோருக்கு மடல் எழுத கலாவுக்கு வந்த பதில். பெற்றோர் ஆசை மகளின் சந்தோஷத்தை முக்கியமாக கருதி மகளின் இருப்பை ஆதரிக்கத்தக்கதோடு, மகளின் அன்புக் கட்டளையை ஏற்று அந்தக் குடும்பத்தைத் தாங்கினர்.

குடும்பத்தின் ஒரே ஒரு மகனான புவியும் தன் மற்றைய சகோதரிகளைப் போலவே கலாவையும் நேசித்தான். சகோதரிகளின் சார்ந்த தன் பொறுப்புக்களை கலாவும் பகிர்ந்து கொள்வதையிட்டு கலாவின் மேல் மதிப்பும் , மரியாதையும் வைத்தாள். அன்னியவளாகிய தன்னையும் புவியையும் பற்றி மற்றவர்கள் எதையும் வீணாகப் பேசிவிடக் கூடாதென்பதில் அதிக அக்கறை கொண்ட கலா '' புவி அண்ணா'' எனும் வாக்கு மாறாமல் காத்துக் கொண்டாள்.

பொறுப்புக்களை மட்டுமே ஏற்றுக் கொண்டு தன்னை மறந்து வாழ்ந்து கொண்டிருந்த புவி தனக்கெனத் தேடிய ஒருத்தியுடன் திடீரென வந்து நின்றபோது குடும்பமே ஆடிப்போனது. தந்தையின் கடும் சொற்களும் , சகோதரிகளின் கண்ணீரும் , தாயின் விம்மலும் , கலாவின் மௌனமும் சேர்ந்து புவியை நிலை தடுமாற வைத்தது.

சுய நினைவு இல்லாமல் தன் மனம் மாறியதை உணர வாய்ப்பில்லாமல் கரம் பற்றியவள் காட்டிய வழியிலே சென்றான்.

காலம் கடக்கையில் நிகழும் வாழ்க்கை மாற்றங்களால் கவலையுடன் கானகம் சென்ற சாந்தியின் தந்தை. அடுத்தடுத்து மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையாகிவிட்ட புவி. சீதணச் சந்தையில் பேரம் பேசத் திரணியில்லாமல் சகோதரிகள் இன்று முதிர்கன்னிகள்! தனக்கொரு வாழ்க்கை இருக்கின்றதென்ற நம்பிக்கையுடன் காத்திருக்கும் சாந்தி! செல்வி கலாவும் திருமதியாகி வெளிநாட்டுக்கணவனின் அழைப்புக்காகக் காத்திருக்க!

அழைக்காமலே வந்து ஆழிப்பேரலை அள்ளிக்கொண்டு போனது அநேகம். அந்நேரம் கொழும்பில் இருந்த கலா சாந்தியை தொடர்பு கொண்டு கேட்ட செய்தியால் துவண்டுபோனாள். நத்தார் கொண்டாட் புவியின் வீட்டுக்குச் சென்ற தாயுடன் புவியும் மனைவியும் ஆழிப்பேரலையில் இறந்துவிட்டதாயும் அதிஸ்டவசமாக உயிர் தப்பிய புவியின் மூன்று பெண் குழந்தைகளும் தம் வசம் இருப்பதாகவும் சாந்தி கூறினாள்.



கவலையும் , கண்ணீருமாக சாந்திக்கு உதவிக்கொண்டிருந்த கலாவால் உடனடியாக வரமுடியவில்லை. ஆழிப்பேரலைக்குப் பின்னும் அடிக்கடி பரவிய வதந்திகளால் மாமி, மாமாவால் தடைப்பட்ட பயணம் ஆறுமாதங்களின் பின் கூண்டைவிட்டு வெளியேறிய பறவையாய் பறந்து வருகிறாள்! கலா! சாந்தியைக் காண!

''கல்லடி, கல்லடி'' என்ற அழைப்பைக் கேட்டு பஸ்ஸை நிறுத்தி இறங்கிக் கொண்டாள் கலா மனதில் பாரத்துடன் சாந்தியின் வீட்டைச் சென்றடைந்தாள் சாந்தி. புவியின் குழந்தைகள் மூன்றும் கலாவைச் சித்தி சித்தி என அன்பிலே அண்டினார்கள்.

வழமையான உபசரிப்புக்கள் விசாரிப்புக்கள் நடந்து கொண்டிருந்தாலும் கலாவின் மனம் அலைபாய்ந்து கொண்டே இருந்தது.

சாந்தியின் சகோதரிகளைப் பார்த்தபோது ''ஆழிப்பேரலையில் மனைவியை இழந்தவர்களது மறுமணத்தின் மூலம் இந்த முதிர்கன்னிகளை வாழவைக்கக் கூடாதா? என எண்ணினாள்.

உன்னுடன் நிறையக் கதைக்கணும் ! நிறையக் கதைக்கணும் என்ற சாந்தி கலா பக்கத்தில் இருந்து கூட நிறைவாகக் கதைக்கவில்லை. சாந்தியிடம் இது பற்றி நேரடியாகவே கேட்டுவிடுவதென முடிவு செய்த கலா இரவு எல்லோரும் தூங்கிய பின் சாந்தியிடம் சென்று

''சாந்தி நான் வரக்குள்ள புவி அண்ணனைக் கண்டனான்'' கலா ஏமாந்து போனாள்! சாந்தியிடம் எந்தச் சலனமும் இல்லை மீண்டும்

''என்னட்ட ஏன் பொய் சொன்னநீ. உங்கட விருப்பத்தை மீறி கலியாணம் முடிச்சாலும் உயிரோட இருக்கிறவன ஏன் செத்துத்தான் எண்டு சொன்னனீ? அவன் தான் உங்களில் வைச்ச பாசம் பொய்யென்றா, நீங்களெல்லாம் அவனில உண்மையான பாசம் அன்பில தானே இருந்த நீங்க. ஏன் என்னட்ட பொய் சொன்னநீ?'' சொல்லன் சாந்தி ஏன் பேசாம இருக்கிறாய்? உன்னைப் போலத்தான் நானும் அவனிட்ட அன்பாயிருந்த நான். எப்படி நான் துணிஞ்சு போயிட்டன் தெரியுமா? சொல்லன் ஏன் பொய் சொன்னநீ? சாந்தியின் மௌனம் கலாவை அழ வைத்தது. அழுதாள்.

அழுதுகொண்டேயிருந்தவள் எழுந்து சென்று தனது கைப்பையிலிருந்த நான்கு வங்கிப் புத்தகத்தையும் எடுத்து வந்து சாந்திக்கருகில் வீசிவிட்டு?

'' இந்தப் புத்தகங்களை எடுத்துப் பாரு எண்ட அண்ணனின் பிள்ளைகளதக நினைச்சுத்தான் ஒவ்வொரு புள்ளைக்கும் ஐம்பதாயிரம் ஐம்பதாயிரம் போட்டிருக்கன் புவி உயிருடன் இருக்கிறானெண்டு சொல்லியிருந்தா இதெல்லாம் செய்யமாட்டன் என்கின்ற எண்ணமா? உனக்குக் கூட ஒரு லட்சம் போட்டு ஒரு புத்தகம் திறந்திருக்கிறன் நீங்க எல்லாம் தந்த அன்புக்காக என்னால செய்ய ஏலுமானது இது தான். ஆனா நீ என்னட்ட பொய் தான் சொல்லுறாய்

**வே.தமருகாறொபட்**
**கல்லடி வேலூர்**

அழுகை வந்துவிட பேச்சை நிறுத்திவிடுகிறாள். கலா திடீரென மடை திறந்த வெள்ளம் போல பிரவாகித்தது. சாந்தியின் வாய்மொழிகள் பிழ தான் கலா மன்னிச்சிக்கொள் சுனாமி வந்து பதினைஞ்சி நாளா நாங்க அண்ணனும் செத்துத்தான் எண்டு தான் நினைச்சம் ஆனால் பிறகு தான் அவன் உயிரோட இருக்கிறதா அறிஞ்சம் உனக்குச் சொல்லி இந்தத் துக்கத்தையும் சந்தோஷமா மாற்ற வேணும் எண்டு நினைச்சம் ஆனா அவன் அண்டைக்கு எங்கள வெறுத்துக் கலியாணம் முடிச்சது போல தன்ர பொஞ்சாதி செத்தும் கூட புள்ளைகள மறந்து ரெண்டாவது கலியாணம் முடிச்சி இருக்கிறன்'' என்று சாந்தி நிறுத்த.

கலா உண்மையாகவா? என்பது போல சாந்தியைப் பார்க்க தொடர்ந்தும் சாந்தி... '' அவனுக்கு ஒரு துணவேணும் தான்.

ஆனா புருஷன் செத்த பொஞ்சாதி பிள்ளைகளுக்காக வாழும் போது ஏன் ஆண்கள் மட்டும் பிள்ளைகளை அநாதரவா விடணும் அம்மா தானே செத்தவ அப்பா இருக்கிறார் தானே எண்டு அந்தப் பிள்ளைகளுக்கு எந்த நிவாரணமும் கிடைக்கிறதில்ல. இந்தப் பிள்ளைகள் அம்மா, அப்பா அன்பு பாசத்தை பொருளாதாரத்த இழந்து நிக்கிறாங்க இதெல்லாம் நினைக்க நினைக்க எனக்கு எங்கட அண்ணன் இருப்பதும் ஒண்டுதான் சாகிறதும் ஒண்டுதான்''


கண்களிரண்டும் குளமாகப் பேசிக்கொண்டிருந்தவள் சிறிது நிறுத்தி மீண்டும் தொடர்ந்தாள்.

'' புவியிர நிலமையில அண்ணியிருந்தா இந்நேரம் எங்கையாவது ஒரு முகாமுல இந்தப் பிள்ளைகளோட இருப்பா. முதல்ல, இந்தப் புள்ளகளுக்கு ஒரு அம்மா வேணும் எண்டு இருந்தவன், இப்ப தனக்கு மட்டும் மனைவியத் தேடிக் கொண்டு பிள்ளைகள் வேண்டாமாம். எங்கள நாங்களே கவனிக்க வேலைக்குப் போறதா? இந்தப் புள்ளைகளைப் பார்ப்பதா? தலையணையில் முகம் புதைத்து அழுத சாந்தியைப் பார்க்க கலாவுக்கும் அழுகை வந்தது. சாந்தியின் நிலை கலாவுக்கும் புரிந்தது. தந்தையாலும் சகோதரனாலும் தங்களுக்கொரு வாழ்வைத் தேடித்தர இயலாமல் போய்விட்டதால் ஏற்பட்ட விரக்தியின் வெறுப்பை இக்குழந்தைகள் மீது கொட்டும் சகோதரிகளின் மத்தியிலும் , தான் காத்திருக்கும் எதிர்காலத் துணைவன் இக்குழந்தைகளுடன் தன்னையும் ஏற்றுக் கொள்வானா? என்ற ஆதங்கமுமே சாந்தியை இப்படிப் பேச வைக்கிறது.

தூக்கத்தில் ஆழ்ந்து விட்டிருந்த சாந்தியைப் பார்த்தாள் கலா மனதுக்குள் இருந்த சுமைகளையெல்லாம் இறக்கிவிட்ட நிம்மதியில் உறங்குகிறாள் எனத் தனக்குள் எண்ணினாள். இதுவரை சாந்தி சுமந்திருந்த சுமைகளும் பொறுப்புக்களும் தனக்குள் வந்துவிட்டதையும் உணர்ந்தாள். இந்த மூன்று பெண்குழந்தைகளின் எதிர்கால வாழ்வும் பாதுகாப்பும் சாந்தியின் குடும்ப நிலமைகளை வளப்படுத்தும் எண்ணமும் கலாவுக்கு பாரமாயிருக்கவில்லை. அவை அவளுக்குச் சுகமான சுமைகள்.

தன்மீது அன்பையே பொழிந்த இவர்களது பலவீனத்தை பலப்படுத்தி விடிவை ஏற்படுத்த தன்னால் முடியும் என நம்பினாள் பணம் பத்தும் செய்யும் என்றும் அதன் மூலம் விடிவை அடைய முடியும் என்றும் அதுவரை தான் இலங்கையை விட்டுப் போகப் போவதில்லையென முடிவெடுத்தவள் சாந்தியின் அருகில் படுத்து விடிவை நோக்கிப் பயணித்த படி உறங்கிக் கொண்டிருந்தாள்.

சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சேகரிப்பில் தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளும் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மகிந்தவின் கூட்டுக் கொள்கை, நிலைப்பாடு என்பன பற்றி எதிர்வு கூறப்பட்டவற்றை இப்போது நினைத்துப் பார்க்க வேண்டும்.



காக தென்னிலங்கை மக்களிடையே அளித்த வாக்குறுதிகளில் பலவற்றை யதார்த்தத்தில் செய்ய முடியாது என்பதை அறியும். இருந்தும் வாக்குறுதிகளை அள்ளி வீசியது; அதேயளவுக்கு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரிக்கும் பிரகடனங்களையும் மேற்கொண்டது.

இவற்றில் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத போது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரிக்கும் பிரகடனங்களை பிரதானமாக செயற்படுத்தலாம் என்று அது நம்பியிருக்கின்றது. இதனையே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் மேற்கொண்டார். 3.50சதத்துக்கு பாணின் விலையை குறைப்பதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போன போது தமிழ் மக்கள் மீதான யுத்தத்தை தீவிரப்படுத்தி அதனால் ஏற்படக்கூடிய கொந்தளிப்புக்க பட்டபோதே அம்பாறை அக்கரைப்பற்றில் குண்டுகளின் ஒசை கேட்கத் தொடங்கியது. இதற்கு ஆரம்பத்தில் புலிகளைக் குற்றம் சாட்டியிருந்தன சில தரப்புக்கள். என்றாலும் ஆளும் அரசே அந்தக் கைக்குரியது என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

சர்வதேச நிலவரங்களுக்கு அமைய ஒரு பக்கத்தில் சமாதானத்துக்கான முயற்சிகளை மேற்கொள்வது போல மகிந்த காட்டிக்கொள்கிறார். ஆனால், நடைமுறையில் அது முன்னெடுக்கப்படுவதற்குரிய சாத்தியங்களை இல்லாமலாக்கி விடுகின்றார்; மற்றைய பக்கத்தில் போரொன்றைத் தீவிரப்படு த்துவதற்கான காரியங்களையே முடுக்கி விட்டிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

சந்திரிகா ஜனாதிபதியாக இருக்கும் வரை கிழக்கை கிக் கொண்டிருக்கிறது. மகிந்தவின் அரசு ஆட்சிக்கு வந்த உத்வேகம் அல்லது அவரது தரப்பிலிருந்து கிடைக்கப்பெற்ற சமிக்ஞை தமிழ்த் தேசிய உணர்வாளர்களை இலக்கு வைக்கலானது.

தீவகத்திலும் கோப்பாயிலும் தமிழ் மக்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் கடந்த போர்க்காலத்தின் நடைமுறையைப் பின்பற்றத் தொடங்கிய இராணுவம், மகிந்தவின் அரசினால் கட்டுப்படுத்தப்படவில்லை.

அவசரகாலச் சட்டம், மாவீரர் நாள் உரையில் தலைவர் வழங்கிய குறுகிய கால அவகாசத்தை போரொன்றுக்கு ஒத்திகை பார்க்கும் முன்னாயத்தமாகத் தீர்மானம் எடுத்த இராணு வத்தரப்பின் நிலைப்பாடு என்பவற்றின் ஊடாக தூண்டப்பட்டிருக்கின்றன.

தொடர்ந்தும் இந்த நிழல் யுத்தம் தமிழ்த் தேசிய உணர்வாளர்களை இலக்கு வைக்கத் தலைப்பட்டபோது, தமிழ் மக்கள் மத்தியில் இருந்தே பதிற்குறிகள் தெரியத்தொடங்கின; படையினருக்கு எதிரான கண்ணிவெடித் தாக்குதல்களும் கைக்குண்டுத் தாக்குதல்களுமாக அவர்களின் சரியான முறையில் கையாளாது படையினரை ஊக்கப்படுத்தும் விதமாக அரசுத் தலைமை நடந்து கொண்டிருக்கின்றது. சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் குறித்த சிப்பாய்களைத் தண்டனைக்கு உட்படுத்தி பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு நீதியும் மக்களுக்கு உணர்வு தணிவும் கிடைக்க வழி செய்யவில்லை. அதனைக் கோரிக்கையாக முன்வைத்து அமைதி வழியில் போராட முற்பட்டவர்கள் மீதும் கொல்லப்பட்ட யுவதியின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்றவர்கள் மீதும் வன்முறையைக் கட்டவிழ்த்து அடுத்த தரமும் இனவாதம் கொண்ட இராணுவ மனோபாவத்தையே வெளிப்படுத்தியிருக்கின்றது.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமாதான முயற்சிகளை முன்னெடுத்தல், ஆசிய நாடொன்றில் பேச்சுவார்த்தையை நடாத்துதல் என்ற வேஷம் பூண்டிருக்கும் அரசு, தமிழ் மக்களின் உணர்வு புள்ளியில் தாக்கிய இந்த விரும்பத்தகாத சம்பவங்கள் பற்றி வருத்தம் தெரிவிக்கவில்லை; படையினர் மீதான தாக்குதலுக்கு முந்திக்கொண்டு

# மெய்ப்பிக்கப்படும் கடும் போக்குவாதக் கூட்டு

மேலோட்டமான முறையில் அதிகமான ஊடகங்களால் முன்வைக்கப்பட்ட கடும்போக்குவாதக் கூட்டு என்ற கருத்து, இப்போது நடைமுறையில் மெய்ப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. (இதற்காக ரணில் சமாதானத்தின் தூதுவராக இருக்கிறார் என்று சில இடங்களில் கூறப்பட்டவற்றை யதார்த்தமான கருத்து எனக் கொள்ள முடியாது).

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான தென்னிலங்கையின் தலைமைத்துவம், தனது ஆட்சியைக் கைப்பற்றுவதற் ளில் இருந்து தப்பித்துக் கொண்டார்.

இந்தப் பாரம்பரியத்தை தான் மகிந்தவும் தொடர தலைப்படுகிறார் என்பதனை கடந்த ஒருமாத காலச் சம்பவங்கள் ஊடாக விளங்கிக்கொள்ள முடிகிறது. அதிலும் குறிப்பாக வெளிப்படையாகவே இனவாதத்தை முன்வைத்து கூட்டுச்சேர்ந்த கட்சிகளின் பின்னணியில் இதனை துலக்கமாக வெளிக்காட்டுகின்றார். ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கி மகிந்தவின் வெற்றி உறுதிப்படுத்தப் மையமாகக் கொண்டு நிழல் யுத்தமொன்று தீவிரமாக இடம் பெற்று வந்தது. வடக்கில் அது விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் கொல்லப்படுவதாகவும் நிகழ்ந்தது. ஆயினும், தேர்தலின் பின்னர் வடக்கில் பெரும்பாலும் முடிவுக்கு வந்து சில நாட்கள் அமைதி நிலவியது.

ஆனால், மாவீரர் நாள் ஏற்பாடுகளில் ஈடுபட்ட பொதுமக்களைப் படைப்புலனாய்வாளர்கள் இலக்கு வைத்ததோடு திரும்பவும் தொடங்கிய இந்த நிழல் யுத்தம் இப்போது பிரமாண்டமா



உடல்கள் வளர்த்தப்பட்டன. இதற்கு போர் நிறுத்த உடன்படிக்கைகளை அப்பட்டமாக விடுதலைப் புலிகள் மீறுகின்றார்கள் என்று குற்றம்சாட்ட முடியாத அளவுக்கு மக்கள் படை என்ற அமைப்பு உரிமை கோரியது. மக்கள் மீதான தாக்குதலுக்கு பதிலடிகள் தரப்படும் என்பது இதன் பிரகடனமாக வெளியிடப்பட்டது. எனினும், இதன் பின்னர் படையினர் மீது சிறு கல்தானும் எவராலும் எறியப்படவில்லை.

**- ஞாபகன் -**

ஆனால், மகிந்த அரசு தன்னைச் சுற்றிலும் உள்ள அதிகாரிகள், தளபதிகள், ஆலோசகர்களாக கடும் போக்குவாதிகளை நியமித்து புத்தி சாதுரியமற்ற நிலையில் விடயங்களைக் கையாளத் தொடங்கி இருக்கின்றது. எளிதில் இராணுவத்துக்கு எதிராக மூர்க்கம் கொண்டு திரும்பிவிடக்கூடிய மாணவர் சமூகமும் அறிவு ரீதியாக தென்னிலங்கை அரசியலுக்கு எதிராகச் செயற்படவல்ல புலமையாளர் சமூகமும் அதிகமிருக்கும் பிரதேசம் குடாநாடு என்பதை மறந்து அது செயற்பட ஆரம்பித்திருக்கின்றது.

புங்குடுதீவில் இருபது வயதுடைய இளம்பெண்ணை கடற்படைச் சிப்பாய்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்த சம்பவத்தை, விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தும் அதன் பிரதிநிதிகள் வாயே திறக்கவில்லை.

இது தொடர்பில் அனுதாபம் தெரிவிக்கப் புறப்பட்ட மாணவர்கள் மீது தாக்குதலை நடத்தி, அதற்கு கண்டனம் தெரிவித்த பல்லைக்கழகத்தின் துணைவேந்தர், பேராசிரியர்கள் உள்ளிட்ட கல்விச் சமூகம் மீதே துப்பாக்கிகளைத் திருப்பி எல்லாவற்றையும் தலைகீழாக்கிவிட்டிருக்கின்றது. சரத் பொன்சேகா புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர், அவரைக் கொண்டு அரங்கேற்றும் மகிந்தவின் இந்த நாடகம் போர் பயிற்சி ஒன்றின் மூலமாக எதிர்கொள்ளப்படும் நிலைக்குச் சென்றிருக்கின்றது.

ஒட்டுமொத்த யாழ். பல்கலைக்கழக சமூகம் மீதும் சிறிலங்கா அரச படைகளால் திருப்பப்பட்ட துப்பாக்கி குறித்து, அது நடந்து இருபத்து நான்கு மணித்தியாலங்கள் கடந்தும் அரசினால் சரியான காரணம் கூறப்படவில்லை. வெளிப்படையாகவே அரசும் படைகளும் காட்டும் விரோதமான நிலைப்பாடு மாணவர்களை தற்காப்பு போர்ப்பயிற்சி ஒன்றைப் பெறும் முடிவுக்கு தள்ளியிருக்கின்றது. யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒட்டுமொத்தமாக சேர்ந்து எடுத்திருக்கும் முடிவின் பயனை அனுபவிக்கப் போகின்றவையாக படைகளும் அரசுமே இருக்கப் போகின்றன.

## பதினொரு மாதங்களின் பின் தந்தையின் சடலத்தை பார்த்த சிறுமி

கடந்த டிசம்பரில் நிகழ்ந்த சுனாமியின் போது கடலுக்குள் இழுத்துச் சென்றவர்களின் சடலங்கள் ஒவ்வொன்றாக கரை ஒதுங்கி வருகின்றன. கரை ஒதுங்கும் சடலங்கள் பல், கைரேகை மற்றும் மரபணு சோதனை மூலமாக அடையாளம் காணப்பட்டு வருகின்றன. சுனாமியில் காணாமல் போன தனது தந்தையை 11 மாதங்கள் கழித்து சடலமாக பார்த்தாள் ஒரு தாய்லாந்து சிறுமி.

கடந்த ஆண்டு டிசம்பர் 26ம் திகதி வங்கக் கடலில் ஏற்பட்ட சுனாமி பேரலைகள் தாய்லாந்து, அந்தமான், இலங்கை, தமிழகம் என்று வங்கக் கடலின் பல்வேறு கடலோரப் பகுதிகளில் வசித்த மக்களை கபளீகரம் செய்தன. ஆயிரக்கணக்கான மக்களை காவு கொண்ட சுனாமியில் தெற்கு தாய்லாந்தில் மட்டும் 5,395 பேர் உயிரிழந்தனர். 2,817 பேர் காணாமல் போயினர்.

இறந்தவர்களின் சடலங்கள் அவ்வப்போது கரை ஒதுங்கி வருகின்றன. தாய்லாந்தில் முகாமிட்டுள்ள "சர்வதேச மருத்துவ ஆய்வுக் குழு" வினர் சடலங்களின் கைரேகை, பற்கள் மற்றும் மரபணு ஆகிய சோதனைகள் மூலமாக அடையாளம் கண்டு வருகின்றனர். இதுவரை 2,900 சடலங்கள் இது போன்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

சுனாமி பேரலைகளின் தாக்குதலால் சிதறுண்ட குடும்பங்களில் புக்கெட் தீவில் வசிக்கும் சுவானீ மாலிவன் என்ற சிறுமியின் குடும்பமும் ஒன்று. தாய், தந்தை, பாட்டி, இரண்டு அத்தைகள் என்று குடும்பத்தையே சுனாமிக்கு இரையாக்கி விட்டு தவித்த சுவானீ தனது பாட்டி மற்றும் அத்தைகளுக்கு இறுதிச் சடங்குகள் நடத்திவிட்டு தாய், தந்தையை எதிர் பார்த்து காத்து இருந்தார்.

கடந்த செப்டம்பரில் கரை ஒதுங்கிய தாய் பிரித்தாவின் சடலத்தைக் கண்ட சுவானீ, எப்படியாவது தந்தையைப் பார்த்து விடலாம் என்று நம்பி இருந்தாள். ஆனால், பாவம் 11 மாதங்கள் கழிந்த நிலையில் கடந்த வாரம் அவளது தந்தை உடும் (40) சடலமும் கரை ஒதுங்கியது. சுவானீ தனது தாத்தா ச்ன் தெம்னாவுடன் அரசு கட்டிக் கொடுத்த இல்லத்தில் வசித்து வருகிறாள்.

சுவானீ மட்டுமல்லாமல் ஏராளமானோர் தங்களுடைய உறவினரின் சடலமாவது கிடைக்காதா என்று நாள்தோறும் ஏங்கி வருகின்றனர்.

அடுத்த ஆண்டு பெப்ரவரி வரை தாய்லாந்தில் முகாமிட்டு இருக்கும் சர்வதேச குழுவினர், அதன் பிறகு தாய்லாந்து பொலிசாரிடம் பணியை ஒப்படைக்க முடிவு செய்துள்ளனர். அடுத்த ஆண்டு மேலும், 800 சடலங்கள் மீட்கப்படும் என்று எதிர் பார்ப்பதாகவும் கூறினர்.

ஆண்டுகள் பல கடந்தாலும் சுனாமி பதித்த சோகச் சுவடுகள் கடற்கரை ஓரங்களிலும், கடலோர மக்கள் மனதிலும் ஆழமாக பதிந்து உள்ளன.

# உண்மை நண்பன் யார்?

இன்பமும், துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை. அவ்வாழ்க்கையில் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் நாம், எதிர்பாராமல் எங்கோ ஓர் இடத்தில் அல்லது வேலைத் தளத்தில் நண்பர்களைச் சந்திக்கின்றோம். பேசிக், கதைத்துச், சிரித்து அறிந்து கொண்டதன் பின் வருவது தான் நட்பு. அப்படியாயின் நட்பு நிலை மாறுவது ஏன்? இடத்திற்கு ஏற்ப இடம் மாறுகின்றது ஏன்?

உண்மை நண்பனிடந்தான் மனம் விட்டு எந்த விடயத்தையும் பேசலாம். வஞ்சனை இல்லாத அவன் விடயத்திற்கு ஏற்ப ஆலோசனை வழங்குவான். மன ஆறுதல் கிடைக்கும். உண்மை நண்பன் எங்கள் வாழ்வில் கிடைப்பானானால் அதுவே நாம் பெற்ற பாக்கியமாகும்.

எமது வாழ்வின் வழிகாட்டி தான் நல்ல நண்பன். இன்று புனிதமான நட்பு ஏதோ ஒரு தேவை கருதித்தான் கொள்ளப்படுகின்றது. தேவை முடிய நட்பை விட்டு விடுகிறார்கள். இது நல்ல நட்பாகுமா?

நல்ல நண்பன் தனது நண்பனின் குண நலன்களை அறிந்து கொண்டு அவன் வழி தவறிச் செல்லும் போது அதனைச் சுட்டிக் காட்டி உடனிருந்து ஆலோசனை வழங்குவான். இதை இன்று காண முடிவதில்லை. நேரில் கதைத்து விட்டு புறம் சென்று இன்னொரு நண்பனுடன் சேர்ந்து கை கொட்டிச் சிரிக்கின்றான். குறை கூறுகின்றான்.

உன் நண்பன் யார் என்று சொல். உன்னை யாரென்று சொல்லுகின்றேன். என்று என்று அறிஞர் ஒருவர் கூறியுள்ளார். நட்புப் பற்றித் திருக்குறள் அழகாகக் கூறுகின்றது. "உடுக்கை இழந்தவன் கைபோல் அங்கே இடுக்கன் களைவதாம் நட்பு" எமது உடலிலுள்ள துணி நழுவிக் கீழே விழும் போது கை எவ்வாறு பற்றிப் பிடித்துக் கொள்கின்றதோ, அவ்வாறே எமது நட்பும் இருக்க வேண்டும். ஆபத்தில் உதவும் பண்பு நண்பர்களிடம் இருக்க வேண்டும் என்பதை இக் குறள் புலப்படுத்துகின்றது.

இராமாயணத்தில் வேட்டுவத் தலைவனான குகன் இராமனிடம் நட்புக் கொண்டிருக்கவில்லையா? வித்தியாசம் பார்த்திருந்தால் நட்புக் கொண்டிருக்க முடியுமா? இன்று உண்மையான நட்பைக் காண்பது அரிதாகவே உள்ளது.


இருந்தும் ஆழிப் பேரலையுடன் இதுவும் அடிச்சுச் செல்லப்பட்டு விட்டதோ, என்று எண்ணத் தோன்றுகின்றது. நண்பர்களே உங்கள் நண்பர்களுடன் உண்மையான நட்புடன் பழகப் பாருங்கள். நண்பனுக்கு ஆபத்து என்றால் உதவுங்கள். பெருமைக்குரியவர்களாகப் பேசப்படுவீர்கள்.

*லக்ஸ்மி,*
*மட்டு.*

## சிறுவர் நாதம்







*ய.கீரன்,*
*தரம் - 6[R]*
*மட்.அரசடித்தீவு வி.ம.வித்*

## பொன் மொழிகள்

01. "ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை. வாழும் முறையில் தான் உள்ளது"
**- திருமூலர் -**

02. "உலகத்தைத் திருத்த விரும்பினால் முதலில் உன்னைத் திருத்திக் கொள்"
**- அன்னை -**

03. "உடலின் வீரத்தை விட உள்ளத்தின் வீரம் மிகவும் உயர்வானது"
**- மகாத்மா காந்தி -**

04. "ஒற்றுமையாய் இருங்கள் ஆனால் மிக நெருக்கமாக இருக்காதீர்கள்"
**- விவேகானந்தர் -**

05. "காலம் பொன் போன்றது. கடமை கண் போன்றது"
**- மு.கருணாநிதி -**

*அ.கௌரி, தரம் - 10,*
*களுமுந்தன்வெளி.*

## அதிசய உலகின் அதிசய தகவல்கள்

❀. மார்ச் மாதம் 22ம் திகதி உலக நீர் தினமாகும். நீரைக் கவனமாகப் பேணுவது பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டவே இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

❀. உலகில் மிகப் பெரிய தனி இலையுடைய தாவரம் இராட்சத நீர் அல்லியாகும். இதன் இலை இரண்டு மீற்றர் நீளம் வரை வளரக் கூடியது. இலையின் மையத்தில் இருந்து விரிந்து செல்லும் நரம்பினால் இலை வலிமை அடைகின்றது. ஒரு குழந்தையைத் தாங்கக் கூடிய வலிமையை இந்த இலை கொண்டுள்ளது.

❀. சூரியன், சந்திரன், கோள்கள், உடுத் தொகுதிகள் ஆகியன கிழக்கில் உதித்து மேற்கே மறைவது போன்று எமக்குத் தென்படுகின்றது. ஏனெனில் புவிதன் அச்சுப் பற்றி மேற்கிலிருந்து கிழக்காகச் சுழல்கிறது. (புவியிலுள்ள எமக்கு அதை உணர முடியாது) இதனாலேயே சூரியன், சந்திரன் ஆகியன கிழக்கில் இருந்து மேற்காகச் சுழல்வது போல் தென்படுகின்றது.

❀. கெல்வின் (k) என்பது வெப்பநிலையை அளக்கும் நியம அலகாகும். செல்சியஸ் (c) வாசிப்புடன் 273 ஐக் கூட்டுவதால் கெல்வின் வாசிப்பு கிடைக்கும்.

❀. விலங்குகளை உணவாகக் கொள்ளும் தாவரம் நெப்பெந்தசு ஆகும். நெப் பெந்தசின் நிறத்தை நாடிவரும் பூச்சிகள் அதன் கெண்டியின் உள்ளே சென்று வெளியேற முடியாது இறக்கும். பின் பூச்சியின் உடலிலுள்ள போசனைப் பதார்த்தங்களை நெப் பெந்தசு தாவரம் உறிஞ்சி செழிப்பாக வளரும்.

❀. ஆபிரிக்க அடர் காடுகளில் உள்ள கொடிய விஷத்துடன் கூடிய Spitting Cobra எனும் நஞ்சு பாம்புகள் இரையைக் கண்டவுடன் தூரத்தில் இருந்தே நஞ்சை உமிழ்ந்து இரையை செயலிழக்கச் செய்யும்.

❀. உலகின் முதலாவது எண்ணெய்க் கிணறு 1859ம் ஆண்டு எட்வின் எல்டிரேக் என்பவரால் ஐக்கிய அமெரிக்க இராட்சியத்தின் பென்சில் வேனியாவில் அமைக்கப்பட்டது. இது பெற்றோலியக் கிணறாகும்.

*ச.சந்திரமதி,*
*மகிழவட்டவான்.*

## சூரியன்

சூரியனிலிருந்து ஒளிக்கதிர் பூமியை வர எடுக்கும் காலம்.
**8 அரை நிமிடம்.**
சூரியனின் வெளிப்புற வெப்பநிலை.
**6000 பாகை செல்சியஸ்.**
சூரியனின் நிறை.
**$1.958 \times 10^{27}$ தொன் (பூமியை விட 33 லட்சம் மடங்கு)**
சூரியனின் விட்டம்.
**1392000km.**
சூரிய வட்டத்தின் விட்டம்.
**60,000 ஒளி வருடங்கள்.**
சூரியன் தன்னைத் தானே சுற்ற எடுக்கும் காலம்.
**பூமத்திய பகுதியில் 25.4 நாட்கள். துருவப்பகுதியில் 33 நாட்கள்.**
சூரியனின் புவியீர்ப்பு.
**பூமியைவிட 28 மடங்கு அதிகம்.**
சூரியனுக்கும், பூமிக்கும் இடையிலான தூரம்.
**மிக அருகில் - 147097000km.**
**மிக தூரத்தில் - 153099000km.**
காஸ்மிக் வருடம் எனப்படுவது.
**பால்வழி மண்டலத்தில் சூரிய குடும்பத்தின் ஒரு சுழற்சி (250 மில்லியன் வருடங்கள்)**
சூரிய குடும்பத்தில் மலட்டுக் கோள்.
**புதன்.**
சூரிய குடும்பத்தில் குளிர்ச்சியான கோள்.
**புளூட்டோ.**
சூரிய குடும்பத்தில் அதிக ஈர்ப்பு சக்தி உடைய கோள்.
**வியாழன்.**

*க.பியூறா,*
*தரம் - 12 கலைப்பிரிவு,*
*மட்.இந்துக் கல்லூரி.*

## பழமொழிகள்

01. கற்ற படி ஒழுகு.
02. அனாதைக்கு ஆதரவு கொடு.
03. பகிர்ந்து உண்.
04. சுத்தம் சுகம் தரும்.
05. தேடிக் கல்.
06. குழந்தை மனம் அறி.
07. வீண் வார்த்தை தவிர்.
08. என்னேர ஓய்விலும் முன்னேற முயலு.

*ச.சதீஸ், தரம் - 08,*
*மட்.மகிழவட்டவான்,*
*மகா.வித்தியாலயம்.*

## சிங்கம்

**காட்டு ராஜா சிங்கம்**
**கர்ச்சிக்கின்ற சிங்கம்!**
**வீரம் கொண்ட சிங்கம்**
**விரட்டி ஓடும் சிங்கம்!**
**வேட்டையாடும் சிங்கம்**
**வீறு கொண்ட சிங்கம்!**
**காட்டு ராஜா சிங்கம்**
**கர்ச்சிக்கின்ற சிங்கம்!**

த.பூஜிதா,தரம் - 02[ஸி]
மட்.வி.ம.ம.வி.

## தெரிந்து கொள்ளுங்கள்

❋.இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்ட ஆண்டு.
**1984.**

❋.ஹிரோசிமா நாகசாகி குண்டு வெடிப்பு நிகழ்ந்த ஆண்டு
**1945 ஓகஸ்ட்.**

❋.இந்தியாவில் அணு ஆயுதக் கொள்கை தொடங்கிய ஆண்டு.
**1964 ஒக்டோபர் 16.**

❋.விண்கலத்தின் பெயர்.
**அப்பலோ 11.**

❋.முதன் முதலில் மனிதன் சந்திரனில் காலடி எடுத்து வைத்த ஆண்டு.
**1969 ஜூலை 20.**

*கே.எல்.ஹில்மி,*
*சாய்ந்தமருது.*

## படித்ததில் பிடித்தவை

※.உடல் ஊனமுற்றோர்களில் பலர் மிகப்பெரிய மேதைகளாக இருந்துள்ளார்கள். அவர்களுள், கவிஞர் பைரன் (ஒரு நொண்டி) ஹெலன் கெல்லர் (குருடும், செவிடும்) இசை மேதை பெத்தோவன் (செவிடர்)

※.தன்னுடைய வாழ்க்கையின் இறுதிநாள் வரை ஒருநாள் கூட வாய்விட்டுச் சிரிக்காமல் வாழ்ந்த புகழ் பெற்ற பேரரசன்.
மாவீரன் நெப்போலியன்.


※.டோக்கியோவிலுள்ள வீதிகளுக்குப் பெயர்களுக்குப் பதில் எண்களே குறிப்பிடப்படுவதால், தெரு/வீதியை இனங்காண்பது வெகு சுலபமாகும்.

※.முதலாவது பூரண எண் 6 எனப்படுகின்றது. இதற்கான காரணம் வருமாறு.
I ஆறினை ஒன்றாலும், இரண்டாலும், மூன்றாலும் வகுக்கலாம்.
II ஒன்றையும், இரண்டையும், மூன்றையும் கூட்டினால் ஆறு வரும்.

※.யானைகள் தங்களுடைய காதுகளை எப்போதும் அசைத்துக் கொண்டேயிருக்கும். இதற்கான காரணம், தன்னுடைய உடலையும் இரத்த ஓட்டத்தினையும் குளிர்ச்சியாக்கவே அது அவ்வாறு செய்கின்றது.

※.புகழ் பெற்ற விஞ்ஞானி மைக்கல் பரடே என்பவரினால் கூறப்பட்ட சக்தி வாய்ந்த பொன் மொழிகளில் ஒன்று வருமாறு.
''வெற்றி அடைவதற்காக உன்னால் முடிந்த மட்டும் முழு மூச்சாக உழை. ஆனால் வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்க்காதே.

*க.கிருஷ்ணகுமார்,*
*தரம் - 09,*
*மட்.தாழங்குடா ஸ்ரீ*
*விநாயகர் வித்தியாலயம்.*



கி.ரொபின்சன்,
தரம் - 08,
மட்.ஆரையம்பதி,
மகா.வித்தியாலயம்.

# ஆசியாவை அழவைத்த ஆழிப் பேரலை

ஆசியாக் கண்டம் சோதனையையும், வேதனையையும் சுமக்கின்றது என்றால் யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது. கடந்த 26.12.2004ம் திகதி ஒரு ஞாயிற்றுக்கிழமை போயா விடுமுறையாகும்.

அதற்கு முன்னைய நாள் ஜேசுகிறிஸ்த்து பிறந்த தினமாகும். இந்நாளில் நடக்கப்போகும் விபரீதத்திற்கு எந்த அறிகுறியும் காட்டாது சூரியனும் தனது வழமையான முறையிலே உதித்து தனது ஒளியை வீசிக் கொண்டிருந்தது. திடீரென காலை 8.30 மணியிருக்கும் எங்கும் ஒரே பரபரப்பும், பீதியும் மக்கள் மத்தியில் ஏற்பட்டது.



வழமைக்கு மாறாகக் கடல் அலைகள் இராட்சத அலைகளாக உருப்பெற்றுக் கரையோரக் கிராமங்களை நோக்கி வருகின்றது. "ஓடுங்கோ, ஓடுங்கோ கடல் வருகிறது" எனச் சொல்லி முடிப்பதற்குள் பல ஆயிரக் கணக்கான உயிர்களும், பல கோடிக் கணக்கான சொத்துக்களும், உடமைகளும் அலைகளால் காவு கொள்ளப்பட்டது. எங்கும் ஒரே ஒப்பாரி, மரண ஓலங்கள் தொடர்ந்து கொண்டேயிருந்தன.

**சுனாமி என்றால் என்ன?**

இச்சொல் யப்பானிய மொழியிலிருந்து தோன்றி "சு" என்பது துறைமுகம் என்றும், "நாமி" என்பது அலை என்ற பொருளும் வழங்கப்பட்டு துறைமுக அலை எனத் தமிழில் அழைக்கப்பட்டது. மேலும் சுனாமி என்ற சொல்லை "கடற் கோள் அல்லது இராட்சதப் பேரலைகள்" எனவும் அழைக்கலாம்.

"ஒரு நீர் நிலையில் நீரை இடம் பெயர்க்கும் கணநேர குழப்பத்தால் உருவாக்கப்படும் மிகமிக நீண்ட அலைவு காலத்தையும் கொண்ட நீர் அலைகளின் வரிசை" "சுனாமி" என்றழைக்கப்படும்.

**சுனாமி அலைகள் ஏற்படுவதற்கு முன் தென்படும் அறிகுறிகள்:-**

**1) கடற்கரையில் கடல் உள்வாங்கிப் பின்னே செல்லும்.**

**2) கடல் வித்தியாசமான (வழமைக்குமாறான) நிறத்துடன் கடல் அடியில் உள்ள பாசி, தழைகள், குழைகள், வண்டல் என்பன மிதந்து காணப்படும்.**

**சுனாமியின் தாக்கம்:-**

ஆசியாவின் வரைபடத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தியிருப்பதாக அமெரிக்காவின் பூகோளவியலாளர் கள் தெரிவிக்கின்றனர். சுமத்திராவிற்கு அருகிலுள்ள சிறிய தீவுகள் தென்மேற்காக 20 மீற்றர் நகர்ந்துள்ளன. சுனாமி அ லையால் அந்தமான், நிகோபாரில் ஒரு தீவு இரண்டாகப் பிளந்து விட்டது.

சுனாமி அலைகள் ஏற்படுவதற்குக் காரணமாகவிருந்த இப்பூகம்பத்தினால் பூமியின் சுழற்சி வேகம் அதிகரித்துள்ளதாகவும், பூமியின் மையத்தை 3 மைக்றோ செக்கன்களால் சுழற்றியுள்ளதுடன் அதன் அச்சின் உறுதியும் நிலைகுலைந்துள்ளதாகவும், ஒரு நாளின் நேர அளவு செக்கனின் சில பகுதிகளால் குறைவடைந்துள்ளதாகவும், பூமியின் அச்சு ஏறத்தாள ஒரு இஞ்சியளவு சாய்ந்துள்ளதாகவும் அமெரிக்கா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவின் ஆய்வகத்தைச் சேர்ந்த பூகோள பௌதீகவியலாளர்கள் "ரிச்சர்ட் குறோஸ்" கூறியிருக்கிறார்.

இது இலங்கை, இந்தோனேசியா, இந்தியா, அந்தமான் நிக்கோவாதீவுகள், தாய்லாந்து, மலேசியா, மாலைதீவு, சோமாலியா, மியன்மார், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலுள்ள மூன்று இலட்சம் உயிர்களைப் பலி கொண்டது எனலாம்.





மேலும் இலங்கையை எடுத்துக் கொண்டால் குறிப்பாக வடக்குக் கிழக்கைப் பெரிதும் பாதித்துள்ளது. இதற்குக் காரணம் நீரினால் சூழப்பட்ட பெரும் பகுதி வடக்குக் கிழக்கிலே உண்டு அதனாலாகும்.

பாதிப்பிலிருந்து மீண்ட கரையோரப் பகுதி மக்களை உளவியல் ரீதியாகவும், தாக்கமடைய வைத்துள்ளது. இலங்கையில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பலியாகியிருக்கின்றனர். குறிப்பாக அம்பாறை மாவட்டக் கரையோரப் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அழிவுக்குள்ளும் பல அதிசயங்களும் நடந்தேறியுள்ளன.

அக்கரைப்பற்றுப் பகுதியில் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த முஸ்லிம் மீனவர்கள் சுனாமி தாக்கிய வேளையில் விஷ்ணு பகவான் கடலுக்கடியில் பாம்பின் மீது பள்ளி கொண்டிருந்ததைக் கண்டு இருக்கின்றனர்.

மட்டக்களப்பு நாவலடியில் குழந்தையொன்று மரத்தில் தொங்கி உயிருடன் மூன்று நாட்களின் பின் மீட்கப்பட்டது.

எது எவ்வாறாயினும் பாதிக்கப்பட்ட மக்களுக்கென்று ஏராளமான உதவிகள் இலங்கைக்குக் கிடைத்திருக்கின்றன, கிடைத்துக் கொண்டும் இருக்கின்றன, கிடைக்கவும் இருக்கின்றன. இதற்கு முன்னர் இலங்கை பாரிய பொருளாதாரச் சிக்கலில் இருந்தது. இதையாவது சரியாகப் பயன்படுத்தினால் இவற்றில் இருந்து மீளலாம்.

மேலும் இப்பணத்தைப் பெறுவதாக இருந்தால் விடுதலைப் புலிகள் கையொப்பமிட வேண்டும். இல்லையாயின் இவை திரும்பிவிடலாம். ஆனால் அரசாங்கம் சுனாமிக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதாகக் கூறி மக்களை ஏமாற்றுகின்றது.

இது சுனாமியினால் கல்வி, பொருளாதாரம், மனித உயிர்கள் எனப் பல சேதத்திற்குள்ளாகியது. இவற்றில் கல்வியை எடுத்துக் கொண்டால் வடக்குக் கிழக்கிலே 24 கல்வி வலயங்கள் இருக்கின்றது. இக்கல்வி வலயங்கள் ஆரம்பத்தில் கல்வியில் பின்னடைவைச் சந்தித்திருந்தது.

அதாவது போர்த்தாக்கங்களாலும், ஆசிரியர்கள் பற்றாக் குறைகளாலும் இருக்கையில் கடந்த வருடம் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் மீண்டும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதைக் காணமுடிகின்றது.

**-தாயகன்-**

## கனேடியத் தேர்தல் குறித்து தமிழ் உணர்வாளர்கள் விழிப்பாக இருத்தல் அவசியம்

### அன்றூ ராசையா



கடந்த மாதம் ஸ்ரீலங்காவில் முடிவடைந்த தேர்தலில் தமிழர்களால் வகுக்கப்பட்ட மதிநுட்பமான நடவடிக்கையின் மூலம் ஸ்ரீலங்கா அரசாங்கம் எதிர்கொள்ளும் சர்வதேச அழுத்தங்களை நாம் நன்கு அறியக்கூடியதாகவுள்ளது.

இதேபோல, எதிர்வரும் ஜனவரி மாதம் கனடாவில் நடைபெறவுள்ள தேர்தலில் தமிழர்களின் செல்வாக்கு அல்லது நடவடிக்கைகள் எவ்வாறு அமையும்? கனேடிய மண்ணில் வாழ்ந்துவரும் இரண்டு இலட்சத்திற்கு அதிகமான தமிழீழ மக்களின் வாக்குப்பலம் கனேடிய அரசியலில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தும்? இவற்றை நாம் ஆராய்வது பொருத்தமானது.

கனேடிய அரசியலில் தமிழர்களின் செல்வாக்கினை அதிகரிக்க வேண்டுமாயின், எம்மவர்கள் சகல கட்சிகளிலும் அங்கத்தவராக இருக்க வேண்டியது மிக முக்கியமானதும், அவசியமானதொன்றாகும்.

எனினும், எந்தக் கட்சி ஆட்சிக்கு வரும், எதுக்கு ஆதரவு அளித்தால் எமது 'நோக்கம்' நிறைவேறும் என்பதை துல்லியமாகக் கணிக்க வேண்டிய பொறுப்பு 'எங்கள் அமைப்புக்களுக்குள்ள' முக்கிய கடமையாகும். இந்த வரலாற்றுப் பொறுப்பை 'எங்கள் அமைப்புக்கள்' சரிவரச் செய்வார்கள் என நம்புகிறோம்!

அடுத்த வருடம் நடைபெறவுள்ள கனேடியத் தேர்தலில் தேசிய அரசியல் கட்சியான பழமைவாதக் கட்சியின் சார்பாகத் 'ஸ்ரீலங்காத்' தமிழர் என்று சொல்லப்படுகின்ற ஒருவர் போட்டியிடுகின்றார்.

இவரது வெற்றியினை உறுதிப்படுத்தம் முகமாக பல்வேறு தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்த பிரமுகர்கள் தமிழ் மக்களுக்குக் 'கனேடிய அரசியல்' குறித்த நெழிவு, சுழிவுகளைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த வேட்பாளரின் பகுதியில் கணிசமான கனேடியத் தமிழர்கள் வாழ்கின்றனர். எனவே இவர்களின் வாக்குகளைக் கவரும் முகமாகவும், ஒரு குறுகிய பார்வையுடனான அரசியல் ஆதாயத்திற்காகவும் 'எங்கள் அமைப்புக்களில்' சிலர் இவரை ஆதரிப்பதற்கு முடிவுசெய்து, பிரசாரங்களை இவருக்காக வழங்கி வருகின்றனர்.

இவருக்கு வாக்களிப்பதற்கு முன்னர், இவர் யார்? எமது தமிழ்ச் சமூகத்திற்கு என்ன செய்தார்? இவ்வளவு காலமும் எங்கிருந்தார்? தமிழீழம் தொடர்பான இவரது நிலைப்பாடு என்ன? எம் தேசியத் தலைவனின் மீது இவர் கொண்டுள்ள கருத்து என்ன? என்பதனையும் இவருக்கு ஆதரவு தெரிவிக்கும் 'எம்மவர்கள்' எமது மக்களுக்கு தெரிவிப்பது முக்கியம். ஒருவேளை 'எங்கள் அமைப்புக்களினால்' இவர் பற்றிய விபரங்கள் சேகரிக்க முடியாமல் போயிருந்தால், இந்த ஆய்வின்மூலம் தெரிந்து கொள்ளலாம்.

'ஸ்ரீலங்காத்' தமிழரான இவர் பெயர் வின்செனட் வீரசுந்தரம், ரொரன்ரோவில் சுவாரகா ரவல்ஸ் என்னும் நிலையத்தின் உரிமையாளரும், விமானச்சீட்டு முகவராகவும் உள்ளார்.

ரொரன்ரோவைத் தளமாகக்கொண்டு இயங்கும் இரண்டு சிங்கள மாதாந்தப் பத்திரிகையின் முக்கிய விளம்பரதாரர்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அனுசரணை மற்றும் ஆதரவுடன் ரொரன்ரோ வாழ் சிங்கள இனவாத அமைப்பின் அரவணைப்பில், ஸ்ரீலங்கா புலனாய்வாளர்களின் வழிநடத்தலில் ஆரம்பிக்கப்பட்ட Sri Lanka Business Council - Director பதவி வகித்தது வருகிறார்.


இந்த அமைப்புத் தொடர்பாக புதினம் இணையத் தளத்தில் கார்த்திகை மாதம் 12 ஆம் திகதி வெளியான செய்திகளையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும்:

"கனடாத் தமிழ் வர்த்தக சம்மேளனம் என்ற கனடியத் தமிழர்களின் அமைப்பைப் பிளவுபட வைத்து சிறிலங்காத் தூதரகத்தின் முழு அனுசரணையுடன் உருவாக்கப்பட்டதே இந்த கனேடிய சிறிலங்கா வர்த்தக சமமேளனம். இவர்கள் கடந்த காலத்தில் இலங்கை ஒரு நாடாளுமன்றக் குழுவுடன் விஜயம் செய்திருந்தனர்." -

**இணைப்பு: புதினம்**

# பலாலிக்கு இந்தியா உதவினால் தமிழ் நாடு காஷ்மீராக மாறும்

## வை.கோ எச்சரிக்கை



பலாலி சிறிலங்கா இராணுவ விமானத் தளத்தைச் சீரமைக்க இந்திய அரசாங்கம் உதவினால் தமிழ் நாடு காஸ்மீராகும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வை.கோ எச்சரித்துள்ளார்.

ஈரோட்டில் கடந்த திங்கட் கிழமை பேராசிரியர் சு.ப. வீரபாண்டியனின் 'பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம்' நூலை வெளியிட்டு வைகோ பேசியதாவது:

பழங்காலத்தில் இருந்தே ஈழத்தில் தமிழர்கள் தனி இனமாக வாழ்ந்ததற்கு சான்று உள்ளது. சிங்கள மொழி பிரதானப்படுத்தப்பட்டபோது தான் தனி ஈழப்பிரச்சினை எழுந்தது. தனி ஈழம் அமைப்பது தான் இலங்கைப் பிரச்சினைக்கு ஒரே தீர்வாக இருக்க முடியும்.

இந்தியா-சிறிலங்கா இராணுவ ஒப்பந்தம் அண்மையில் கையெழுத்தாக இருந்தபோது அதற்கு எதிராக பிரதமர், சோனியா காந்தி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரிடம் பேசினேன். அதையடுத்து ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

இப்போது சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் பலாலி விமான நிலையத்தின் ஓடுதளத்தை இந்தியா உதவியுடன் சீரமைத்து வருவதாக சிறிலங்கா விமானப்படை தளபதி டொனால்ட் பெரேரா கூறியுள்ளார். இந்திய அதிகாரிகள் விரைவில் பார்வையிட வர இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பலாலி விமானத்தளத்தைப் பயன்படுத்தி தமிழர்களை சிறிலங்கா இராணுவம் கொன்றது. எனவே இந்த விமானத்தளம் சீரமைக்கப்பட்டால் தமிழர்களுக்கு ஆபத்து ஏற்படும். தமிழர்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தி தமிழர்கள் அழிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

சிறிலங்கா இராணுவத்துக்கு ஏற்கெனவே இந்தியா உதவி செய்துள்ளது. மீண்டும் இதுபோல இந்தியா அந்த நாட்டு இராணுவத்துக்கு உதவக்கூடாது. இலங்கையிலே போர் மேகம் சூழ்ந்திருப்பதாக பத்திரிகை செய்திகள் வெளியாகின்றன.

சிறிலங்காவுக்கு உதவி செய்யும் முடிவை பிரதமர் மன்மோகன் சிங் எடுக்கமாட்டார். ஆனால் ஒரு சில இந்திய அதிகாரிகள், சிறிலங்காவுக்கு உதவ தயாராக இருப்பதாக எனக்குத் தகவல் வந்துள்ளது.

அந்த அதிகாரிகளுக்குச் சென்றடையும் வகையில் நான் சொல்வதை இங்கே உள்ள உளவுத்துறையினர் கவனமாகக் குறிப்பெடுத்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுக்கு வன்முறை மீது நம்பிக்கை இல்லை. ஆனால் சிறிலங்காவுக்கு நீங்கள் உதவி செய்தால் எங்கள் தமிழ்நாட்டு இளைஞர்களைக் கட்டுப்படுத்த முடியாது. தமிழ்நாடு இன்னொரு காஸ்மீராகிவிடும். இதை அப்படியே அந்த அதிகாரிகளுக்குச் சென்றடையுமாறு குறிப்பெடுத்து அனுப்புங்கள்.

இந்தியா என்பது நாடு அல்ல உபகண்டம். இக்கருத்தை நாடாளுமன்றத்தில் பலமுறை பேசியுள்ளேன். தேசிய மொழிகள் பட்டியலில் தமிழ் இல்லையென்றாலும் வேற்றுமையில் ஒற்றுமை என்ற கொள்கையை ஏற்றுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தமிழுக்கு ஆபத்து வந்தால் தேசிய இனத்தின் உரிமைக்காகப் போராட வேண்டிய சூழல் உருவாகும்.

மதத்தால் பாகிஸ்தானும், இனத்தால் அயர்லாந்தும், மொழியால் வங்காளதேசமும் பிரிந்தது. அப்படியொரு நிலை இந்தியாவுக்கு வந்து விடக்கூடாது. இந்தக் கருத்து அவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கும் என்றார் வைகோ.

இந்த நிகழ்ச்சியில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன், திரைப்பட இயக்குநர் மணிவண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சங்கரி எப்பொழுது தமிழனாவாய்?



அந்த மனுசன் பெரியபாவம், பப்பா மரத்திலே ஏற்றிவிட்டு விழுத்தி விடுகிறார்கள் ஒருதரம் மறுதரம் அந்த மனுசனை உச்சாணிக்கொம்பில் ஏற்றி விட்டு உலுப்பி வீழ்த்தி விடுகின்றனர். ஏன்தான் இப்படிச் செய்கிறார்களோ தெரியவில்லை. பாவம் அந்த மனுசன்.

2004 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அந்த மனுசனைத் தமிழ்மக்கள் துரத்தியடித்து விட்டனர். தமழ் மக்கள் சார்பாக நாடாளுமன்றம் செல்ல உனக்குத் தகுதியில்லை என்று மக்கள் தீர்ப்பளித்திருந்தனர். அவர் போய் ஒருமூலையில் படுத்துக்கொண்டார்.

இந்த மனுசன் புலிகளைப் பயங்கரவாதி என்று சொன்னவர், தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகாளக புலிகளை ஏற்கமுடியாது என்று சொன்னவர். அவர்போய் மூலையில் படுப்பதா? விடக்கூடாது. எப்படியும் அவரை நாடாளுமன்றத்திற்குள் அனுப்பவேண்டும் என்று காவி உடை உடுத்துவோர் தீர்மானித்தனர்.

உறங்கிக் கொண்டிருந்த மனிதனைத் தட்டியெழுப்பி எங்கள் தேசியப் பட்டியலில் உமக்கு இடம்தருகிறோம் என்றனர். நம்பினார் அவரும், ஆனால் தூக்கிக்கொண்டு போனவர்கள் எங்களுடைய மொழியும் தெரியாது, காவி உடையும் இல்லை. இவரை எப்படி எங்கள் சார்பில் நாடாளுமன்றத்தில் விடுவது என்று எண்ணியவர்களாக வழியிலேயே போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

திரும்பவும் தனது இடத்திற்குவந்து சேர்ந்தவருக்கு நாடாளுமன்ற ஆசை விடவில்லை. இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார். அன்றைய ஜனாதிபதி சந்திரிகாவுக்குக் கடிதங்கள் பலபக்கங்களில் எழுதினார். புலிகளை அக்கடிதங்கள் மூலம் திட்டித்தீர்த்தார். சிங்கள முதலாளிமாரின் செய்தித்தாள்களுக்குப் புலிப்பயங்கரவாதம் பற்றி எழுது எழுது என்று எழுதினார்.

தமிழ் மக்ககளை ஆயுதங்கள் மூலம் புலிகள் அடக்கி வைத்துள்ளார்கள் என்று எழுதினார். புலிகளால் தமிழ் மக்களின் சனநாயகம் பறிக்கப்பட்டு விட்டது என்று எழுதினார், சிறுவர்களைப் புலிகள் படைகளில் சேர்க்கிறார்கள் என்று எழுதினார். இவ்வாறு பல குற்றச்சாட்டுக்ககளை உண்மைக்குப் புறமாக எழுதிக்கொண்டேயிருந்தார்.

வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் இவ்வாறே பலமுறை கடிதங்களை எழுதிக்குவித்தார் இவை எல்லாம் கொழும்பு ஊடகங்களில் வந்தவண்ணம் இருந்தன. இதற்கு ஏதாவது பிரதி உபகாரம் கிடைக்கும் என்று. பாவம் மனுசன் கணக்குப் போட்டிருந்தார்.

லக்ஷ்மன் கதிர்காமரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதிவு காலியாக இருந்தது கண்ணுக்குத் தெரிந்தது. அவர்கள் ஏற்கனவே அவ்விடத்திற்கு டலஸ் அழகப்பெருமாவை நியமிப்பதென முடிவேடுத்தனர். ஆனால் இந்த மனுசனயும் கணக்கிலெடுப்பது போல் பாவனை காட்டினர்.


இவரும் தலைகால் தெரியாத மகிழ்ச்சியில் நித்திரைகூட இல்லாமல் இருந்தார் ஓடிவந்து தலைக்குமேல் தூக்கிக்கொண்டு ஓடினார்கள். மகிழ்ச்சியில் நினைந்திருந்தவரை நாடாளுமன்றப் படிக்கட்டுகளுக்கு அருகில் பொத்தென போட்டுவிட்டார்கள். ஏனெனில் ஏற்கனவே அழகப் பெருமா நாடாளுமன்றத்திற்கு வந்துவிட்டார் என்ன செய்வது? திரும்பிவிட்டார் தனது பழைய இருப்பிடத்திற்கு. பதவி ஆசை இருந்தால் இன்னும் தமிழீழ விடுதலைப் போருக்கெதிராக எழுதிப்பார்க்கட்டும். அடுத்த முறையாவது போடாமல் தூக்கிக்கொண்டு போவார்களா என்பதை? பாவம் சங்கரி நீயும் , தமிழ்பேசுபவந்தானே என்பது சிங்கள பேரினவாதத்திற்கு நன்கு தெரியும்.

-பரணி-

# படையினர் கொடூரத்துக்கு எதிராக கிளிநொச்சியில் கண்டனப் பேரணி







புங்குடுதீவில் இளம் பெண் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டு பாழ் கிணற்றில் வீசியெறிந்த சம்பவம் யாழ். குடாநாட்டு மக்களைச் சீற்றமடைய வைத்திருக்கிறது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக சமூகம் மேற்கொண்ட அமைதிப் பேரணியின் போது படையினர் மேற்கொண்ட அடாவடித்தனத்தால் மாணவர்கள், விரிவுரையாளர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவங்களின் எதிரொலியாக கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் வடக்குக் கிழக்கு அபிவிருத்திக்கான பெண்கள் குழு கண்டனப் பேரணியை நடாத்தியதுடன், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மனுவொன்றை யும் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- 16.12.2005 அன்று புங்குடுதீவில் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டு கிணற்றில் போடப்பட்ட தர்சினியின் கொடூரச் சம்பவம் அக்கிராம மக்களை அதிர வைத்திருக்கின்றது. தர்சினியின் படுகொலை யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பரவி மக்களுக்கும் இராணுவத்திற்குமிடையே ஓர் பதற்றமான நிலையை உருவாக்கியுள்ளது.

கடற்கடையினர் கூறுவது போல் போதுமான ஆதாரம் இல்லாத போதும் இராணுவத்தினரால் தமிழ்ப்பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்ற சரித்திரம் தமிழ்ப்பெண்களின் மனதில் இன்னும் ஆறவில்லை. சட்ட முறையில் தமிழ்ப்பெண்களுக்கு நம்பிக்கை இல்லாததன் காரணம் பல தடவைகளில் சட்டம் அவர்களைக் கைவிட்டுவிட்டது.

1996 இல் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட கிருசாந்தியின் வழக்கு நீதிமன்றத்திற்கு எடுத்துச்செல்லப்படவில்லை. ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரின் சர்வதேச மன்னிப்புச்சபை பின்வருமாறு கூறியுள்ளது. வடக்குகிழக்கில் பிரபல்லியம் குறைந்த வழக்குகளில் உதாரணமாக:- மட்டக்களப்பு 1997 முற்பகுதியில் அறிவிக்கப்பட்ட பல வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விளைவு தரும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. நீதி மன்றத்திற்கு குற்றவாளிகளைக் கொண்டுவரப்பட்ட மிகச் சில வழக்குகளில் கற்பழிப்பில் பாதிக்கப்பட்டவர்கள் தம்முயிருக்கு பயந்து நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கப்படவில்லை.

**1990ல் நடந்த பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்கள்:**

1. 31.12.1996ல் சிவசோதி மீதான கற்பழிப்பு.
2. 17.05.1997ல் கோணேஸ்வரி கற்பழிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டமை,
3. 05.09.1997ல் 7 வயது சிறு தேனுகாவின் மீதான கற்பழிப்பு
4. 16.13.1998ல் பிரேமலதா மீதான கற்பழிப்பு.
5. 17.03.1998ல் செல்வராணி (வாய்பேசமுயாத காது கேட்காதவா) மீதான கற்பழிப்பு



6. 06.08.1997ல் கிருசாந்தி மீதான கற்பழிப்பு
7. 14.04.1998 வசந்தி மீதான கற்பழிப்பும், (இவா் மீதான சாட்சியை எரித்தலும்.)
8. 03.10.1999ல் ராஜேஸ்வரி மீதான கற்பழிப்பு
9. 28.12.1999ல் சாரதாம்பாள் மீதான கற்பழிப்பு
10. ஒரு தாயின் கற்பழிப்பு செம்மணியில் புதைக்கப்பட்டது.

**போர் நிறுத்தத்தின் பின்னரான பெண்கள் மீதான பாலியல் வன்முறைச் சம்பவங்கள்:**

1. 05.08.2005ல் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள (SLA 223 பிறிகேட் தலைமை அலுவலகத்தில் இருந்து 50 மீ ற்றா் தூரத்திலுள்ள மெதடிஸ் கல்லூரியைச் சேர்ந்த மாணவியை வகுப்பறையில் வைத்து கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படமை.
2. 28.10.2005ல் பெண்ணின் வீட்டில் கற்பழிப்புச்செய்ய எத்தனிக்கப்பட்டபின் குற்றவாளி இராணுவப் பாதுகாப்பு நிலையத்துள் புகுந்தமை.
3. 13.12.2005ல் எழுது மட்டுவாளிலுள்ள SLA 555 பிறிகேட் இராணுவச் சிப்பாயால் பெண் ஒருவா் கடத்தப்பட்டு கிராம வாசிகளால் மீட்கப்பட்டமை.
4. 16.12.2005ல் புங்குடுதீவைச் சேர்ந்த தர்சினி கடற் படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டமை. பாதுகாப்பு என்ற போர்வையில் இலங்கை இராணுவத்தினரால் ஆக்கிரமிப்புச் செய்திருக்கும் பிரதேங்க ளில் தொடர்ந்தும் இப்படியான சம்பவங்கள் இனியும் நடைபெ றமாட்டாதென்பது கேள்விக்குறியாகவேயுள்ளது? பெண்கள் மீதான வன்முறைகளை உடன் நிறுத்த வேண்டும்.

வடகிழக்கு அபிவிருத்திக்கான பெண்கள் குழு.

# கேள்விக் குறியாகிவிட்ட சிறிலங்கா புலனாய்வுத்துறை

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிட்ட நிலையில் இருப்பதாக இராணுவத் தரப்பில் கூறப்பட்டு வருகிறது.

இரண்டு பற்றாலியன்களைக் கொண்ட சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை, ஆயிரம் அதிகாரிகளையும் வீரர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது.

விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவது மட்டுமே ஒரு காலத்தில் இதன் பணியாக இருந்தது.



ஆனால், 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆழ ஊடுருவும் படைப் பிரிவு ஒன்றை அமைத்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தாக்குதலையும் தொடங்கியது. அதன் பின்னர் வடக்கு-கிழக்குப் போர்முனையில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நிழல் யுத்தம் ஒன்றைத் தொடங்கிய பின்னர் இராணுவப் புலனாய்வுத்துறையின் முக்கியத்துவம் மேலும் வலுப்பெற்றது.

ஆழ ஊடுருவும் படையணியின் செயற்பாடுகளும், புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்தின் பிரதான பாத்திரத்தை ஏற்றுக்கொண்டதும், இராணுவத்தின் புலனாய்வுத்துறைக் கட்டமைப்பையே இப்போது ஆட்டம் காணும் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தைப் பொறுத்த வரையில், ஆட்லறிப் பிரிவையோ அல்லது காலாட்படைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள்தான் உயர்மட்டத் தலைமைப் பொறுப்பை இன்றுவரை வகித்து வருகின்றனர். பிற்காலத்தில் இவர்கள் வெளிநாடுகளில் புலனாய்வுத்துறை தொடர்பான கற்கை நெறிகள், பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டனர். ஆனால் அடிப்படையில் இவர்கள் புலனாய்வுத்துறை பிரிவையும் சேர்ந்தவர்களாக இருக்கவில்லை.

இராணுவப் புலனாய்வுத்துறையின் முதலாவது பணிப்பாளரான ஜெனரல் லயனல் பலகல்ல ஆட்லறி படைப் பிரிவைச் சேர்ந்தவராவார்.

இதேபோலவே சுனில் தென்னக்கோன் ஆட்லறிப் படைப் பிரிவையும், சந்த கொட்டேகொட, சூல செனிவிரட்ன, கபில ஹெந்த விதாரண, றிஸ்வி சக்கி ஆகியோர் காலாட்படைப் பிரிவையும் சேர்ந்தவர்கள்.

1990-களின் பிற்பகுதியில்தான் இராணுவப் புலனாய்வுத்துறையை, அடிப்படையில் இருந்து கட்டியமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனாலும் காலாட்படைப் பிரிவுகளில் இருந்தும், ஏனைய சேவைப் படைப்பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள்தான் இப்போதும் இராணுவ புலனாய்வுத்துறைக்கு தலைமையேற்கின்றனர்.

சிறிலங்கா இராணுவத்தில் தொழில்சார் புலனாய்வுத் துறை கட்டியெழுப்பப்படவில்லை என்பதே வெளிப்படையான உண்மை.

ஆழ ஊருடுவும் படையணியை உருவாக்கியமை இராணுவப் புலனாய்வுத்துறையின் படைநிலை வளர்ச்சியில் ஒரு புதிய அம்சமாகக் கருதப்பட்டது. அதன் பின் புலிகளுக்கு எதிராக இப்போது நடத்தப்பட்டு வருகிற நிழல் யுத்தமும் ஒரு வளர்ச்சி நிலை என்று இராணுவத்தரப்பு கருதுகிறது.

நிழல் யுத்தத்துக்காகவும் ஆழ ஊடுருவவும் சட்டவிரோத பாதாள உலகக் குழுக்களைத் தொடர்பு கொள்வதும், பாதாள உலகக் குழுக்களை சிறிலங்கா புலனாய்வுத்துறையினரே உருவாக்குவதும் நடந்து வந்தது.

இத்தகைய செயற்பாடுகளினால் கடந்த சில ஆண்டுகளில் 12 இராணுவ புலனாய்வு அதிகாரிகள், 60-க்கும் மேற்பட்ட இராணுவ புலனாய்வுத்துறையினர் மற்றும் நூற்றுக்கும் அதிகமான தகவல் வழங்குவோரை இப் பிரிவு இழந்திருக்கிறது.

முக்கிய இராணுவப் புலானாய்வுத்துறை அதிகாரிகள் அதிக பாதுகாப்பு மிக்க கொழும்புப் பகுதிகளிலேயே சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதன் மூலம் ஒட்டுமொத்த சிறிலங்கா இராணுவத்தின் பாதுகாப்பு என்பதும் சிறிலங்காவின் பாதுகாப்பு என்பதும் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

இவர்களில் லெப். கேணல் நிசாம் முத்தலிப் மற்றும் கேணல் றிஸ்வி மீடின் போன்ற கீழிருந்தே புலனாய்வுத்துறை நடவடிக்கைகளுக்கென வளர்த்தெடுக்கப்பட்ட உயர் அதிகாரிகளும் இதில் அடங்குவர். நிசாம் முத்தலிப் கொலையில் புலனாய்வுத்துறைக்கும் பாதாள உலகக் குழுக்களுக்குமான தொடர்பு இலேசாக கசிய வந்தது.

ரிஸ்வி மீடினின் கொலையில் பாதாள உலகக் குழுவினருடனான பகிரங்கத் தொடர்பு அம்பலப்பட்டது. மிலேனியம் சிற்றி மறைவிடத்தை ரணில் அம்பலப்படுத்தியதையடுத்து, சகுல் ஹமீத், நிலாம் உள்ளிட்ட பல அதிகாரிகள் தலைமறைவு வாழ்க்கை நடத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அடுத்தடுத்து அதிகாரிகளையும் புலனாய்வாளர்களையும் இழந்து, நெருக்கடிகளின் உச்ச கட்டத்தில் சிக்கிப்போயிருக்கும் இராணுவப் புலனாய்வுத்துறைக்குப் பேரிடி புதிய இராணுவ தளபதி சரத் பொன்சேகா உருவில் வந்து விட்டதாக கொழும்பு இராணுவ நோக்கர்கள் கருதுகின்றனர்.

சரத் பொன்சேகா போன்ற கடும்போக்கு இராணுவவாதிகள், எதையுமே நேரடியாக எதிர்கொள்ள நினைப்பவர்கள் என்பதால் இராணுவப் புலனாய்வுத்துறையின் நடவடிக்கைகளை அங்கீகரிக்க மாட்டார்கள் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதற்கு முன்னர் இராணுவத் தளபதிகளாக இருந்த ஜெனரல் லயனல் பலகல்லவும். சாந்த கொட்டேகொடவும் இராணுவ புலனாய்வுத்துறைப் பிரிவில் பணியாற்றியவர்கள் என்பதால் புலனாய்வு நடவடிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

சரத் பொன்சேகா ஒருபோதும் இராணுவ புலனாய்வுத்துறையுடன் தொடர்புபடவே இல்லை என்பதுடன், அவரது பாதையும் வேறாக இருப்பதால், இதற்கு முன்னர் இருந்த முக்கியத்துவம் இனி மேலும் தொடர வாய்ப்பில்லை என்பதை சில நிகழ்வுகளின் மூலம் சரத் பொன்சேகாவே தன் வாயால் தெரிவித்திருப்பதை ஆதரமாகக் காட்டி அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுக் கொண்டவுடன் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஒரு கேள்வி எழுப்பப்பட்டபோது இராணுவ புலனாய்வுத் துறை திறமையாகவே செயற்படுகிறது என்றும், இதனால்தான் புலனாய்வுத்துறை அதிகாரிகள் குறிவைத்துப் படுகொலை செய்யப்படுவதாகக் கூறியிருந்தார் சரத்பொன்சேகா.

ஆனால், இராணுவத் தளபதி கடந்த வாரம் அரச சார்பு ஆங்கில வார இதழுக்கு அளித்த நேர்காணலில், இராணுவ புலனாய்வுத்துறையின் செயற்பாடுகள் திருப்திகரமாக அமையவில்லை. அது முற்றாக மறுசீரமைக்கப்பட வேண்டும். புலனாய்வுத்துறைகளிடமிருந்து களமுனையில் உள்ள அதிகாரிகளுக்கு முன்கூட்டியே தகவல்கள் கிடைப்பதில்லை.

இந்த நிலையை மாற்றியமைக்கும் வகையில் புலனாய்வுத்துறைக்கு புதிய அதிகாரிகள் நியமிக்கப்படுவர் என்றும், வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு தகுதி வாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்படுவர் என்றும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கிறார்.



இராணுவத் தளபதியான போது இராணுவ புலனாய்வுத்துறையின் செயற்பாடு குறித்து திருப்தி தெரிவித்த சரத் பொன்சேகா, அடுத்த சில நாட்களிலேயே இராணுவ புலனாய்வுத்துறை திறமையற்ற வகையில் செயற்படுவதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார். அந்த குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இராணுவ புலனாய்வுத்துறையால் படைத்தரப்புக்கு பெரியளவிலான பின்னடைவு ஏதும் ஏற்படாத நிலையில் சரத் பொன்சேகா இத்தகைய கருத்தை வெளியிட்டுள்ளார்.

தான் ஏற்கனவே கூறியபடியே புலனாய்வுத்துறை அதிகாரிகளை மாற்றியமைத்திருக்கிறார். இதுவரை இராணுவ புலனாய்வுத்துறை பணிப்பாளராக இருந்த பிரிகேடியர் றிஸ்வி சக்கியை அந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக பிரிகேடியர் தம்மிக்க லியனகே நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரிகேடியர் றிஸ்வி சக்கி நீண்ட காலமாக மட்டக்களப்பில் பிரிகேட் தளபதியாக இருந்தவர் என்பதுடன், நிழல் யுத்தத்துக்கான குழுக்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவர். கேணல் மீடின் கொல்லப்பட்ட பின்னர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரணவை அரசு வெளிநாட்டுக்கு அனுப்பியதையடுத்து பிரிகேடியர் சக்கிதான் புலனாய்வுத்துறைக்குப் பொறுப்பாக இருந்தார்.

யாழ். குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக புலனாய்வுத்துறை திறமையாகச் செயற்படவில்லை என்பதுதான் சரத் பொன்சேகாவின் கருத்தாகும்.

புலனாய்வுத்துறையில் அனுபவம் பெற்றவரான மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனை உடனடியாகவே பதவி நீக்கி விட்டு, புதிய தளபதியை நியமித்தார். அத்துடன் புலனாய்வுத்துறை பணிப்பாளர் பிரிகேடியர் றிஸ்வி சக்கியும் யாழ். படைத் தலைமையக பொது அலுவலக அதிகாரியாக மாற்றப்பட்டிருந்தார்.

இவருக்குப் பதிலாக இராணுவ புலனாய்வுத்துறை பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பவர் பிரிகேடியர் தம்மிக லியனகே. இவர் ஆட்லறிப் படைப்பிரிவைச் சேர்ந்தவர். இதற்கு முன்னர் இராணுவ புலனாய்வுத்துறையில் இவர் அனுபவம் பெற்றவர் அல்லர்.

இராணுவ புலனாய்வுத்துறையை எந்த அடிப்படையில் பிரிகேடியர் தம்மிக லியனகேயைக் கொண்டு திறன்மிக்கதாக்கப் போகிறார், அதற்காக எத்தகைய திட்டங்களை அவர் வைத்திருக்கிறார்? என்பதுதான் சிறிலங்கா இராணுவத்திலும் புலனாய்வுத்துறையிலும் இப்போது முன் நிற்கின்ற பிரதான கேள்வியாக இருக்கிறது.

விஷேட செயற்திட்டம் ஒன்றுக்காக தாய்லாந்துக்கு அனுப்பப்பட்ட முன்னாள் இராணுவப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரன கடந்த வாரம் கொழும்புக்கு வந்திருந்தார்.

புலனாய்வுத்துறையை எப்படி மறு சீரமைக்கலாம் என சரத் பொன்சேகா அவ்ரிடம் ஆலோனை நடத்தியதாகவும் கூறப்படுகிறது. ஆனால், இவரை மீளவும் இப் பதவியில் நியமிக்க சரத் பொன்சேகா விரும்பவில்லை. காரணம் இவரது காலத்தில்தான் இராணுவப் புலனாய்வுத்துறை மோசமான பின்னடைவுகளைச் சந்தித்தது என்பது அவருக்கு நன்கு தெரியும்.

ஆனாலும், மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரனவின் ஆலோசனையை இராணுவத் தளபதி பெற்றுக் கொண்டிருக்கிறார். இராணுவ புலனாய்வுத்துறைக்கு புதிய தளபதி நியமிக்கப்பட்டிருக்கின்ற போதும், அனுபவம் மிக்க புலனாய்வு அதிகார மட்டத் தலைமையை இராணுவத் தளபதியால் வழங்கமுடியாத நிலைதான் உள்ளது.

புலனாய்வுத்துறை அதிகாரிகள் என இப்போது இருப்பவர்கள் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரணவும், மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனும் தான். இவர்கள் இருவமே சரத் பொன்சேகாவுக்கு ஒத்துவராதவர்கள் எனக் கூறப்படுகிறது.

இன்னொருவர் மேஜர் ஜெனரல் சூல னெவிரத்ன. இவர் வெளிநாட்டுப் புலனாய்வுத்துறை சேவைக்குப் பொறுப்பாக இருக்கிறார். இதனால் வேறு ஏதாவது படைப்பிரிவில் இருந்து அனுபவம் இல்லாத அதிகாரிகளைத்தான் புலனாய்வுத்துறைக்குப் பொறுப்பாக நியமிக்க வேண்டிய சூழல் தொடர்கிறது.

சிறிலங்கா இராணுவத்திலேயே புலனாய்வுத்துறை ஒன்றுதான், வேறு படைப் பிரிவு அதிகாரிகளால் தலைமை தாங்கப்படும் அவல நிலையில் இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நகரும் பயணம்

சுழலும் திசை எங்கும்
சுற்றத்தார்
முக பாவம்
அவர்கள் வழியினிலே
அவளும் நகர்கின்றாள்
நம்பி நகரவில்லை
நம்பவே நகர்கின்றாள்
நம்பி வருகிறாள்
என நய வஞ்சகம்
புரிகிறார்கள்.
அடிக்கடி நிறம் மாறும்
பச்சோந்திகளாய்
அவர்கள் உளமாறுதலை
அவளும் காண்கிறாள்.
யாரும் அறியாமல்
பரீட்சை நடாத்துகிறாள்
அவள் மதிப்பெண்ணை
கண்டு மனம் கலங்கி
வாடுகிறார்கள்
அவர்களுக்காக அல்ல
அவர்களுக்காக
அவர்கள் சுயநலத்
தன்மையினைக் கண்டு
அவள் சுயமாய்
விலகி வாழ
திடசங்கற்பம்
பூண்டு நிற்கிறாள்.
அவள் வாழ்வுக்காக அல்ல
அவளது இலட்சிய
நோக்கிற்காக
தன் நலப் பற்றிற்காக அல்ல
தன் மான வளர்ச்சிக்காக
நினைத்த காரியத்தை
அவள் மனம்
நாடுவதில்லை.
நிலைத்த காரியங்களையே
அவள் மனம் முற்றும்
நாடி நிற்கின்றது.
மனித வாழ்வு
நிலையானதல்ல.
நீர்க்குமிழி போன்றது
நிலையற்ற வாழ்வில்
நிலைத்த செயலை
நிலை நிறுத்த
உன்னத பாதையை
தேடிக் கொண்டிருக்கிறாள்.
தேடல் சில வேளை
ஊடலாகவும் மாறலாம்
எதையும் தாங்கும் சக்தியும்
அவள் உள்ளத்திலே
நிலைத்திருப்பதால்
உறுதி பூண்டு சொல்கிறாள்
நிலைத்த செயலே
அவளது இலட்சியம்
இறைவன் போடும் பாலம்
வழியே அவள்
நகர்ந்திடும் பயணம்
நிறைவாகும் காலம்
இறைவனருளன்றி
வேறொன்றுமில்லை.

*ச.சந்திரமதி,*
*மகிழவட்டவான்.*

## தாய்

கண்ணைப் போல் நிதமென்னை
காக்கும் தாயே!
என் கண்ணில் நீர் வடிந்தால்
உன் இதயம் தாங்காதம்மா

என் தாயுன் உதிரத்தைப்
பாலாக்கினாய்
எனக்காக உன் வாழ்வைப்
பாழாக்கினாய்
உனக்கு பொன், பட்டு
நிகராகுமா?
எந்தன் கண்மொட்டில்
வாழும்மொளி நீதானம்மா

என் நேரில் நிற்கும் தெய்வம்
நீதானம்மா
என் நெஞ்சில் வாழும்
நினைவுகள் நீதானம்மா
என்னுள் வாழும்
கவிதையும் நீதானம்மா
என் உயிரும் நீதானம்மா
உன் பாதத்தின் கீழ் சுவனமுண்டு
உன்னழகான வார்த்தையில்
சுகமுண்டு
உன் ரத்தத்தில் என்னுயிருண்டு.

**நற்பிட்டிமுனை,**
**சப்றோஸ் ஜமால்.**




## சாதனைக்காக......

என் உயிரைப் பல தடவை
இழந்திருந்தேன்.
ஆயினும் மீண்டும் பிறந்தேன்
ஒரு தடவை.

இனி வாழ்க்கையில்
ஒரு போதும் இறவேன்.
என சபதம் கொண்டேன்.

அன்றுமே
காலைப் பொழுதின் உதயம்
சிறிதும் எதிர்பாராதவாறு
கொடியதொரு வார்த்தை
ரணமாக - என் மனச்
சிகரத்தை ந் துளைத்தது.

அது எந்தவொரு
வினாடியி லும்
எனை அரட்டுகிறது.
நான் இன்னும் ஏன்
இறக்க வில்லை
அதை மறப்பதற்கு.

என்றோ ஓர் நாள்
பிறக்கவிருக்கும்
இலட்சிய நாளுக்காக
உண்மை வெளிப்படுத்தலுக்காக
நியாயப் படுத்தலுக்காக
நிரூபணத்திற்காக

நான் இன்னும் நூறு
வருடங்களாவது உயிர்
வாழ்வெனா?

*மனோ,*
*அக்கரைப்பற்று - 08.*

## சுயநலவாதிகள்

சொந்த
நலனுக்காக
சுகம்
தேடிக் கொள்ளும்
சூனியக் காற்கள்........!

மற்றவரின்
இதய வலிக்கு
மருந்து தடவுவது போல்
மாயை காட்டும்
மந்திரவாதிகள்.....!

காரியம் முடியும் வரை
கனி மொழி பேசி
க(அ)விழ்ந்து விடும்
அரசியல் வாதிகள்.........!

என்ன வந்தாலும்
உனக்காக
நாங்கள்
உயிர் கொடுப்போம் - என
உளறும் பொயயர்கள்.....!

தன்னலம் கருதி
பிறர் நலம் பேணாது
சநதர்ப்பம் பார்த்து
கிளை விட்டு.......
கிளை தாவும்........
வானரங்கள்...........!!

**கே.மகேஷ்,**
**ஆரையம்பதி.**

## விடுதலை

அன்பே!
நிறம் மாறும்
பூக்கள் உள்ளது.......

நிறம் மாறும்
வானவில் உள்ளது.......
தடங்கள் மாறும்
கால்களும் உள்ளது.....

இது போல் என்
இதயம் மாறாதடி.....
ஏன்? உன் இதயம்
மாறியது.........

இனியும் நீ!
என்னைத் தனிமையில்
இருக்க விடு.........
அன்பே!
மரணம் ஒரு தடவை
கொள்ளும்.
உன் காதல் என்னை
பல முறை கொள்ளுது.....
உன் இதயத்தில்
இருக்கும் என்னை - நீ
எப்போது விடுதலை
செய்வாய்?
சொல்?

*வ.ருசாந்தன்,*
*கடற்கரை வீதி,*
*தாண்டியடி.*

## கூடாரக் குயில்கள்

நடந்த இடத்தில்
தவழ்தல் கூடாது.
நாங்கள் இங்கு
தவழ்கின்றோம்.
எங்கள்
தற்காலிகக் கூடாரம்
நோக்கி.

கச்சான் நேற்று
கொட்டிலோடு
தாலாட்டிய
இன்று எம்
கூடாரங்களை
நீராட்டி வருகிறது
மாரி.

பொதுக் கட்டமைப்பு
அதை எதிர்பார்த்தே
நலிந்ததிங்கு
எங்கள்
உடல் கட்டமைப்பும்.

## மறு வாழ்வு

காவிகளைக் கொண்டு வா!
அந்தக் கொடும்
பாவிகளைக் கொண்டு வா!

கொழுத்தும் வெயிலினில்
கழுத்தைக் கீழே விட்டு
தொங்க விடு!

இனவெறி பிடித்த
கொழுப் பெல்லாம்
உருகி
உயிரற்றுப் போகட்டும்!

இப்போது
காவிகளை அவிட்டு விடுங்கள்
தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்து
மன்னித்து விடுங்கள்
அரச மரத்தடியில்
அமர்ந்திருந்து
அறப்போதனை செய்யட்டும்!

**ஈழப்பித்தன்.**

## வேதனையின் சிறு தூறல்

நான்கு கண்கள் மௌனமாய் பேச
நம்மிரு இதயங்கள் சம்மதம் சொல்ல
எம்மிரு கரங்களும் இணைந்தது.

இதைத் தாங்காது
எங்கிருந்தோ வந்த உறவு மடல்
எமைப் பிரிக்க - நம்
எதிர்கால எண்ணமெலாம்
சிறகொடிக்க
சில்லறையாய் சிதறியது என் இதயம்.

உறவுக்காய் உணர்வையிழந்து
உதறினேன் உனை
உதறிய நாளிலிருந்து
உருக்குலைந்தேன் - நான்.

பாவம் செய்த எனை
பறை சாற்றாது
மரணித்த எனை
மன்னித்து விடு
என்பேன்
எந்நாளுமே.......

வாழ்க்கைத் துணையாள்
ஒருத்தியை நீ கரம் பிடிக்க
வாழ்த்துக்கள்.ஓராயிரம்
என் இதயத்திலிருந்து
உலா வரும்
உனக்காக.....

*உதயகுமார் பிரபாஜினி,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்.*

## இருந்தென்ன உலகத்தில்.....

நண்பா நட்பை நீ
என்ன வென்று
நினைத்திருந்தாய்?
அன்பு இல்லாத நீ
பாசத்தை எப்படிப்
பொழிந்திருந்தாய்?
பண்பு இல்லாத நீ
நட்பை ஏன் வளர்த்தாய்?
இதயம் இல்லாத நீ
இருந்தென்ன உலகத்தில்.

*காசிப்பிள்ளை*
*சரஸ்வதி,*
*புதிய காளிகோயில் வீதி,*
*ஆரையம்பதி - 01.*

## நன்றி

பத்து மாதம் சுமந்து
பதத்ரப படுதத் பகுவபபடுதத்ய
தாய்க்கு - நன்றி.........!

அன்பைச் சொரிந்து
பண்பைப் பொழிந்த
தந்தைக்கு - நன்றி........!

"அ" சொல்லிக் கொடுத்து
அறிவு புகட்டிய
ஆசானுக்கு - நன்றி.....!

தமிழர் தாயகத்தை மீட்க
தன்னுயிரைத் தரணியில் நீத்த
தமிழனுக்கு - நன்றி........!

தோல்வியால் சோர்ந்ததால்
தோள் கொடுத்து சார்ந்த
நண்பனுக்கு - நன்றி.........!

காவி தரிக்கச் செய்து
கவி உதிக்கச் செய்த
என்னவளுக்கு - நன்றி.........!

*அ.ரவி, பூம்புகார் வீதி,*
*மட்டக்களப்பு.*



## வதைக்காதே!

தினம் தினம் - என்
கண்முன் தோன்றி
நொடிப் பொழுதினிலே
என் நெஞ்சை நோக வைப்பவளே!
உருகும் மெழுகாய் - என்
மனதைக் கரைப்பதென்ன
மாயம்!
ஓடாகிப் போன என்னை
ஓரங்குலப் பார்வையினால் - ஏன்?
உருக்குலைய வைக்கின்றாய்.
சிட்டுக் குருவியென - என்முன்
வட்டமிட்டு வந்தவளே!
விட்டுவிட்டு நீயோ
வேறு ஒருவனுடன்
வண்ண ஜாலம் காட்டி - ஏன்?
வதைக்கின்றாய்.
உனக்காக வாழ்ந்த காலங்கள்
பல தசாப்பதங்கள் - உனக்காக
பரிதாபப்பட்ட இதயத்தை
பல துண்டாய் உடைத்து
ஓட்டை இதயத்துடன்
உட்புதைந்த சோகத்துடன்
வாழ வைப்பவளே!
உன் மனது பசுந்தரை
என எண்ணினேன் - ஆனால்
பாறைத் தொடரானாய் - நீ
வேண்டாமடி பெண்ணே - உன்
விளையாட்டு.

**எஸ்.எம்.அமிர்தலிங்கம்,**
**எருவிலம்பதி.**

# இனியும் ஒருமுறை எம்மை அழவைக்காதே!






## சுனாமியே...

கண்ணீரில்
கரைபுரண்ட நாட்கள்
கரைந்தே சென்று விட்டன
உடமைகள் இழந்தோம்
உறவுகள் இழந்தோம்
உயிர்கள் இழந்தோம்
இன்னும்
எது இருக்கிறது
இழப்பதற்கு.............

சுனாமியே.............
வேண்டவே வேண்டாம்
அழையாத விருந்தாளியாக
வந்து சுளையாக
அனைவரையும்
அழைத்துக் கொண்டோடி
ஓராண்டு கடந்து விட்டது
இனியும் வந்திடாதே!
இன்னொரு பேரழிவை
தந்திடாதே!

***பு.கயல்விழி,***
***மட்-நொச்சிமுனை.***

## பூமியுடன் புதுக் கூட்டு

கடலே!
ஒரு செய்தி சொல்லி சுனாமியாயிருக்கலாம்
உன் கோரப் பசிக்கு கொஞ்சம்
வீடு தந்திருப்போம்
இச்சை போட இன்னும் பல
கோயில் தந்திருப்போம்
குப்பை கொட்டும் உன் கொடுவாய்க்கு
கபாலங்களை காணிக்கையாக்கியிருப்போம்.

மடிதனில் துள்ளி ஓடிய போதும்
உன்னை அள்ளி விளையாடும் போதும்
தாலாட்டு தந்த ~ நீ
தாண்டவமாடி எங்கள் வாய்களில்
நுரை தள்ளி கொன்றதன் கோபமென்ன?
உனை முத்தம் இட குனிந்த ~ போதே
முதுகில் குத்தி விட்டாயே!

அன்று கரைதனில் கட்டிய மணல் வீட்டை
கரைத்து சென்ற போது
உன் குறும்புத்தனத்தில்
குளி(த்து)ர்ந்து நின்றோம்
குடி(ல்) வீட்டையே முட்டி விட்டாய் ~
இன்று
எம் முகவரிகள் தொலைந்து
முகங்கள் கருகி கிடக்கின்றோம்.

இயற்கையை நாம் வென்றதற்கு
கோபம் கொண்டாய் எனில்
நாம் நட்ட மரங்களை
அடித்துச் சென்றது
எப்படி ஒத்துப் போகும்
எமக்காக மீன் தந்த போது
உனக்காக அஸ்தி கரைத்தோம்
டைட்டானிக்கையே
தாரை வார்த்தோம் ~ அந்த
பழங்கதை நினைவில்லையா?

இன்றுஏன் புரியாத புதிராய்
மௌனித்து நிற்கின்றாய்
நீ பாடை ஏற்றிய ஓப்பாரி ஓலங்கள்
தேன் துளியா?
உன் பேரலைகளுக்கு எம் உணர்வலைகள்
புரியவில்லையா?

கடலே!
உன் நிழல் ஒப்பந்தம்
எமக்குப் பிடிக்கவில்லை
அதனால் புதிதாக ஒரு கூட்டு
என் பொன் பூமியுடன்
செய்துள்ளோம்
அதில் அநாதையாக்கி உனை விட்டு
நான்கு கிலோமீற்றர் நகர்ந்திருப்போம்
இனி வருவதேயில்லை
உணவிற்காய் உனைத்தேடி.

***செல்வசாந்தி செல்வநாயம்,***
***மட்-செங்கலடி மத்திய கல்லூரி.***

## உறங்கவில்லையே...!

அமைதியாய் உறங்கிய கடலே
ஏன்.....? சுனாமியென சீறி வந்தாய்
நீ வந்தழித்து ஓராண்டு மறைகிறது
ஆனால்....... நாங்கள் உறவுகளை இழந்து
உடமை இழந்து தவிர்க்கின்றோம் பாரினிலே
உலகையே அழவைத்த சுனாமியே......... நீ
திரும்பிச் சென்று - உன்
சொந்த இடத்தில் உறங்கி விட்டாய்
ஆனால்........ நாங்கள் இன்னும்
உறங்கவில்லையே!

***எஸ்.முகிலன்,***
***மட்-கிரான்குளம் மத்தி.***

## எப்போது மாறிவிடும்

சொல்லாமல் வந்த சுனாமியாலே
எம் சுதந்திரமும் பறிபோச்சு.
வெளியில் எங்கும் போகவென்றால்
வேணாம் என்று சொல்கிறார்கள்.
கடல் வந்தால் என்ன செய்வாய்?
காப்பாற்ற யார் வருவார்?
அன்பான உறவுகளின்
வார்த்தைகளை கேட்டு நானும்
உண்மை என்று உணர்க்கிறேன்.
இயற்கையின் சீற்றத்தாலே
இப்படியாய் ஆகிவிட்டோம்.

முன்பு போல பயமின்றி வாழ்வதற்கு
ஆண்டவனை வேண்டுகின்றேன்
சொத்திழந்து சுகமிழந்து
பெற்ற பிள்ளையுடன்
பெற்றோரையும் சொந்தங்களையும்
தானிழந்து
தாங்கவொண்ணாத் துயரத்துடன்
வாழ்ந்து வரும் இதயங்களின்
துயர் ஏப்போ மாறிவிடும்?
நெஞ்சு நிறைந்த சோகங்கள்
எப்போது மறைந்து விடும்?

***சு.சுஜாத்மிகா,***
***மட்-விவேகானந்தா ம.ம.வித்தி.***

## கடல்தாயே கௌரி நீயே!

கடலலைச் சத்தத்தோடு
காலைப் பொழுது விடியுமடா
கிட்டவென கடலுள்ள கரையோர
மக்களுக்கு
கீரிடும் கீதங்கள்
குக்குரல் பேதங்கள்
கூற்றுவன் கூச்சலிடும்
கெடுபிடி சோகங்கள்
கேட்டிடும்
கைதிகள் போல் வேற்று
வழியில்லாது
கொலையுண்டனர்
கோமேதங்கள்
கௌரியே கடலம்மா
குமுறுகிறேன் கேட்கிறதா?
உன் கூத்துக்கு
காரணம்தான் கூறமாட்டாயா?

***பனையூர் பாரதி,***
***கோ.தனுஷன்.***

## சுனாமி

எங்களை அழிக்க வந்த
கோர அலையே! - சுனாமி
உயிர்களைப் பறித்து
உடமைகளை அழித்து
உரிமைகளைத் தந்த
ஆழிப் பேரலையே!
நீ எதற்காக வந்தாய்
சுதந்திரமாய் இருந்த
எங்களை குளவிக்
கூட்டைக் குலைப்பது போல
குலைத்து சுதந்திரம்
இல்லாமல் அலையவிட்ட
அலையே நீதான் சுனாமியா!

***அ.அருள்ராணி,***
***தரம் - 08,***
***மாங்காடு.***

## புண்ணியம் கிடைக்கும்

கரையோரம்
வாழ்க்கை நடாத்திய
அப்பாவி மக்களின்
அவல நிலைகள்
என் கண்களில்
நீர் பாச்சுகிறது.

உப்பு நீரில்தான்
இத்தனை காலமும்
ஒப்பு செய்து
வாழ்க்கை நடாத்தினார்கள்.

இவர்களின்
உயிர்களும்
உடமைகளும்
இந்த
உப்பு நீரில்தான்
ஒப்படைக்கப்பட்டது.

ஆழிப் பேரலை
விரட்டியடிக்க
அழுத விழிகளோடு
ஓடி வந்தவர்கள்
இன்னும்
அழுத விழிகளுடன்தான்.

சொந்த ஊரில்
அகதிகளாக்கப்பட்டு
நிம்மதியில்லாது
சித்திரவதையில்
நிம்மதியில்லாது
கூடாரங்களில்
கைதிகளாய்.

கால்கள் நீட்டக்கூட
இங்குஇடமில்லை.
வெயிலும்
வெக்கையும்
முறைத்துப் பார்க்கையில்
சரீரமெங்கும்
வேர்வைத் துளிகள்தான்
இவர்களின் கண்ணீர் துளிகளாய்...

அரசியல் வாதிகளே!
இவர்களின்
அவலங்களையும்
அத்தியவசியங்களையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

கூடாரங்களில்
இவர்களை
கைதிகளாக்கி விட்டு
ஏசி அறைக்குள்
நீங்களெல்லாம்.........?

இவர்களின்
அவலங்களையும்
அத்தியவசியங்களையும்
புரிந்து கொள்ளுங்கள்.

இனியாயினும்...
கரையோரம்
வாழ்க்கை நடாத்திய
அப்பாவிக் குடும்பங்களை
கட்டியெழுப்பி
மறுவாழ்வு கொடுங்கள்
ரொம்பப் புண்ணியம் கிடைக்கும்.

***கவிஞர்***
***மருதமுனை முனாஸ்.***

## இனியும் தாங்காது

**சுனாமியே! நீ வந்து**
**ஓராண்டு ஆகினாலும்**
**நீ தந்த சோகத்தை**
**மறக்க முடியவில்லை.**
**உன்னைச் சில பேர்**
**தங்கச் சுனாமி என்கிறார்கள்**
**ஆனால்! நீ எங்களுக்கு**
**அவலங்களைத் தந்த சுனாமி**
**உன்னை நம்பி வாழ்ந்தவர்களை**
**வேரோடு அழித்து விட்டாயே?**
**சுனாமியே நீ மீண்டும் வரவேண்டாம்**
**வந்தால் இனியும் தாங்காது**
**இந்தக் கரையோரம்.**

***யோ.அர்ச்சனா,***
***தரம் - 10,***
***கமு.பெரியநீலாவணை வி.வித்தி.***

# ஒற்றையாட்சி வலியுறுத்தலும் சமஷ்டி முறைமையும்

06

சமஷ்டி என்னும் சொல் சிங்கள சமூகத்தில் பெருமளவு பீதியை உண்டு பண்ணுவதற்கு உபயோகிக்கப்பட்ட சொல் என்பதை ஒன்றும் புதிதாகக் கூற வேண்டிய அவசியமில்லை. இந்த அர்த்தமில்லாத பயம் உருவாக்கப்பட்டதன் காரணம் தமிழ் தேசியவாதம் மேலோங்குவதைத் தடுப்பதற்கே ஆகும்.

இதற்குப் பொறுப்பானவர்கள் இனவாத அரசியலில் தங்கி நின்று பிழைப்பு நடாத்தும் தலைவர்களும், இனவாதச் சேற்றில் சிக்கி புத்தி பேதலித்திருந்த சிங்களப் புத்திஜீவிகளுமாவர். இன்று கூட இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குச் சமஷ்டி முறைமை மூலம் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ள வேளையிலும் இவர்களின் குரல்கள் கேட்கின்றன.

என்னைப் பொறுத்தவரையில் இந்த இணக்கப்பாடு ஓர் நியாயமான தீர்வை எட்டவும், நாடு பிளவு படுவதைத் தவிர்ப்பதற்கும் சமஷ்டி முறைமை மூலம் அரசை மீண்டும் சீரமைத்துக் கொள்வதற்கும் பெரிதும் உதவும். இது இலங்கையில் சகல இன மக்களும் ஐக்கியமான ஒரு தேசத்தினுள் வாழ்வதற்குக் கிடைத்த மகத்தான சந்தர்ப்பமாகும். ஒருவேளை இதுவே இறுதிச் சந்தர்ப்பமாகவும் அமையக் கூடும்.

**"இனத்துவக் குழுக்களைக் கட்டியெழுப்புதல்"**

அரசை மீண்டும் சீரமைப்பது என்பதன் மூலம் இங்கு நாம் கருதுவது எதை? சுதந்திரத்தின் பின்னர் அரசைக் கட்டியெழுப்பும் பணி தேசிய இனங்களைக் கட்டியெழுப்பும் விதத்தில் இடம்பெறவில்லை என்பது நாமனைவரும் அறிந்த ஒரு விடயமாகும்.

ஐரோப்பிய முறைமையாகிய தேசிய அரசு என்பதை அதே விதமாக நாம் பயன்படுத்திய போது, ஓர் இனம் - ஒரு தேசம் என்னும் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அது இடம் பெற்றது. அதன் பிரகாரம் பிரதான தேசிய இனம் (எண்ணிக்கையில் அதிகமானோர்) அரசின் பங்குதாரிகளாக மாறினர். இதன் விளைவு பிரதான தேசிய இனம் தற்காலிகமாக விவேகமற்ற மகிழ்ச்சியில் திளைத்ததாகும்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே. சிறிலங்காத் தலைவர்களுக்கு இதைச் செய்ய முடிந்தது. அது இதுவரை காலமும் உதாசீனம் செய்யப்பட்ட தேசிய இனங்கள் (விசேடமாக தமிழ்த் தேசிய இனம்) மத்தியில் நீறு பூத்த நெருப்புப் போன்று இருந்து வந்த அதிருப்தி சுயாட்சி குறித்த பிரச்சினைகளை எழுப்பும் வரையிலேயே நீடித்தது.

ஆயினும் அரசு இத்தகைய அபாயத்தை எதிர் கொள்ள நேரிடும் என்பதை அன்றைய தலைவர்கள் சிலர் அறிந்திருந்தனர். விசேடமாக அக்காலத்தில் மக்களின் மனங்களைப் பெருமளவுக்குக் கவர்ந்திருந்த தலைவராகிய திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க இலங்கைக்கு மிகவும் பொருத்தமான அரசியல் முறைமை சமஷ்டியே என்று மிகவும் தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

இலங்கை உலகின் ஏனைய அரசுகள் மத்தியில் ஒரு பல்லின மக்கள் வாழும் அரசு என்பதால் அதற்கு மிகவும் பொருத்தமான ஆட்சி முறை சமஷ்டி என்று அவர் பல சந்தர்ப்பங்களில் தெளிவாக அபிப்பிராயம் தெரிவித்தார். 1926ல் இலங்கையின் சமஷ்டி அரசாங்கம் என்னும் தலைப்பில் ஜூலை 17ம் திகதி சனிக்கிழமை அவர் மோர்னிங் ஸ்டார் செய்திப் பத்திரிகையில் எழுதிய கட்டுரை இது குறித்த முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியிருந்தது.

மேலும் அதே ஆண்டில் நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி குறித்த தெரிவுக்குழு சார்பிலும் 1947ல் உள்ளூராட்சி அமைச்சரென்ற வகையிலும் திரு.பண்டாரநாயக்கா சமஷ்டி முறையின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும் 1957ல் பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் மூலம் அவர் செய்ய முயன்றதும் பல்லினச் சமூகமொன்றில் அதிகாரப் பகிர்வுகளுடன் கூடிய ஓர் அரசு அமைய வேண்டியது பல்வேறு இன மக்களின் விசுவாசத்தின் அடிப்படையிலேயே என்னும் நம்பிக்கையின் பிரகாரமாகும்.

இவ்வாறே 1966ல் டட்லி - செல்வா ஒப்பந்தத்தின் மூலம் திரு.டட்லி சேனநாயக்காவின் மனதிலும் அரசைக் கட்டியெழுப்பும் சரியான மூலோபாயம் சம்பந்தமான கருத்துக்கள் இருந்தமை தெளிவாகியது. அத்தோடு அக்காலத்தில் தமிழ்த் தலைவர்கள் சமஷ்டி முறைமையைக் கோராமல், அதற்கு மிகவும் குறைவான அளவில் அதிகாரப் பகிர்வுகளையே கேட்டு நின்றனர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். அக்காலத்திலிருந்த சகல இடதுசாரித் தலைவர்களும் ஓர் இனத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட அரசு அமைவதை எதிர்த்து நின்றதோடு அத்தகைய ஓர் அரசின் எதிர்காலம் குறித்து அபாய அறிவிப்புக்களையும் செய்தனர்.

அ.தர்மா

எப்படியிருந்த போதிலும் சுதந்திரம் கிடைத்து, இலங்கை அரசை அமைக்கும் ஆரம்ப முயற்சிகளின் போது சமஷ்டி ஆட்சி முறை குறித்த எண்ணம் முன்வைக்கப்பட்ட போதிலும் அது உடனடியாகவே நிராகரிக்கப்பட்டது. இத்தகைய கருத்து அடக்கியொடுக்கப்பட்டது மாத்திரமின்றி ஒரு இனத்தவரின் அபிலாசைகளுக்கு மட்டும் ஏற்ற விதத்தில் அரசு கட்டியெழுப்பப்பட்டதன் மூலம் தீவிர நாசம் விளைவிக்கும் பல்வேறு அனுபவங்களை நாம் விரித்துக் கொண்டே அதிகாரப் பேரரசைப் பீடித்த சிங்களத் தலைவர்களும் அவர்களுக்கு அரசியல் தர்க்கவாதம் குறித்து உபதேசம் வழங்கிய புத்தி ஜீவிகளும் இலங்கை இனம் என்பது சிங்கள இனமாகவே இருக்க வேண்டுமென்றும் சிறுபான்மை இனங்கள் சிங்கள இனத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றும் அவை சிங்கள இனத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டுமென்றும் (Assimilation) பெரிதும் சிந்தித்தனர். ஆயினும் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் தொட்டே சிறுபான்மை இனங்கள் தாம் அடிமைப்படவோ, உள்வாங்கப்படுவதற்கோ தயாரில்லையென்பதை வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

பல சந்தர்ப்பங்களில் சிங்களத் தலைவர்களும், புத்திஜீவிகளும் இவ்வாறான சிந்தனை மற்றும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைப்பதற்கான காரணம் ஐரோப்பிய தேசிய அரசுகள் உருவாகிய முறை சம்பந்தமாக அவர்கள் கொண்டிருந்த விளக்கங்களேயாகும். 14, 15ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் உருவாகிய தேசிய அரசுகள் சமாதான வழிகளில் தோற்றியவை அல்ல.

மாறாக அவை இரு நூற்றாண்டு காலத்திற்கு அதிகமான இன ஒழிப்பு, நாட்டை விட்டு விரட்டுதல் போன்ற தீவிர அடக்கு முறைகளின் பின்னர் பெரும்பான்மை இனத்திற்கு சிறுபான்மை இனங்கள் கீழ்ப்படியும் கட்டாயத்தை ஏற்படுத்தியே இத்தேசிய அரசுகள் உருவாக்கப்பட்டன.

பிரிட்டனில் ஆங்கில நாகரீகம் வேல்ஸா மற்றும் ஸ்கொட்டிஷ் இன மக்கள் மீது பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட ஒன்றாகும். அதை அவர்கள் சமாதான ரீதியில் விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை. இன்னும் இந்த இனங்களைச் சேர்ந்த மக்களுக்கு ஆங்கிலேயர் மீது நல்லெண்ணம் கிடையாது. ஐரிஷ் இன மக்கள் இங்கிலாந்தின் ஆதிபத்தியத்திற்கு எதிராக நீண்ட கால ஆயுதப் போராட்டத்தை நடாத்தி வருகின்றனர்.

இந்தச் சூழ்நிலைகளில் வேல்ஸுக்கும், ஸ்கொட்லாந்திற்கும் பிரித்தானிய அரசினுள் தனியான பாராளுமன்றங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஓரளவிலான சுயாட்சி மூலம் அரசை மீண்டும் சீரமைக்கும் நடவடிக்கைகள் 1990களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**"தேசிய இனம் என்னும் காரணி"**

இன்று பல பல்லின அரசுகளில் தேசிய அரசு முறைமைக்குச் சவால் விடுத்து தம்மையும் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கும் வகையில் அரசு மீண்டும் சீரமைக்கப்பட வேண்டுமென்ற ஏனைய இன மக்களின் கோரிக்கை வலுத்து வருகின்றது. இன்று பல நாடுகளில் சிறுபான்மையின மக்கள் தம்மையும் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கும். ஆட்சி முறையொன்றை ஏற்படுத்த முடியாவிட்டால் தனிநாட்டுக் கோரிக்கை போன்ற வற்றை முன்வைத்துப் பிரிவினை வாத முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் நிலை தோன்றியுள்ளது. சிறுபான்மையின மக்களுக்கு ஏற்படும் அநீதிகள் மாத்திரம் இதற்குக் காரணம் அன்று. ஒரு இனமென்று அங்கீகரிக்கப்படக் கூடிய சகல தகுதிகளும் தமக்கு உண்டென்று உணர்வின் அடிப்படையிலேயே அவர்கள் இந்த மாற்றங்களைக் கோரி நிற்கின்றனர்.

உதாரணமாக இன்று இந்தியாவில் பஞ்சாப் சீக்கிய இன மக்களின் பிரிவினைவாத இயக்கம் மற்றும், கனடாவில் கியூபெக் மாநிலப் பிரிவினை வாத இயக்கம் என்பவை மேலெழுவதற்குக் காரணம் மத்திய அரசாங்கத்தினால் ஏற்பட்ட அநியாயங்கள் அல்ல. மாறாக அவர்கள் மத்தியில் உருவாகிய தேசிய இனம் சம்பந்தமான உணர்வுகள் காரணமாகவே இது இடம் பெற்றது.

இத்தகைய உணர்வுகள் இன்று தேசிய இனங்கள் மத்தியில் தோன்றுவதைத் தடுக்க முடியாது. அவ்வாறு தடுப்பதும் நியாயமல்ல. இன்று உலகில் 205 அரசுகள் உள்ளன. அவற்றுள் 6000ற்கும் அதிகமான இனக் குழுக்கள் வசிப்பதாக மானிட வரலாற்றில் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் பிரகாரம் இன்று இந்த அரசுகள் எதிர்கொள்ளும் பிரதான சவால் இந்தப் பல்லினக் குழுக்களின் பொதுவான அபிப்பிராயத்தின் படி அரசைக் கட்டியெழுப்புவது எவ்வாறு என்பதாகும். இச்சவாலை வெற்றி கொள்ளும் பிரதான வழி அவர்களின் இனத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் அதிகாரத்தைப் பகிர்வு செய்வதும், அவர்களை அதிகாரத்தில் பங்குதாரர்களாக ஆக்குவதுமாகும். இதற்கு மிகவும் பொருத்தமான வழிமுறை சமஷ்டி வழி முறையென்பது எனது நம்பிக்கையாகும்.

சமஷ்டி முறைமை என்பது ஒரு நாட்டில் வாழும் பல்வேறு இனங்களின் சமமான அபிவிருத்தியை உறுதி செய்யும் முறைமையாகும். உலகில் தற்போது நடைமுறையிலிருப்பது பிரதானமாக ஒற்றையாட்சி அல்லது சமஷ்டியாட்சி என்பதை நாம் அறிவோம்.

ஒற்றையாட்சி என்றால் என்ன? கிளேயர் பாலி கூறியதற்கமைய அதி உயர் அரசியலமைப்பு அதிகாரத்தைப் பிரயோகிக்கக் கூடிய ஒரு மத்திய அதிகார சபையின் கீழ் அரசாங்க அதிகாரங்களும் ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பின் அத்தகைய ஓர் அரசியலமைப்பை "ஒற்றையாட்சி அரசியலமைப்பு" என்று அழைக்கலாம். பேராசிரியர் ஸ்ட்ரோங் கூறுவதன் பிரகாரம் ஒற்றையாட்சி என்பது அரசியலமைப்பு அதிகாரம் ஒரு தனி மத்திய சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் அரசு ஆகும்.

இதன் பிரகாரம் ஒற்றையாட்சி அரசியலமைப்பினுள் சட்டமியற்றுதல் ஒரு நிறுவனத்தின் மூலம் மாத்திரமே இடம்பெற்றிருக்கின்றது. 1972ம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியலமைப்பில் ஒற்றையாட்சி முறை அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வகையிலேயே ஆகும். அப்படியாயின் தேசிய அரசுப் பேரவை ஒரு போதும் அரசியலமைப்பு அதிகாரத்தை எந்த வகையிலும் கைவிடமாட்டாது.

அதைக்கையளிக்கவும் மாட்டாது. உப சட்டங்களை ஆக்கும் அதிகாரம் தவிர அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட ஏனைய அதிகார சபை எதனையும் நிறுவவும் மாட்டாது. இவ்வாறே 1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பில் ஒற்றையாட்சியின் தன்மை இவ்வாறு வெளிப்படுகின்றது. பாராளுமன்றம் தனது அரசியலமைப்பு அதிகாரத்தைக் கைவிடக் கூடாது. எந்த வகையிலும் கையளிக்கவும் கூடாது. ஏதாவது அரசியலமைப்பையும் பாராளுமன்றம் நிறுவக் கூடாது. இத்தகைய ஒற்றையாட்சித் தன்மைக்கு ஏற்ற வகையில் வெற்றிகரமான அதிகாரப் பகிர்வு எதையுமே செய்ய முடியாது.

பெரும்பான்மையினரின் அதிகாரம் நிலவும் பாராளுமன்றத்தில் ஏற்படுத்தப்படும் சட்டங்கள் மற்றும் விதி முறைகளுக்குச் சிறுபான்மை மக்கள் அடங்கிக் கீழ்ப்படிந்து செயற்படுதல் வேண்டும். தமது தேசிய இனங் குறித்த உணர்வுகளுக்கு இடமளிக்காது, தமது விருப்பப்படி சுயாட்சி மூலம் தமது சொந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியாத வகையில் அரசியல் தீர்மானங்களையும் மேற் கொள்ள முடியாத வகையில் அவர்கள் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடுகின்றது.

இது தேசிய இன உணர்வு மேலோங்கும் ஏனைய இனங்களை அரசியலமைப்பு மூலம் அடக்கியொடுக்கும் நடவடிக்கையாகும். தேசிய அரசுகள் இன்று ஆயுதப் போராட்டங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. இது காரணமாகவே ஆகும்.

அப்படியாயின் செய்யப்பட வேண்டியது என்ன? அரசினுள் வாழும் ஏனைய இன மக்களின் தேசிய இனத்துவம் மற்றும் சுயாட்சி குறித்த கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அரசை மீண்டும் சீரமைப்பதே இதுவாகும். ஒற்றையாட்சி முறைமைக்குப் பதிலாக சமஷ்டி ஆட்சி முறையை அவசியப்படுத்துவது, இக்காரணத்தினாலேயே ஆகும்.

சமஷ்டி முறையென்பது அதிகாரம் மத்திய அரசிற்கும், மாகாண அரசாங்கத்திற்குமிடையில் பகிர்வு செய்யப்படும் முறையாகும். அதாவது மத்திய அரசாங்கமும் பரஸ்பர கூட்டிணைப்பாளர்களாக விளங்கும் முறைமையாகும்.

ஒன்றுக்கொன்று அடிமைப்படுவதல்ல. சமஷ்டி அமைப்பினுள் ஆட்சி முறைமைகள் சில உண்டு. ஒன்று கலப்பு முறையாகும். இங்கு சமஷ்டி அம்சங்களும், ஒற்றையாட்சி அம்சங்களும் கலந்திருப்பது இதன் விசேட தன்மையாகும். வெவ்வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் அது ஒற்றையாட்சிக்கும், சமஷ்டி ஆட்சிக்கும் இடைப்பட்ட ஒரு நிலையாகும். இன்று இந்தியா செயற்படுவது அத்தகைய ஒரு ஆட்சி முறையாகும்.

*(தொடரும்......................)*

# தமிழ் இலக்கிய அறிமுகம்

**சென்ற வாரத் தொடர்ச்சி.......**

**சோழர்காலம்:-**

I. **ஔவையார்:-**

தமிழ் மக்கள் நன்கு அறிந்த புலவர் இவர். இவரைப் பற்றிப் பல கதைகள் உள்ளன. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு ஔவையார்கள் வாழ்ந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் ஔவையாரது நூல்களில் நாயன்மாரும், ஆழ்வாரும் குறிப்பிடப்படுவதால், இவர் கி.பி10 அல்லது 11ம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்க வேண்டும் என்பர். இவர் இயற்றிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, (வாக்குண்டாம்) நல்வழி, விநாயகர் அகவல், ஞானக் குறள், அசதிக் கோவை முதலியவை இன்று வரை நின்று நிலைத்துள்ளன.

II. **செயங்கொண்டார்:-**

கலிங்கத்துப் பரணி பாடியவர். பரணி என்னும் இலக்கிய வடிவத்திற்கு இவர் முன்னோடி. எனவே இவரை "பரணிக்கோர் செயங்கொண்டார்" என்பர். இவர் காலம் கி.பி 12ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இவர் முதலாம் குலோத்துங்க சோழனது கலிங்க வெற்றியைக் குறித்துப் பரணி பாடியதனால் அம்மன்னனுக்கு மிகவும் நெருக்கமானவர் எனக் கொள்ளலாம்.

III. **சேக்கிழார்:-**

இவர் சங்கநூற் பயிற்சியுடையவர். 63 நாயன்மார்களது வாழ்க்கை வரலாற்றைக் கூறும் "பெரியபுராணம்" (திருத்தொண்டர் புராணம்) என்னும் நூலை இயற்றியவர். இவ்வாறு தலைப்பட்டிருந்ததனால் இப்புராணம் சுந்தரமூர்த்தி நாயனாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட ஒரு காப்பியம் எனச் சிலர் கூறுவர். இவர் இரண்டாம் குலோத்துங்கனுக்கு அமைச்சராய் விளங்கியவர். அப்போது இவருடைய இயற் பெயர் "அருண்மொழித்தேவர்" என்பதாகும். இவரது காலம் கி.பி 12ம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கூறுவர்.

IV. **கம்பர்:-**

கம்பராமாயணம். இயற்றியவர் இதன் முதல் நூலாகிய "வால்மீகி ராமாயணம்" என்னும் நூலை விஞ்சும் வகையில் தனது நூலை ஆக்கியவர். இவர் புலமையை நோக்கி "கல்வியிற் பெரியன் கம்பன்" என்றும் "கவிச்சர்க்கர வர்த்தி கம்பன்" என்றும் கூறுவர். சடகோபரந்தாதி, சரசுவதி அந்தாதி, இலக்குமி அந்தாதி, ஏரெழுபது முதலிய நூல்களையும் இவர் இயற்றினார். இவரது மகன் "அம்பிகாபதி" "அம்பிகாபதி அமராவதி" கதை சிறந்த காதற் காவியமாகும். இவர் 12ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 3ம் குலோத்துங்க சோழன் காலத்தில் வாழ்ந்தார்.

V. **ஒட்டக் கூத்தர்:-**

இவர் கம்பன் காலத்தவர். கம்பராமாயண புலமைப் போட்டியும் கொண்டவர். விக்கிரம சோழன் உலா, விக்கிரமனின் மகனாகிய 2ம் குலோத்துங்க சோழன் மீது ஒரு உலா, அவனது மகனை 2ம் இராஜ ராஜ சோழன் மீது ஒரு உலா பாடினார். இவ்வுலாக்கள் "மூவருலா" எனப்பட்டது. கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக் கூத்தர் எனப் புகழ் பெற்றவர். இவர் தனது கைக் கோள மரபைச் சிறப்பிக்கும் வகையில் "ஈட்டியெழுபது" பாடினார். இவர் பாடிய "தக்கயாகப் பரணி" புகழ் பெற்றது. அத்துடனமையாது "அரும்பைத் தொள்ளாயிரம்" "காங்கேயன் நாலாயிரக் கோவை, குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்" முதலிய நூல்களையும் இயற்றினார். இவர் பிள்ளைத் தமிழ் இலக்கிய வடிவத்தின் முன்னோடி. இவரது காலம் கி.பி 12ம் நூற்றாண்டாகும்.

இவர் நூல்கள் பல இயற்றியிருந்தாலும், கம்பனைப் போல் புகழ் பெறவில்லை. காரணம் கம்பன் இயற்றிய கம்பராமாயணமே (யானையின் குட்டி, பன்றியின் குட்டிகள்) கதை இங்கு நினைவு கூரத்தக்கது.

VI. **புகழேந்திப் புலவர்:-**

வெண்பாவிற்கோர் புகழேந்தி எனப் புகழ் பெற்றவர். இவர் இயற்றிய "நளவெண்பா" வெண்பா இலக்கியத்தில் தலை சிறந்தது என்பர். நளவெண்பா என்பது மகாபாரதத்தில் வரும் "நளோபாக்கியானம்" என்னும் நூலை அடியொற்றி இயற்றப்பெற்றதாகும். "நளவெண்பா" 3 காண்டங்களும், 424 நேரிசை வெண்பாக்களும் கொண்டது. இவரது காலம் கி.பி 13ம் நூற்றாண் டென்பர்.

VII.**கச்சியப்ப சிவாச்சாரியார்:-**

இவர் இயற்றிய "கந்த புராணம்" கந்தன் வரலாற்றைக் கூறும். இன்று இந்துக்களிடையே கந்தபுராண கலாசாரம் பரவும் வகை செய்தது. இந்நூல் ஆறு காண்டங்களைக் கொண்ட இந்நூல் வடமொழியில் உள்ள "ஸ்கந்த புராணத்தின் சங்கர சங்கிதை"யை ஒட்டி இயற்றப்பட்டதென்பர். இவரது காலம் கி.பி 11ம் நூற்றாண்டெனக் கொள்வர்.

VIII. **சமயப் புலவர்கள்:-**

சோழர் காலத்தில் பன்னிரு திருமுறைகள் பாடிய சைவ சமயப் பெரியார்களும் சிறந்த புலவர்களே. அவர்கள் விபரம் வருமாறு:-

சேந்தனார் (திருவிசைப்பா, திருப்பல்லாண்டு), திருமாளிகைத் தேவர், பட்டினத்தார், கண்டராதித்தர், நம்பியாண்டார் நம்பி, திருமூலர், காரைக் காலம்மையார், சேரமான் பெருமாள் நாயனார், கல்லாடர் முதலியோர். (நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் பாடிய ஆழ்வார்களும், பன்னிரு திருமுறையில் முதல் 7 திருமுறைகளைப் பாடிய, அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகியோரும் பல்லவர் காலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் நாம் அறிந்த விடயமாகும்)

**தமிழ்ப்புலவர்கள் (தொடர்ச்சி) நாயக்கர் காலம் கி.பி.1350 - 1750**

**01. அந்தகக் கவி வீரராகவ முதலியார்:-**

இவர் இலங்கையில் ஆட்சி புரிந்த பரராசசேகர மன்னனைப் பாடிப் பரிசில்கள் பெற்றவர். மேலும் இவர் சேயூர்க் கலம்பகம், சேயூர் முருகன், பிள்ளைத் தமிழ், திருவாரூர் திருக்குன்றமாலை, திருக்கழுங்குன்றப் புராணம், சந்திரவாணன் கோவை முதலிய நூல்களையும் இயற்றினார்.

**அன்புமணி**

**02. அதி வீரராம பாண்டியர்:-**

புகழ்பெற்ற 'நைடதம்' என்ற நூலை இயற்றினார். நைடதம் புலவர்க்கு ஔடதம் எனப் பாராட்டப் பெற்றவர். இவர் அரசனாக வாழ்ந்த ஒரு புலவர்பாண்டி நாட்டை ஆண்டவர். இவர் இயற்றிய நைடதம், நள தமயந்தி வரலாற்றைக் கூறுவதாகும். இதன் முதல் நூல் வடமொழியில் அமைந்தது. மேலும் காசிகாண்டம் கூர்மபுராணம், லிங்கபுராணம், குறுந்தொகை, வெற்றிவேற்கை, திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

**03. கச்சியப்ப முனிவர்:-**

இவர் விநாயகபுராணம், தணிகைப் புராணம், முதலிய நூல்களையும் இயற்றினார். (இவர் வேறு கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாச்சாரியர் வேறு) கவிராட்சதர் என்ற பட்டம் இவரது கவித்திறனை வெளிப்படுத்துகின்றது. தணிகைப்புராணம் அவரது சொந்த ஊரான திருத்தணிகையின் சிறப்பையும், மக்கள் சிறப்பையும் கூறுவதாகும்.

**4. வீரகவிராயர்:-**

இவர் பாடிய அரிச்சந்திர புராணம் புகழ் பெற்றது. 1524ல் இயற்றப் பெற்றது. விருத்தப்பாக்களால் ஆனது. 10 காண்டங்களும், 1225 விருத்தப்பாக்களும் கொண்டது. பொய் சொல்லாத அரிச்சந்திரன் பாத்திரம் மிக அபூர்வமானதாகும்.

**5. முனைப்பாடியார்:-**

இவர் ஒரு சமணப் புலவர். இவரது அருங்கலச் செப்பி என்னும் நூல் 222 வெண்பாக்களைக் கொண்டது. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும், தத்தம் கருமமே கட்டளைக்கல் என்ற திருக்குறள் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இவர் 13ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்தார் என்பர்.

**6. பொய்யா மொழிப் புலவர்:-**

இவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவை புகழ் பெற்றது. இந்நூல், தஞ்சாவூரில் வாழ்ந்த ஒரு சிற்றரசனைப் பற்றிய நூலாகும். 96 வரிப் பிரபந்தங்களில் ஒன்றான கோவை வடிவில் இந்நூல் இயற்றப் பெற்றுள்ளது. இவர் காலம் கி.பி.13ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

**7. பரஞ்சோதி முனிவர்:-**

இவர் இயற்றிய திருவிளையாடல் நூல் மதுரை சோமசுந்தரக் கடவுளின் 64 திருவிளையாடல்கள் பற்றிக் கூறுகின்றது. 4 காண்டங்களும், 68 படலங்களும், 3363 பாடல்களும் கொண்டது. இவர் கி.பி.13ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

**8. வில்லிப்புத்தூரர்:-**

இவர் இயற்றிய மகாபாரதம் "வில்லிப்புத்தூரர் பாரதம்" எனப்படுகின்றது. இதன் முதல் நூல் வடமொழி நூலான மகா பாரதமாகும். 10 பருவங்களையும், 4339 விருத்தப் பாக்களையும் கொண்டது இந்நூல். இவரது காலம் கி.பி. 14ம் நூற்றாண்டாகும். இந்நூலைப் பின்பற்றியே பல மகாபாரதக் கதைகள் இயற்றப் பெற்றுள்ளன.

**9. அருணகிரிநாதர்:-**

புகழ் பெற்ற திருப்புகழை இயற்றிய இந்தக் கவிஞர். இவரால் பாடப் பெற்ற திருத்தலங்கள் பற்பல இங்கெல்லாம் இறைவன் திருவருள் நிறைந்துள்ளது. முருகக் கடவுள் புகழ் பாடும் இந்நூலில் 1307 இனிய சங்கப் பாடல்கள் உள்ளன. கந்தர் அந்தாதி என்னும் யமக அந்தாதி அபூர்வமானதாகும். இவை தவிர "கந்தர் அலங்காரம்" "கந்தரனுபூதி" "திருவருப்பு" முதலிய அற்புதமான பக்திப் பாராயண நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். காலம் கி.பி.1500 நூற்றாண்டு.

**10. காளமேகப் புலவர்:-**

இவரது இயற்பெயர் வரதன். அருவி கொட்டுவது போல ஆசுகவி பாடுவதிலும், வசை பாடுவதிலும் வல்லவர். "வசைபாடக் காளமேகம்" என்னும் பாடல் வரியால் இவரது தனித்தன்மையை நாம் அறிந்து கொள்ளலாம். நகைச்சுவைக் கவிபாடுவதிலும் இவர் வல்லவர். (உதாரணம்:- விகடராமன் குதிரை) இவர் இயற்றிய "திருவானைக்கா உலா" பக்தி மயமானது. இவருடைய காலம் கி.பி.15ம் நூற்றாண்டின் இடைப் பகுதி என்பர்.

**11. அதிமதுரகவி:-**

இவர் காளமேகப் புலவர் காலத்தவர். இருவரும் போட்டி மனப்பான்மை கொண்டிருந்தனர். ஆனாலும் இவர் நாகூரை அடுத்த திருமலை ராயன் பட்டினத்தில் அரசவைப் புலவராக இருந்தார். இவரைக் காளமேகப் புலவர் தமது புலமையினால் மடக்கினார் என்றும் அறிகிறோம்.

*(தொடரும்..............)*

---

*ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) வாரம் தோறும் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபெற விரும்புவோர் போட்டிப்படிவத்தைப் பூர்த்தி செய்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடை அனுப்பும் ஒரு அதிஸ்டசாலிக்கு 250 ரூபா பணப்பரிசும், பாராட்டுப் பெறும் 10 அதிஸ்டசாலிகளின் பெயர் விபரமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.*

*விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி:- 02-01-2006*

## குறுக்கெழுத்துப் போட்டி 83

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 83**
**ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | ■ |
| 4 | | ■ | 5 | | 6 |
| | | ■ | 7 | | |
| 8 | | 9 | ■ | | ■ |
| | ■ | 10 | 11 | | ■ |
| ■ | 12 | | | ■ | 13 |
| 14 | | ■ | 15 | | |
| ■ | | ■ | | ■ | |

### இடமிருந்து வலம்

01. நளமகாராஜனின் மனைவி.
04. ஒப்புக் கொள்ளக் கூடியது, பாடசாலைகளிலும், மாணவர்களின் பயிற்சிப் புத்தகத்தில் இது போடுவர்.
05. இந்தியக் கிரிக்கெட் அணி வீரர் கங்குலியை நீக்கியதால் இவர்கள் கொதிப்படைந்துள்ளனர். (இறுதியெழுத்தின்றிக் குழம்பியுள்ளது)
07. கண்ணதாசன் இயற்றும் இவை அனைத்தும் தத்துவம் மிக்கவை.
08. அன்பு. (குழம்பியுள்ளது)
10. சுவாசப் பையைப் பாதிக்கும் ஒரு நோய்.
12. விவசாயத் தொழில். (குழம்பியுள்ளது)
14. பெண்.
15. வதனம் என்றும் சொல்வர். (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. இராவணனை இப்படியும் அழைப்பர்.
02. இயேசு கிறிஸ்துவைப் பெற்றெடுத்த மாதா.
03. திரைகடலோடியும் இதைத் தேடு என்பர்.
06. இறந்த ஒருவரின் உடலுக்கு தீ மூட்டுவதற்குப் பயன்படும் விறகு.
09. பாட்டி கதையுடன் தொடர்பு பட்ட பறவை.
11. இயற்கையானது, வழமையானது, கூடப் பிறந்தது என்றும் சொல்வர். (குழம்பியுள்ளது)
12. கண்ணகி எரித்தது.
13. ஆறு குளங்களில் வாழும் பயங்கர உயிரினம். (குழம்பியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி 81ற் கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01. பரிதாபம்.
04. பாண்.
06. வேதனம்.
07. (சா)தம்.
08. ஆம்.
09. ராதை.
10. பாக்கு.
12. தயவு.
13. யா(ப்)பு.
14. தாஸ்.

**மேலிருந்து கீழ்**

01. பண்டிகை.
02. பாரி.
03. பள்ளம்.
05. யாழ்ப்பாணம்.
06. வேதம்.
08. ஆரானை.
09. தைய(ல்).
11. குஷ்பு.

### பரிசு பெறும் அதிஸ்டசாலி

**ச.சந்திரமதி,**
**மகிழவட்டவான்,**
**ஆயித்தியமலை.**

### பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. கா.துலஷ்சனா, விபுலானந்தபுரம், திருப்பழுகாமம் - 01.
02. இ.கலாமதி, சமுர்த்தி வங்கி, வெல்லாவெளி.
03. த.ஜிதுசியா, கோயில் போரதீவு, பெரியபோரதீவு.
04. மா.றோகினி, களுமுந்தன்வெளி, அம்பிளாந்துறை.
05. எஸ்.கஜானா, புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி.
06. சி.திருத்தணி, எருவில், களுவாஞ்சிகுடி.
07. த.சரஸ்வதி, கரடியனாறு.
08. ச.சதீஸ் மகிழவட்டவான், ஆயித்தியமலை.
09. க.சரவணன், புல்லுமலை, ஆயித்தியமலை.
10. ச.கஜநிதன், ஆரையம்பதி, மட்டக்களப்பு.

# இணையத்தில் இயங்கு பக்கங்கள் (Dynamic pages) ஓர் அறிமுகம்

இது வலைத்தளம் அமைப்பவர்கள் அனைவரும் அறிந்திருக்க வேண்டிய ஒன்று. நம்மில் பலர் அவரவர்களுக்கு என வலைத்தளங்கள் அமைத்திருக்கின்றனர். அவற்றில் கட்டுரைகள், பலதரப்பட்ட சிந்தனைகள், கவிதைகள், பிற சிறந்த அல்லது சம்பந்தப்பட்ட வலைத் தளங்களுக்கான இணைப்புக்கள் என பக்கங்கள் ஒழுங்குற அமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டிருக்கின்றன.

இவை அனைத்தும் HTML எனப்படும் உயர்தொடர் எழுத்துக் குறிப்பிடு மொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. இத்தகைய வலைப் பக்கங்களை உருவாக்குவது மிகவும் எளிது. இவற்றிற்கு என்றே நிறைய மென்பொருள்கள் வழக்கில் இருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்திப் பார்ப்பதற்கு அழகிய பயன்படுத்திப் பக்கங்கள் அமைக்கப்படுமானால் அப்பக்கங்கள் நிலையான பக்கங்களாக("Static Page") இருப்பதுடன் அவற்றால், பயன்படுத்துபரோடு, அதாவது அந்தப் பக்கத்திற்கு வருகை தந்து அவற்றைப் பார்வையிடுபவரோடு எந்தத் தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ள முடியாது. அவைகளால் தங்களிடம் இருக்கும் தகவல்களை பிறருக்கு அளிக்க முடியுமேயொழிய பிறரிடம் ஏதேனும் தகவல்களைப் பெற்று அதனை தன்னுள் சேமித்து வைத்துக் கொள்ளவும் முடியாது.

நிலையான பக்கங்களுக்கு எடுத்துக் காட்டாக பல பக்கங்களைத் தரலாம். பலர் அவரவர்களுக்கு என உருவாக்கி இருக்கும் பக்கங்கள் அவரவர்களது கணினியில் வடிவமைக்கப்பட்டு அப்படியே வலையேற்றம் செய்யப்படுகின்றன. இவை கடைசி வரை எந்தவித மாற்றமும் இல்லாமல் வேண்டிய பொழுது தகவல்களை வேண்டுவோருக்குத் தந்து கொண்டிருக்கும். அவற்றில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டும் எனில் அதன் உரிமையாளர் அப்பக்கங்களை எடுத்து மாற்றங்களைச் செய்து மீண்டும் வலையேற்றம் செய்யவேண்டும்.

அதுமட்டுமா நீங்கள் "TAB" எழுத்துருவை உபயோகிக்கிறீர்கள். உங்களுக்காக பக்கங்களை நான் "TAB" எழுத்துக்களில் தருகிறேன். என்று கூறி அவருக்கு "TAB" உருவிலும் "TSC" எழுத்துக்களை உபயோகப்படுத்துபவருக்கு அந்தந்த உருக்களிலும் பக்கங்களைத் தந்தால் எப்படி இருக்கும். இவ்வாறும் வலைப் பக்கங்களை அமைக்க முடியும்.

அது படிப்பவர் எத்தகைய மொழியை அல்லது எத்தகைய எழுத்துக்களைப் பயன்படுத்துகிறார் என்பதை அறிந்து அந்த மொழியில் அல்லது அந்த எழுத்துருவில் பக்கங்களை அவரது கணினியில் காட்டும்.

இப்பொழுது இணையத்தில் நடத்தப்படும் கருத்துக் கணிப்புக்கள் மிகவும் பிரசித்தம் பெற்றுள்ளன. இவை எவ்வாறு நடத்தப்படுகின்றன? ஒவ்வொருவருடைய கருத்துக்களும் கருத்துக் கணிப்பு முடியும் வரை சேமித்து வைக்கப்பட வேண்டும். ஒருவர் ஒருமுறை வாக்களித்தால் மீண்டும் அவரை வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது. அவர்கள் தந்த வாக்குகளைக் கொண்டு அவ்வப்போது முடிவுகளையும் எத்தனை சதவீதம் பேர் ஒவ்வொரு கருத்துக்கும் வாக்களித்திருக்கிறார்கள் போன்ற கணக்கீடுகளையும், அதற்காக "Graph" களையும் தரவேண்டும் அப்பொழுது தான் பக்கங்கள் பயன்படுத்துவோரைக் கவரும் விதத்தில் இருக்கும்.

இவ்வாறு நடந்து கொள்ளும் பக்கங்களைத்தான் இயங்கு பக்கங்கள் என்று அழைக்கின்றோம். இத்தகைய இயங்கு பக்கங்களை எழுதவேண்டும் எனில் இதற்கு மேற்குறிப்பிட்ட "Server Side Programming" என்னும் வகை நிரல்களை எழுதவேண்டும். இவைகளை எழுத மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் "ASP" ("Active Server Pages") என்னும் மென்பொருளையோ அல்லது "Perl", "C" போன்ற கணினி மொழிகளையோ பயன்படுத்தலாம்.

இவ்வாறு வேறுவேறு மென்பொருள்களைப் பயன்படுத்தி நிரல்களை எழுதி அதன் மூலம் இயங்கு பக்கங்களை அமைப்பது என்பது உங்களது வலைத்தளம் அமைந்துள்ள பரிமாரிக் கணினியின் வினைக்கலனைப் பொறுத்தது. எடுத்துக் காட்டாக உங்களுடைய வலைத்தளம் ஒரு "விண்டோஸ் NT" வினைக் கலனைக் கொண்ட பரிமாரியில் இருந்தால் நீங்கள் "ASP" நிரல்களை எழுதலாம் அல்லாமல் அதுவே "Unix" அல்லது "Linux" வினைக் கலனில் அல்லது பிற பெருங் கணினிகளின் "Solaris" போன்ற வினைக்கலனில் இருந்தால் நீங்கள் "CGI Programs" எனப்படும் நிரல்களை "Perl" அல்லது "C" போன்ற மொழிகளைக் கொண்டு எழுதிப் பயன்படுத்தலாம். இத்தகைய நிரல்கள் பரிமாரியில் இருந்து கொண்டு உங்களது பக்கங்களை இய்க்கிக் கொண்டும் புதிய பக்கங்களை அவ்வப்பொழுது உருவாக்கிக் கொண்டும் இருக்கும்.

நீங்கள் ஒரு தகவல் தளத்திளை ("Database") பரிமாரியில் நிறுவி அதில் வேண்டிய தகவல்களைச் சேகரித்துக் கொண்டு அதனை வேண்டிய போதும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எடுத்துக் காட்டாக கானல் வலைத் தளத்தின் வலையகராதி ("Online Dictionary") நிரல்கள் "ASP" யினைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன. அங்கு அமைக்கப்பட்டுள்ள தகவல் தளத்தில் ("Database") ஆங்கில கலைச் சொற்களும் அவற்றிற்கு நிகரான தமிழ் கலைச் சொற்களும் சேமிக்கப்பட்டுள்ளன. நீங்கள் அங்கு கலைச் சொற்கிடங்கு என்னும் பக்கத்தை இயக்கி அங்கு ஆங்கில வார்த்தைகளை எழுதி அங்கிருக்கும் பொத்தானை அழுத்தினால் அது பரிமாரியில் நமது தகவல் தளத்தில் சேமிக்கப்பட்டுள்ள கலைச் சொற்களைச் சோதித்து அதில் தாங்கள் தந்த வார்த்தை இருக்குமானால் உடனுக்குடன் அதற்கு இணையான தமிழ்ச் சொல்லை அங்கு வெளியிடுகின்றன. இத்தகைய வேலைகளை வெறும் "HTML" மொழியில் எழுதப்பட்ட பக்கங்களால் செய்ய முடியாது.

அதுபோல நாம் விருந்தினர் வருகையை பதிவு செய்கின்றோம். மற்றும் கருத்துக்களை எழுதும் பக்கங்கள் ரீடிப் வலைத்தளத்தின் கரும்பலகையில் எழுதுங்கள் போன்றவை, மற்றும் யாகூ, கொட்மெயில் வலைத் தளத்தில் பயன்படும். வாடிக்கையாளர்களைப் பதிவு செய்யப் பயன்படும் பத்திரங்கள் மற்றும் அவற்றின் நாம் தரும் தகவல்களை முறையாகப் பதிந்து, அவற்றை மீண்டும் பயன்படுத்தி நம்மை சரியானவர்களா என சோதித்து அனுமதிக்கும் பக்கங்கள் போன்றவை இத்தகைய நிரல்களால் எழுதப்பட்டுள்ளன.

மின்-வணிகத்தில் ("e-Commerce") இத்தகைய பக்கங்களே வியாபார சம்பந்தத் தொடர்புகளை இணையத்தின் வழியே அமைக்கிறது.

சாதாரணமாக "HTML" மொழியில் எழுதப்பட்டுள்ள பக்கங்கள் நமது உலவி வழியே நமது திரையில் தெரிகிறது. ஆனால் இந்த பரிமாரி நிரல்கள் அங்கிருந்தபடியே பக்கங்களை இயக்குவதால் நம்மால் அவற்றில் என்ன எழுதப்பட்டுள்ளன. எத்தகைய கட்டளைகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. எனக் காணமுடியாது. எனவே பிறர் நாம் எழுதிய நிரல்களை எடுத்து அவருடைய பக்கங்களுக்கு பயன்படுத்தி விடுவர் என்று நாம் அஞ்சவும் தேவையில்லை.

**நி.பிரதீஷ்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

## பத்து வயது குழந்தை எழுத்தாளியாகிறது

எப்படியெல்லாமோ புத்தகங்களை எழுதி சாதித்த குழந்தைகளை பார்த்திருப்பீர்கள். இதோ 10 வயது லிப்பியை பாருங்கள், இந்த குட்டீஸ் எழுதிய புத்தகம், உலக அளவில் பிரபலம் அடையப் போகிறது.

புத்தகத்தில் என்ன இருக்கிறது? ''பெற்றோர் விவாகரத்துச் செய்தால் குழந்தைகள் எப்படிச் சமாளிப்பது, வாழ்க்கையை சந்தோஷமாக தொடர்வது'' என்பது பற்றி ஏகப்பட்ட கருத்துக்களைத் தந்துள்ளார் இந்தக் குட்டீஸ் எழுத்தாளர்.

லண்டனைச் சேர்ந்த லிப்பி ரீஸ், வயது 10. தாய் கேதரின், தந்தை லாக்மென் ஆகியோருக்கு பிறந்த குழந்தை. சிறு வயதிலேயே பெற்றோர் விவாகரத்துச் செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இருவருக்கும் எப்படியெல்லாம் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது என்பதை உணர்ந்தாள் லிப்பி.

மற்றக் குழந்தைகள் போல, வழி தவறாமல், தன் தாயுடன் தொடர்ந்து வாழ்க்கையை நடத்தி, சாதித்தும் காட்டிவிட்டாள் லிப்பி. எப்படி தெரியுமா? சிறிய வயதிலேயே புத்தகம் போட்டு சாதித்துக்காட்ட தயாராகிவிட்டாள்.

அவள் எழுதிய புத்தகத்தின் பெயர், ''ஹெல்ப், ஹோப், ஹேப்பினஸ்'' என்பது தான். 60 பக்க வழிகாட்டி புத்தகம் இது. ''விவாகரத்து என்பது சகஜமாகி விட்டது. அப்படி பெற்றோர் பிரியும் போது, அதனால் பாதிக்கப்படுவது குழந்தை தான். அதனால், குழந்தைகள் இப்படிப்பட்ட சூழ்நிலையில், எப்படி சமாளித்து, படித்து சாதிப்பதுடன், மனநிலையை தெளிவாக வைத்துக்கொள்ள வேண்டும்'' என்றெல்லாம் பல கருத்துக்களை தந்து எழுதியிருந்தது லிப்பி.

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த பிரபல பதிப்பகம் ''ஆல்ட்பீ'' என்ற கம்பெனிக்கு இந்த புத்தகத்தை அனுப்பி வைத்திருந்தார் தாய் கேதரின். அவரிடம் தான் லிப்பி, இப்போது வாழ்ந்து வருகிறாள்.

புத்தகத்தைப் பார்த்த 24 மணிநேரத்தில், கேதரினுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. ''உங்கள் குழந்தை புத்தகத்தை நாங்கள் பதிப்பிக்கிறோம், ஒப்பந்தம் போட உங்களை அழைத்துச் செல்ல வருகிறோம்'' என்று கம்பெனி அதிகாரிகள் கூறினர்.

அதன்படி, ஸ்காட்லாந்து, இவன்னெஸ் என்ற பகுதிக்கு விமானத்தில் அழைத்துச் செல்லப்பட்டார் லிப்பி, அவர் தாய் கேதரின். அங்கு கம்பெனி நிர்வாகியுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது. விரைவில் இந்தப் புத்தகத்தை அச்சிட்டு, பிரபலப்படுத்துவதாக கம்பெனி நிர்வாகிகள் கூறினர்.

லிப்பி புத்தகத்தில் பெரிய தத்துவ வாசகங்கள் எதுவும் இல்லை. இருந்தாலும், விவாகரத்து பெற்ற பெற்றோரின் குழந்தைகளுக்கு இது அரிய யோசனையாக இருக்கும். லிப்பி சொன்ன சில கருத்துக்கள்:

- ஹாய், நீங்கள் தனிமையில் இருக்காதீர்கள், அப்படி இருந்தால் புத்தகம் படியுங்கள், ''தொலைக்காட்சி'' பாருங்கள்.
- கண்ணாடி முன்பு தினமும் நின்று, நான் சந்தோஷமாக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளுங்கள்.
- நீங்கள் கவலையாக இருக்கும்போது, ஏதாவது ஒரு பழமொழியை நினைத்து, அதன்படி சாதகமாகச் சிந்தியுங்கள்.
- தனி அறையில் இருந்து கொண்டு, மனதில் உள்ளதைக் கொட்டி அழுது விடுங்கள்.
- உடற்பயிற்சி செய்யுங்கள், அது உங்கள் உடலில் இருந்து ''என்டோர்பின்ஸ்'' வெளியேற உதவும். அப்போது தான் உங்களால், எதையும் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெற முடியும்.

இப்படி, சமூக, சமுதாய, அறிவியல் ரீதியாக பல கருத்துக்ககளை தந்துள்ளாள் லிப்பி. இந்த புத்தகம், பிரிட்டனில் மட்டுமின்றி, உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என்று பதிப்பாளர் எதிர்பார்க்கிறார்.

வளமை போல அன்றும் உறங்கிக் கிடந்த இரவை காலை புலர்கிறது என்பது போல் சேவல் ஒன்று கூவென்று அழைக்க, இன்னுமோர் வீட்டில் இருந்து பதில் சொல்வது போல் சேவல்கள் போட்டி போட்டுக் கூவின. இதையும் விட இனிமையான குரலில் தனது இனிய ஓசையினைப் பரப்பியது குயில். நானும் சளைத்தவன் அல்ல என்று செண்பகமும் கூவியது. எல்லாமே போட்டி போட்டுக் கூவ அந்த இனிய காலைப் பொழுது இசை மழையில் மலர்ந்தது.

அப்போது சாளினி குழந்தையை இறுக அணைத்தபடியே விழியை விரித்துப் பார்த்தாள். ஓ... விடிந்து விட்டது என நினைத்துக் கொண்டு மெதுவாக எழுந்து குழந்தையை மூடினாள்.

அருகில் படுத்திருந்த கணேசனைப் பார்த்து ''ஐயோ பாவம் விடிந்தால் இருளும் வரை உடம்பை வருத்தி வீட்டில் உணர்விழந்து மனிதன் படுத்திருக்குது. என்னதான் நல்ல சாப்பாடு செய்து கொடுப்பது. வாற சம்பளமும் காணாது பொருள் விலையும் அப்படி இறைவனும் எங்களை எல்லா வகையிலும் வாட்டி வதைக்கிறான். யாரிடம்தான் சொல்வது" என்று எண்ணியவாறு


"இஞ்சே பாருமப்பா! என எழுப்பினாள். இஞ்ச பாருமப்பா என்றது கணேசின் நித்திரையைக் கலைத்தது. இஞ்ச பாரும் விடிந்து விட்டது. வேலைக்குப் போவதில்லையா" என தழுதழுத்த குரலில் கேட்டாள்.

''ஓம் சாளினி போனால்தான் இரவு சாப்பிடலாம். நான் போவதற்கான ஆயத்தங்களைச் செய்கிறன்" என்றான்.

சரியப்பா தம்பி எழும்புவதற்குள் தேத்தண்ணி கொண்டு வாறன் என்றாள். சரி என்று நேரத்தைப் பார்த்தாள்.

ஐயையோ நேரம் ஆறு மணியாகிவிட்டது என்று அவசர அவசரமாக எழுந்து மின்னல் வேகத்தில் வேலைகளை முடித்து தயாரானான்.

சாளினியும் தேத்தண்ணி கொண்டு வந்தாள். "நல்ல காலம் எழும்பி விட்டாய்" என்று சிரித்தான் கணேஸ். ஓமப்பா எமக்கு எப்பவும் நல்ல காலம்தான். ஆனால் என்று என்று நிறுத்தி விட்டாள். என்ன ஆனால் சொல்லு சொல்லு என்றான்.



# பூ ஒன்று புயலாகிறது

இல்லையப்பா "உங்களுக்கும் அம்பா, அப்பா இல்லை. எனக்கும் அம்மா அப்பா இல்லை" எல்லோரும் இருந்திருந்தால் நாங்கள் இந்த உலகத்தை வெறுக்க வேண்டியது இல்லை. இன்னும் நல்ல காலமாகத்தான் இருந்திருக்கும். என்று விம்மி அழுதாள். சாளினியின் மனக் குமுறலை உணர்ந்த கணேஸ்.

''சாளினி நாங்கள் என்னதான் செய்தாலும் செத்தவர்கள் மீண்டும் வரமாட்டார்கள். எல்லோருக்குமாகத்தான் ஆதித்தியன் பிறந்திருக்கான். அவனே எங்களுக்கு விடிவெள்ளி" என ஆறுதல் கூறி கண்ணீரைத் துடைத்தான். அதுவே பெரும் ஆறுதலாக ஏற்ற சாளினி மீண்டும் வழமைக்கு மாறினாள்.

சரி நான் வேலைக்குப் போறன் என குழந்தையைத் தூக்கி ''அப்பா வரும் வரை அம்மாவுக்கு கரைச்சல் கொடுக்கக்கூடாது" என கணேஸ் கூற கொஞ்சும் மழலையில் கலகலவென சிரித்தான். ஆதித்தனை சாளினியிடம் கொடுத்து விட்டு போட்டு வாறன் என்று தனது தொழில் பயணத்தைத் தொடந்தான். கற்குவாரியில் தனது தோழர்கள் இருப்பதைக் கண்டு, என்ன மச்சான் இன்றைக்கு கொஞ்சம் பிந்தி விட்டேன் கோவிக்காதைங்கோ என்றான்.

**வி.எஸ்.பார்த்தீபன்**

என்னதான் செய்தாலும் அல்லும், பகலும் என்றாலும் ஆறித்தன் செய்கிறம் ஆனால் கல் உடைப்பது என்றால் சும்மாவா? என மாறி மாறி கதைத்துச் சிரித்து வேலைக்குத் தயாராகினர். கற் பாறையை உடைக்கும் போது ஒரே சத்தம். அப்போது வானம் இடிவது போன்ற வித்தியாசமான சத்தம் கேட்கின்றது.

டேய் தம்பியளே ஒருத்தரும் சத்தம் போடவேண்டாம் எனச் சிவம் கூற, எல்லோரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து அமைதியாகினர்.

அப்போது குமார் சொன்னன் "வம்பர் வாறான் குண்டு போடப் போறான்" ஓடுங்கோ என கத்துவதற்கு முன்னர் எல்லோரும் கலைந்து கால்போன போக்கில் ஓடினார்கள். கணேஸ் தன் வீட்டுக்கு விரைந்தான். சாளினி ஆதித்தனை இறுகப் பற்றிக் கொண்டு குந்தியிருந்தாள். களைத்து ஓடின கணேஸ், சாளினி என்னவோ தெரியாது இன்று இங்கால சுத்துறான் எங்கையாவது குண்டைப் போடப் போறான் என்றான் கணேஸ்.


எப்பதான் எங்களுக்கு நிம்மதி இருக்கு என்னப்பா செய்றது என்று வாடிய முகத்துடன் கேட்டாள் சாளினி. எதற்கும் பயப்பட வேண்டாம். முதல் இந்த மரத்தடிக்கு வா என்று வேப்பமரத்தடியில் இருத்தினான். சுற்றிச் சுற்றிப் பார்த்தான். எங்கோ தொலைவில்தான் சத்தம் கேட்குது. இஞ்சால வரமாட்டான் என ஆறுதல் கூறினான். சற்று வெளியே வந்து வீதியைப் பார்த்தான். பக்கத்து கிராம மக்கள் மூட்டை முடிச்சோடு தொலைவில் வருவதைக் கண்டான்.

மீண்டும் முகம் சுளித்தது. வாடிய முகத்துடன் இங்கே பாரும் சாளினி எல்லோரும் இடம் பெயரினம். எடு சாமான்களைக் கட்டுவம் என்றான்.

ஓமப்பா எல்லோருடனும் போய்ச் சேரவேணும் என அகப்பட்ட பொருட்களைக் கட்டிய வேளை எங்கிருந்தோ வானை இடித்தது போல் காற்றைக் கிழித்துக் கர்ச்சித்து வருவதைக் கேட்ட சாளினி "ஆதித்தா" என்று ஓங்கிக் கத்தியவாறு ஓடினாள். உகமே அதிர்ந்தது போல் புகை மண்டலம் எந்தச் சத்தமும் இல்லை. எல்லாம் அடங்கிப் போய்க் கிடந்தது.

தொடரும்......

# தமிழ் பேசும் முஸ்லிம்களும் சமஷ்டி ஆட்சியும்



இது பதியுதீனுக்கும் தேன் துளியாகி விட்டன. எப்படி....? ஆ.தமுலங் எல்லாம் கல்லத் தோனி கல்.... முயிம் லொங் மரக் கலத்தோனியில் வந்த வலுகல்.... அப்படிங் என்டால் நாமல் கல்லங் கல்லாங் ஓ.... என்ற அரை குறைத் தமிழில், சிங்களத் தமிழில் பதியுதீன் கல்வி மந்திரியின் நரி மூளையும் பண்டாரநாயக்காவின் காலடிக்குச் சேவகம் புரியத் தொடங்கியது.

ஆலிம், மௌலவி, பள்ளி வாசல் மரைக்காயர், இளைஞர், யுவதிகளிடம், முஸ்லிம் மத இனவெறிகளை ஊட்டி இஞ்ச பாருங்கோ நம்மட முயிம் சமுதாயம் பின்தாங்கிப் போவுது. யாராலே தெரியுமா? தமுலங்கட்சிள், செல்வநாயகம் ஆக்கலாலே. முயியிமுக்கு உத்தியோகந் தராமல் தமுலுக்குப் பொடியங்கெல்லாம் வேலகுடுக்குறாங். நாம இனி தமிழ் கட்சியில சேரப்படாது. இப்ப பண்டாரநாயக்கா என்னைக் கல்வி மந்திரியாக்கினது உங்களுக்கெல்லாம் இப்ப வேல தாறங்... என்றெல்லாம் தமிழ்த் தலைவர்களை முஸ்லிம்களுக்கு இனவாத, மதவாத வெறியூட்டினார் பதியுதீன் மஹ்மூத்.

தமிழறிஞர்கள் வேலை பார்த்த உயர் கல்விக் கணக்காளர், டாக்டர், நீதிபதி போன்ற பதவிகளில், சாதாரண பட்டதாரிகளைப் பறித்துக் கொடுத்தார். தமிழரசுக் கட்சியனர் கொதித்தெழுந்தனர். பதியுதீனுக்கு யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், திருகோணமலையும் எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தினார்கள். கொடும்பாவி எரித்தார்கள். வடக்குக் கிழக்கில் பத்தாயிரம் பட்டதாரிகள் வேலையற்று அலைந்து, நாடாளுமன்றம், கல்விக்கந்தோர் முன் எதிர்க் கோஷங்கள், உண்ணாவிரதம் நடத்தி பண்டாரநாயக்காவின் அ

**ஈழபாரதி**

ரசு, பலநாள் இயங்காமல் போராடினார்கள்.

காலி முகத்திடலில் பலநாள் உண்ணாவிரதம், அஹிம்சைப் போராட்டம் நடாத்திய செல்வநாயகம், நாகநாதன், இரத்தினம், இராசமாணிக்கம் போன்றவர்களுக்குக் குண்டாந்தடிகளால் அடித்துத் துன்புறுத்தி சாக்கடைகளில் தூக்கித் தூக்கி வீசினார்கள். பொலிசார்கள், சிங்களக் காடையர்களும், அபேலங்கா, தெமிலியோ, ஹொரக்கலயோ என்றும் தூசண அம்மணச் சிங்களத்தில் ஏசி, அடித்துப் பொருள், தங்கம், கண்ணாடி, மோதிரம், காசுகளையும் அபகரித்தார்கள்.

பாதுகாப்பு அமைச்சர், காவலர்கள், தமிழபிமானிகள் பண்டாரநாயக்கா பிரதமருக்குக் காரில் கூட்டி வந்து காலி முகத்திடலில் செல்வா - நாகா, இராசமாணிக்கம் தலைவர்கள் தாக்கப்படுவதைக் காணபித்ததும் ஹரி.. தமாய் தெழிஹோ.... நல்லா உதைபட்டாத்தான் நம்மளோட பயந்து ஒத்து வருவானுக..." என்றார்.

எங்கள் தாய்மொழி எங்கள் தமிழ் மொழி
இழிவு செய்வோனை இனியும் நாம் விடோம்!
எங்கள் இஸ்லாம், எங்கள் இந்து கிறிஸ்த்து
எல்லா மதங்களுக்கும் இனிய தமிழ் மொழிதான்..."

என்றெல்லாம் விடுதலைப் பரணிக் கீதங்களைப் பாடினோம், பத்திரிகைகளில் எழுதினோம், மறியல் போராட்டங்களை நடாத்தினோம். இந்தக் காலகட்டத்தில் தான் பண்டார நாயக்கா 1959ல் 12ம் மாதம் அவரின் வீட்டில் வைத்து சோமராம தேரோ என்பவரால் துப்பாக்கிச் சூட்டுக்குக் கோரமாகப் பலியானார்.

எந்தப் பிக்குமாருக்கு பௌத்த மத வெறியூட்டி வளர்த்தாரோ, பிரதமராகும் பேராசையில் தேரோமாருக்குப் புத்தசாசன உயர் பதவி கொடுத்து ஐந்தாறு வருட காலத்துள் நாட்டு மக்களை, முஸ்லிம்களை, தமிழர்களை அழித்து வந்தாரோ அதே பிக்குவால், பண்டாரநாயக்கா சுட்டுப் பலியாக்கப்பட்டார்.

1960பதிலிருந்து, பிக்குமார், பௌத்த மத வெறிபிடித்து நாடு, நகர முக்கிய இடமெல்லாம் புத்தர் சிலை வைப்பதும், தமிழ், முஸ்லிம் பிரதேச மக்கள் அரசுக்கெதிராகப் போராடுவதும், இன்று வரை பழக்கமாகி விட்டன. தமிழரசுக் கட்சித் தலைவர்களும், பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் என்றெல்லாம் சிங்கள அரசியல் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டக் களத் தளத்தில் இன்றும் துணிந்து போர்ப் படையணியாக வந்து கொண்டிருக்கின்றனர். சிங்களவர் சமஸ்டி ஆட்சிக்கு வராவிட்டால்...????

# சதாம் மீதான வழங்கு விசாரணை

## மீண்டும் ஒத்தி வைப்பு

சியா பிரிவினர் வசிக்கும் துஜையில் பகுதியில் 148 பேர் கொல்லப்பட்டமை தொடர்பாக (சதாம் உட்பட 8 பேர் மீது) தொடரப்பட்ட வழக்கு விசாரணை ஏற்கனவே இரு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் ஐந்து வாரங்களின் பின்னர் கடந்த திங்கட் கிழமை 3வது தடவையாக விசாரணைக்கு வந்தது. இரு நாட்கள் நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் மீண்டும் விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் வழக்கறிஞர்களில் இருவர் கொல்லப்பட்டிருப்பதால், அவர்களுக்குப் பதிலாகப் புதியவர்களை நியமிக்க அவகாசம் வழங்கும் விதத்தில் நீதிபதி வழக்கை ஒத்தி வைத்துள்ள தாகக் கூறப்படுகின்றது.

கடந்த வாரம் வழக்கு விசாரணை இடம் பெற்ற போது, "சட்டத்தை மதிக்கும் அணைவருக்கும் வணக்கம்" என்று கூறியபடி நீதிமன்றத்திற்குள் நுழைந்த சதாம் ஹூசைன், சிறையிலும், நீதிமன்றத்திலும் அமெரிக்க இராணுவக் காவலர்களால் அவமதிக்கப்படுவதாக ஆவேசமாகக் குற்றம் சாட்டினார்.

பழுதூக்கி (லிப்ற்) பழுதாகி விட்டதாகக் கூறித் தன்னை மாடிக்குப் படியேற வைத்து விட்டார்கள் என்றும், சிறையில் தன்னிடம் இருந்த பேனாவையும், தாளையும் பறித்துக் கொண்டு விட்டார்கள் என்றும் கூறியதுடன், சிறைக் கைதியானதான் பேனாவும், தாளும் இல்லாமல் எவ்வாறு தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று ஆவேசமாகக் கேள்வி எழுப்பினார். இதை அமெரிக்க இராணுவத்தினரிடம் சொல்லுங்கள் என்று உங்களை நான் கேட்கமாட்டேன். நீங்களும் ஒரு ஈராக்கியர். உங்களுக்கும் இறையாண்மை இருக்கின்றது. அவர்கள் உங்கள் நாட்டில் ஆக்கிரமித்திரு க்கின்றார்கள். அவர்கள் அந்நியர்கள். ஆக்கிரமிப்பாளர்கள் என்றார். உடனே நீதிபதி குறுக்கிட்டு, பேனாவும், தாளும் அவருக்கு மீண்டும் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

இவ்விசாரணைகளின் போது, சதாம் ஹூசைன் சார்பில் வாதிட அமெரிக்க முன்னாள் அட்டர்னி ஜெனரல் ராம்சே கிளார்க், கட்டார் நாட்டு முன்னாள் நீதித்துறை அமைச்சர் நாஜி நுயாமி ஆகியோர் வந்திருந்தனர். ஆனால் அவர்கள் பேசுவதற்கு நீதிபதி முஹமது ரிஸ்கர் அமின் அனுமதி வழங்க மறுத்தார்.

பேசவேண்டியதை எழுத்து மூலமாகத் தெரிவித்தால், எழுத்து மூலம் பதிலளிப்பதாக அவர் கூறினார். அப்போது சதாம் ஹூசைன் குறுக்கிட்டு, "ஆக்கிரமிப்புக் காலத்தில் அமைக்கப்பட்ட இந்த நீதிமன்றத்திற்கு என்ன சட்ட அங்கீகாரம் உள்ளது?" என்று உரத்துக் கேள்வி எழுப்பினார்.

சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதற்கும், பேசுவதற்கும் தனது வெளிநாட்டு வழக்கறிஞர்களுக்கு அனுமதியளிக்க நீதிபதி மறுத்ததால், நீதிபதியுடன் தர்க்கத்தில் ஈடுபட்ட சதாம், பின்னர் தனது வழக்கறிஞர்களுடன் வெளி நடப்புச் செய்யப் போவதாக அறிவித்தார்.

அதற்கு நீதிபதி, "தாராளமாகச் செய்யுங்கள் அதன் பிறகு நாங்கள் வேறு வழக்கறிஞர்களை நியமிப்போம்" என்றார். அப்போது சதாம் ஆவேசமடைந்தார். நீதிமன்றம் நியமிக்கும் வழக்கறிஞர்களை ஏற்க முடியாது என்று கூறினார்.

"ஈராக் நீடூழி வாழ்க, அரபு நாடு நீடூழி வாழ்க" என்று உரத்த குரலில் கூறிவிட்டு, தனது வழக்கறிஞர்களுடன் வெளிநடப்புச் செய்தார். இதனால் விசாரணையைத் தொடர முடியாமல் நீதிபதி ஒத்தி வைத்தார். நீதிபதி தங்களைப் பேச அனுமதிக்காத செயல், குற்றம் சாட்டப்பட்டோரின் உரிமையை மீறிய செயல் என்று வழக்கறிஞர் நாஜி நுயாமி குற்றம் சாட்டினார்.

எனினும் பின்னர் நீதவான் எதிர்த்தரப்பினரைப் பேசுவதற்கு அனுமதித்தார். இதையடுத்து முதலாவது சாட்சி சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார். திரைக்குப் பின்னால் நின்றிருந்த அவரை அடையாளம் கண்டுபிடித்து விடக் கூடாது என்பதற்காக அவரது குரலும் இலத்திரனியல் கருவிகளால் மாற்றப்பட்டு ஒலிபரப்பப்பட்டு வந்தது.

என்னுடன் குடும்பத்தினரை அழைத்துச் சென்றனர். விசாரணைக் கூடத்திற்குள் எனது உடை உரியப்பட்டது. நான் நிர்வாண கோலத்தில் விடப்பட்டேன். மேசையோடு சேர்த்து என்னைச் சங்கிலியால் பிணைத்துக் கட்டினார்கள்.


ஐந்து பேர் என்னை உருக்கு வயர்களால் அடித்தனர். மின்சார அதிர்ச்சியூட்டினர். என்னோடு இன்னும் பல சிறுமிகளும் சித்திரவதை செய்யப்பட்டார்கள். இப்பாதிப்புகளால் பிற்காலத்தில் எங்களால் திருமணம் செய்துகொள்ள முடியவில்லை. பிள்ளைப் பேற்றை அடையவும் இயலவில்லை.

### பாரிஸிலிருந்து துவாரகா

இச்சித்திரவதைகளுக்குப் பின்னர் நாங்கள் பாலைவன முகாமிற்கு அனுப்பப்பட்டோம். பாலை வன முகாமில் நாங்கள் நான்காண்டு காலமிருந்தோம். அசௌவுகரியங்களுக்கு மத்தியில் அவதிப்பட்டோம். எங்கள் வேதனையை விளக்க முடியாது. நாங்கள் எல்லாவற் றையும் இழந்தோம். நான் எனது இளமையை இழந்தேன். நாங்கள் எம் எதிர்காலத்தை இழந்தோம். என்று அழுகையுடன் கூறினார்.

இச்சமயத்தில் குறுக்கிட்ட மூத்த நீதவான் அப்பெண்ணிடம் "ஏற்கனவே நீங்கள் வாக்குமூலமளித்திருக்கின்றீர்கள், அதில் நீங்கள் அளித்த தகவல்கள், தங்களின் தற்போதைய தகவல்களுக்கு முரண்பட்டனவையாக இருக்கின்றனவே?" என்றார். அதற்கு அப்பெண் "அது உண்மை தான்" என ஒப்புக்கொண்டார்.

இதில் சாட்சியமளித்திருப்பவர்கள் பணத்தைக் குறிப்பாகக் கொண்டவர்கள் என்றும், ஏற்



கனவே தாம் பாதிக்கப்பட்டமைக்காக பண ரீதியிலான நஷ்ட ஈட்டை எதிர்பார்த்தும், கோரியும் வந்தவர்கள் என்றும், எதிர்த்தரப்பு வழக்கறிஞர் ஒருவர் சுட்டிக் காட்டினார்.

அஹ்மத் ஹஸன் மொஹ மத்அல் ஜெய்லி என்பவர் சாட்சியமளிக்கையில்:-

அக்கால கட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களில் தாமும் ஒருவர் எனத் தெரிவித்துக் கொண்டார். "எனது கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. திறந்தோன். இராணுவ இரகசிய சேவைப் பிரிவைச் சேர்ந்தோர் உள்ளே வந்தனர்.

இவ்வாறு வந்தவர்களால் கைது செய்யப்பட்டவர்கள் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். பெருந்தொகையானோர் அங்கு கொல்லப்பட்டனர். பயங்கரமான காட்சிகள் குழந்தைகளோடு பெண்களும் கைது செய்யப்பட்டார்கள். படுகொலை செய்யப்பட்ட எனது அயலவர்களின் சடலங்களையும் நான் கண்டேன். என்று கூறி விம்மி விம்மி அழுதார்.

இதன்போது பத்து வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். ஒரு கட்டத்தில் சாட்சி ஒன்றின் விசாரணையின் போது குறுக்கிட்ட சதாம், சாவைப் பற்றிய பயம் எனக்கு இல்லை. உங்களுக்கு என் தலை தேவைப்படுமானால் அதைத் தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள். நான் மரண தண்டனைக்குப் பயப்படவில்லை. அது ஈராக்கியரின் கால் செருப்புக்குச் சமம் என்று ஆவேசமாகக் கூறினார்.

சதாம் ஹூசைனின் ஒன்று விட்ட தம்பியும், உளவுத்துறைத் தலைவருமான பர்சான் அல் திகிரியும் இந்த வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டு இருக்கின்றார். அவர் கையில் துப்பாக்கியுடன் துஜயில் நகரில் அலைந்தார். கண்ணில் கண்டவரை எல்லாம் சுட்டுத் தள்ளினார் என்று ஒரு சாட்சி கூறிய போது பர்சான் அதை மறுத்தார்.

துஜயில் நகரில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்த உளவுத் துறையினரின் பெயர் பட்டியல் தன்னிடம் இருப்பதாகச் சாட்சி ஒருவர் சொன்ன போது, உளவுத் துறையினரின் பெயர்கள் இரகசியமாக வைக்கப்பட்டு இருக்கும்.

அது எப்படி உங்களுக்குத் தெரிந்து இருக்க முடியும் என்று பர்சான் கேள்வி எழுப்பினார். இவ்வாறான பல்வேறு தரப்பு விசாரணைகளுக்குப் பின் அடுத்த கட்ட நகர்வுகளின் வழக்கு விசாரணைகளை காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக நீதிபதி அறிவித்துள்ளார். எப்போது என்பது குறிப்பிடப்படவில்லை.

## மாணவர் பரிசுக் குவியல்

**தமிழ் பேசும் மாணவச் செல்வங்களுக்கு!**

ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு மாணவர்களின் அறிவுத்திறனை விருத்தி செய்யும் வகையில் வாரந்தோறும் பரிசுத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்தப் பரிசுக் குவியலில் நீங்களும் அதிஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்படுமிடத்து பெறுமதி மிக்க அறிவு நூல்கள், பாடசாலை உபகரணங்கள், பரிசுகளாக வழங்கப்படும்.

நீங்கள் செய்யவேண்டியது இவை தான்,

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடையை எழுதி – பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி முகவரியை வெட்டியொட்டி அனுப்புதல் வேண்டும்.

முதலாவது அதிஷ்டசாலிக்கு பரிசும், பாராட்டுப் பெறும் ஐந்து மாணவர்களின் பெயர், பாடசாலை விபரங்களும் பிரசுரிக்கப்படும்.

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி:-02.01.2006**

அனுப்பவேண்டிய முகவரி

**மாணவர் பரிசுக்குவியல்- 64**
**ஈழநாதம் (மட். பதிப்பு), பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**

இவ்வார வினாக்கள்.

01. இலங்கையின் புதிய இராணுவத் தளபதி யார்?
02. உலகிலேயே எரிமலை அதிகமுள்ள நாடு எது?
03. இந்தியாவின் இரும்புப் பெண்மணி என வர்ணிக்கப்பட்டவர் யார்?
04. இலங்கையின் ரூபாய் சத நாணயமுறை எப்போது புழக்கத்திற்கு வந்தது?
05. உலகப் புகழ் பெற்ற கோபுரம் எது?

### பரிசுக்குவியல் 62 இற்கான சரியான விடைகள்

01. அனுரா பண்டாரநாயக்கா. 02. 05.12.2005 அன்று 10 ஆண்டு.
03. ஏரியல் ஷெரோன். 04. 28.11.05ல். 05. இந்தோனேசியா.

### பரிசுபெறும் அதிஸ்டசாலி

என்.டிலக்சினி.
தரம் 7.
மட் -விவேகானந்தா ம.ம.வித்.

### பாராட்டுப்பெறுவோர்

01. ஜி.குணாளன், தரம் - 11, மட்.மத்திய கல்லூரி.
02. எஸ்.சாரங்கா, தரம் - 8, மட்.ஆரையம்பதி ம.வி.
03. தி.சிந்துஜன், தரம் - 7, மட்.அரசடித்தீவு வி.ம.வித்.
04. சி.சங்கவி, களுவாஞ்சிகுடி.
05. த.லோஜினி, தரம் - 10, மட்.புதுக்குடியிருப்பு வித்.

**மட்டு நகரில் சகலவிதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் அறிவு நூல்களுக்கு :-**




**தொ.பே.இல:- 065-2222371 065-2225341**

### ப்ரியமான நாதமே!

வெள்ளி தவறாமல் விடி
வெள்ளியாய் தோன்றும் என்
சகி நாதமே!
நீ சுமந்து வரும் ஆக்கங்கள்
யாவும் என் மனதைக் குளிர
வைக்கின்றது!
ஆகையால் என் மன
மகிழ்ச்சியுடன் வாழ்த்துத்
தெரிவிக்க ஆசைப்
பட்டுள்ளேன்! ஆனாலும்
அதில் வரும் எல்லா
ஆக்கங்களும் என் மனதைக்
கொள்ளை கொண்டு என்
மனதைக் குளிர வைக்கின்றன!
அதிலும் நீ சுமந்து வரும்
அனைத்து ஆக்கங்களையும்
விட சிறு கதைகளும், கவி
நாதமும் சோர்வடைந்த என்
மனதை மென் மேலும்
மெருகூட்டிக் மகிழ
வைப்பதற்கும், குளிர
வைப்பதற்கும் வாழ்த்துத்
தெரிவிப்பதுடன், நன்றிகளும்,
பாராட்டுக்களும் ஒவ்வொரு
வாரமும் உன்னைத்
தொடர்ந்து கொண்டிருக்கும்.

**எஸ்.புரட்சிகா.**




### என் இனிய நாதமே!

**வீசுகின்ற காற்று
தன் வேகத்தை
மறந்தாலும்
ஆடுகின்ற மயில்
தன் ஆட்டத்தை
மறந்தாலும்
பாடுகின்ற குயில்
தன் பாட்டை
மறந்தாலும்
கூவுகின்ற சேவல்
தான் கூவுவதை
மறந்தாலும்
நான் ஈழநாதத்தில்
வரும் தமிழின
அழிப்புக்களின்
நினைவுச்
சுவடுகளை படிக்க
மறக்கமாட்டேன்.**

**கவிமகன்,
அரசடித்தீவு.**

# அரசியல் ஆகிறது கங்குலி விவகாரம்



கங்குலிக்கு ஆதரவாக எழுந்துள்ள ரசிகர்களின் அனுதாப அலையில், ஆதாயம் தேட கட்சிகள் முயன்று வருகின்றன. சரத் பவாருக்கு எதிராக சக அமைச்சர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளது, மத்திய அரசுக்கு இப்பிரச்சினையில் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்கு வங்க அரசியல் தலைவர்களோ, வரும் சட்டசபை தேர்தலில் கங்குலியை காட்டி ஓட்டு வங்கியை அதிகரிக்க திட்டமிட்டு வருகின்றனர். இதற்காகத் தான் கம்யூனிஸ்ட், காங்கிரஸ் என்ற பாகுபாடில்லாமல் அனைத்து கட்சிகளும் அவருக்கு ஆதரவாக வரிந்து கட்டுகின்றன. இவ்விஷயத்தை நாடாளுமன்றில் கிளப்ப, சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜியே அனுமதித்துள்ளார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

இந்திய அணியில் இருந்து கங்குலி நீக்கப்பட்ட விவகாரம் தற்போது அரசியலில் விஸ்வரூபமெடுத்துள்ளது. இவரது நீக்கத்திற்கு பயிற்சியாளர் சாப்பல் தான் முக்கிய காரணம் என கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், சபைத் தலைவராக தேர்வு செய்யப்பட்ட மத்திய அமைச்சர் சரத் பவார் தான் காரணம் என அரசியல் வட்டாரங்கள் நம்புகின்றன.

சக அமைச்சர்களான பிரிய ரஞ்சன் தாஸ் முன்ஷி, பிரபுல் படேல் ஆகிய இருவரும் சரத் பவாருக்கு இவ்விஷயத்தில் எதிர்ப்பாக உள்ளனர். மக்கள் உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளித்து கங்குலியை அணியில் சேர்க்கும்படி வலியுறுத்தி வருகின்றனர். கங்குலி விவகாரம் அமைச்சரவையிலேயே கருத்து வேறுபாட்டுக்குரியதாக மாறிவிட்டது.

இவர்களை தவிர லோக்சபா சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி, மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா, பிரணாப் முகர்ஜி ஆகியோரும் பவாரிடம் தங்களது அதிருப்தியை தெரிவித்துள்ளனர். இதன் உச்சகட்டமாக சமாஜ்வாடி எம். பி., மோகன் சிங் நாடாளுமன்றில் கங்குலி விவகாரம் பற்றி விவாதிக்க வேண்டும் என்றார். ஒரு வீரர் நீக்கம் பற்றி எல்லாம் இது வரை விவாதித்தது இல்லை. ஆனால், சபாநாயகர் சோம்நாத் சம்மதம் தெரிவித்தார். "இந்த பிரச்சினையை எழுப்ப அனுமதிக்கிறேன். அரசியல் காரணமாக கங்குலிக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது," என்று கருத்து வேறு தெரிவித்தார். ஆக, வெடிகுண்டு பீதிக்கு அப்புறம், நாடாளுமன்றில் கங்குலி விவகாரம் அடுத்த வாரம் நிச்சயம் சர்ச்சையை கிளப்பும்.

என்ன காரணம்?: கங்குலி ஒரு வங்காளி என்பதால் மட்டும் மேற்குவங்க அரசியல்வாதிகள் ஒன்று திரளவில்லை. அடுத்த ஆண்டு இங்கு சட்டசபை தேர்தல் நடக்க இருப்பதே முக்கிய காரணம். கங்குலிக்கு ஆதரவு அளிக்க தவறினால், பெரும்பாலான கிரிக்கெட் ரசிக்கும் மக்கள் புறக்கணித்து விடுவார்களோ என்று பயப்படுகின்றனர். இதனால் தான் ஆளும் இடது சாரிகள் தவிர, பா.ஜ., சார்பில் அருண் ஜெட்லி, திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி உள்ளிட்ட அனைவரும் ஆதரவு குரல் கொடுக்கின்றனர். சின்ன, சின்ன அமைப்புகள் கூட, கங்குலி விவகாரத்தை எழுப்பி சுய விளம்பரம் தேடிக் கொள்கின்றன.

கங்குலி நீக்கம் இவ்வளவு பெரிய தலைவலியை தரும் என்று பவாரே எதிர்பார்க்கவில்லை. இதற்கு சமரச தீர்வு காணும் முயற்சியில் இறங்கியுள்ளார். பல்வேறு தரப்பிலும் பாகிஸ்தான் தொடருக்கு கங்குலியை தேர்வு செய்யும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அப்படியானால் அடுத்த ஆண்டு பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை!

அரசியலில் சவுரவ்?

தனக்கு ஆதரவாக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று திரண்டு நிற்பதை கண்டு சவுரவே மிரண்டு போயுள்ளார். கேரளாவை சேர்ந்த லகிரிக்கெட் பிரியர்கள் சங்கம், கங்குலிக்கு ராஜய்சபா எம்.பி., பதவி தர வேண்டுமென மார்க்சிஸ்ட் தலைமைக்கு கோரிக்கை வைத்துள்ளது. "நீக்கியவர்களுக்கு பதிலடி தரும் விதமாக கங்குலியை ராஜ்யசபா எம்.பி.,யாக நியமிக்க இடதுசாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சரத்பவார் செல்வாக்கால் நீக்கப்பட்டிருந்தால், அவரை மத்திய அமைச்சரவையில் இருந்து நீக்க வேண்டும்," என கோரிக்கையில் கூறப்பட்டுள்ளது. தனது குரு அசோக் பட்டாச்சார்யா போன்றோர் மேற்குவங்கத்தில் அமைச்சராக இருப்பதால் கங்குலி தேர்தலில் நின்றால் கூட, ஓட்டு வாங்கிவிடும் சூழ்நிலை மே. வங்கத்தில் இருக்கிறது. கிடைக்குமா ஒப்பந்தம்?

கங்குலி மீண்டும் இந்திய அணியில் ஒப்பந்தம் செய்யப்படுவதில் சிக்கல் எழுந்துள்ளது. கடந்த ஆண்டு கிரிக்கெட் சபை சம்பள ஒப்பந்த முறையை அறிமுகப்படுத்தியது. இதன் படி சீனியர் வீரரான கங்குலி "ஏ" பிரிவில் 50 லட்சம் ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஒப்பந்த காலம் அக்டோபரில் முடிந்தது. புதிய ஒப்பந்தம் அடுத்த வாரம் "ரெடி"யாகும் என தெரிகிறது. இக்கமிட்டியில் பயிற்சியாளர் சாப்பல்,தேர்வுக் குழு தலைவர் கிரண் மோரே, போர்டு தலைவர் சரத் பவார் உள்ளனர். இவர்கள் அனைவருமே கங்குலி எதிர்ப்பாளர்கள் என்பதால், மீண்டும் ஒப்பந்தம் கிடைப்பது சந்தேகமே. பவார் எதிர்ப்பு

கங்குலி விவகாரத்தை நாடாளுமன்றில் கிளப்ப சரத்பவார் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். "இந்திய அணியில் யார் இருப்பது என்பதற்கு நாடாளுமன்றை பயன்படுத்தினால், அது கிரிக்கெட்டுக்கும், கிரிக்கெட் வீரர்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடும். அணியை தேர்வு செய்வது தேர்வாளர்களின் பொறுப்பு. கிரிக்கெட்டில் அரசியல் தலையிடக் கூடாது. ஒவ்வொரு மாநில மக்களும் வீரர்கள் தேர்வை நிர்ணயிக்கத் தொடங்கினால், கிரிக்கெட் தான் பாதிக்கும். ஆமதாபாத் போட்டிக்கான அணி தேர்வு குறித்து தேர்வுக் குழு தலைவர் கிரண் மோரேவிடம் விளக்கம் கேட் டுள்ளேன்," என பவார் குறிப்பிட்டார். உண்ணாவிரதம், மறியல், பந்த்

சவுரவுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் தொடர்கின்றன. வரும் 20ல் பந்த் நடத்த லமைதான் ஸ்போர்ட்ஸ் நல அமைப்பு" அழைப்பு விடுத்துள்ளது. நேற்று ஐந்தாவது நாளாக ரயில் மறியல் போராட்டம் நடந்தது. கோல்கட்டாவில் உள்ள சவுரவ் வீட்டிற்கு அருகே, அவரை அணியில் சேர்க்கும்படி உளளூர் கிரிக்கெட் கிளப்பை சேர்ந்த 15 பேர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.


## சோதிடம்

கொக்கட்டிச்சோலையில்
ஞானசாஸ்திரம், கைரேகை, சாதகம் மற்றும் தீராத நோய்கள், வாதநோய்கள் என்பவற்றினைக் குணப்படுத்த,
பிரபல சோதிடர்:- அழகிப்போடி - மகேந்திரலிங்கம். ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் கொக்கட்டிச்சோலை.
கிழமை நாட்கள்:- வெள்ளி, செவ்வாய்


## லோகோவை சட்டையில் அணிய 313 கோடி ரூபா

இந்திய அணிக்கு அள்ளித் தருகிறது சகாரா நிறுவனம். அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு அதிகாரப்பூர்வ அனுசரனை உரிமையை "ஏர் சகாரா" தட்டிச் சென்றது. ஒப்பந்த தொகையாக ரூ. 313 கோடி ரூபாய் தருகிறது. டெண்டரில் குறைந்த தொகை குறிப்பிட்ட ஏர் டெல், ரிலையன்ஸ் இன்போகாம் போன்ற நிறுவனங்கள் வாய்ப்பை இழந்தன.

இந்திய அணியின் அனுசரனைத் தேர்வு செய்வதற்காக கிரிக்கெட் சபை சந்தைப் படுத்தல் சபை கூட்டம் டில்லியில் நடந்தது. சபை செயலாளர் நிரஞ் சன்ஷா உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர். பார்வையாளர்களாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் இருந்தனர். இவர்கள் முன்னிலையில் குத்தகை விண்ணப்பங்கள் பிரிக்கப்பட்டன. இதி ல் 313 கோடி ரூபாய் குறிப்பிட்டு இருந்த "ஏர் சகாரா" அணியின் அனுசரனை உரிமையை தக்க வைத்துக் கொண்டது. இது கடந்த முறை கிடைத்த தொகையை காட்டிலும் நான்கு மடங்கு அதிகம்.

இந்நிறுவனத்தின் லோகோவை சட்டையில் அணிந்து இந்திய வீரர்கள் விளையாடுவர். ஜன. 2006 முதல் டிச. 2009 வரையிலான அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான அனுசரனை அந்தஸ்தை "ஏர் சகாரா" பெறுகிறது. இந்தக் காலக் கட்டத்தில் இந்திய அணி 44 டெஸ்ட், 110 ஒரு நாள் போட்டிகளில் விளையாட உள்ளது. குறைந்த தொகை குறிப்பிட்ட ஐடியா செ ல்லுலர்( ரூ. 286 கோடி), ரிலையன்ஸ் இன்போகாம்(ரூ. 257 கோடி), இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்(ரூ. 256 கோடி) போன்ற முன்னணி நிறுவனங்கள் வாய் ப்பை இழந்தன.

இந்திய அணி உள்ளூர், வெளிநாட்டில் பங்கேற்கும் அனைத்து போட்டிகளுக்கும் தொடர்ந்து "ஏர் சகாரா" அனுசரணையா இருக்கும். ஐ.சி.சி., நடத்தும் உலகக் கிண்ணம், மினி உலக கோப்பை போட்டிகள் மட்டும் விதிவிலக்காக அமையும்.

## ஆழி அலையின் அனர்த்தங்கள்

சுனாமியின் சீற்றம் அம்மா
சொல்ல முடியாதம்மா
சொந்தமெல்லாம்
சொல்லொணா
வேதனையம்மா
சோகக் கதையம்மா சொல்லி
வேலையில்லையம்மா
மழலைக் குழந்தைகளம்மா
மரத்திலே தொங்குதம்மா — இது
மர்மமான கொடுமையம்மா
பட்டப் பகலிலே
படையெடுத்து வந்து
பட்டவர்களையெல்லாம்
பாவம் பார்க்காமல் பாழடித்து
விட்டதம்மா
சொல்லொண்ணாத் துயரம்
அம்மா
சொல்லி வாயெடுக்குமுன்
சொடுக்கிச் சென்றதம்மா
சொந்தம் சோரம் போனதம்மா
பிள்ளைகளைக்
கொன்றதம்மா
பெற்றாரைப் பிரிய வைத்ததம்மா
உற்றாரைக் கொன்றதம்மா
பால் மணம் மாறாத பாலகனைக்
கொன்றதம்மா
பாட்டியை மட்டும் விட்டதா அம்மா
பாட்டனையும் சேர்த்துக்
கொண்டதம்மா
பெற்ற பிள்ளைகளைப் பிரிந்து
பெற்றார் கதறி அழுகின்ற
காட்சிதான் என்னே அம்மா
பெற்ற மனம் பித்து அல்லவா
அம்மா
உலகமே அறியாத மழலைகள்
ஊர்ந்து செல்கின்ற உயிரினங்கள்
வரவும் இதற்குத்தானா அம்மா
உள்ளமே உருகுதம்மா ஊரைப்
பார்க்க
பட்டி தொட்டி எல்லாம் பாமர
மக்களின் உடல்கள் அம்மா
பார்த்தவர்கள் எல்லாம்
பயந்தாங் கொள்ளி ஆகி
விட்டார்கள் அம்மா
பாமர மக்களெல்லாம் பாயோடு
சென்றார்கள் அம்மா
பார்த்தவர்கள் எல்லாம்
பதைபதைத்து நின்றார்களம்மா
அழகுக் கன்னியர்கள் ஆழ்கடலில்
அமிழ்ந்தார்களம்மா
அமிர்தம் கடைந்த கதையாக
முடிந்ததம்மா
ஆழ்கடலிலே அலையாக
வந்ததை
ஆண்டவனும் தடுக்கவில்லை
அம்மா
எங்கும் சோகக் குரல்கள் அம்மா
எங்கள் மக்கள் படும் அவஸ்தை
சொல்லில் அடங்காதம்மா
எங்கள் தாயகத்தை அடியோடு
அழித்ததம்மா
ஏங்கும் குரல்களுக்கு என்ன
நிவாரணம் அம்மா
என்ன சொல்லி ஏக்கத்தைக்
குறைப்பதம்மா
ஏப்பமிடுவோர் ஏழைகளின்
சொத்தையெல்லாம்
எண்ணிப் பார்க்காமலே எடுத்துச்
சென்றார்கள் அம்மா
இதுதானா உலகம் அம்மா
இவர்களையெல்லாம் சுனாமி
இழுத்துச் செல்லவில்லையே
அம்மா
இவர்களையும் தமிழ் ஈழத்தில்
விட்டு வைக்கலாமா
ஆண்டொன்று கடந்தும்
அவலங்கள் தீரவில்லை அம்மா
அனைவரையும் அடித்துச் சென்ற
ஆழிக்கடலே
அவர்கள் அனைவருக்கும் —
எங்கள்
ஆண்டு அஞ்சலியை அறிவித்து
விடு இனி மேலும் நீ
அலையாக வந்து அழித்து
விடாதே.

பழுகாமம் — ஞானசூரியம்




புல்லுமலையில் போரினால் பாதிப்புற்ற பத்து குடும்பங்களுக்கு ஜேசு சபை அகதிப்பணி அமைப்பு வீடுகளை அமைத்து கையளித்துள்ளது. இந்நிகழ்வில் மட் மாவட்ட தளபதி நாகேஸ் மற்றும் கத்தோலிக்க மதகுருமார்கள் மற்றும் பொதுமக்கள்.



இ.தொ.க.தலைவர் ஆறுமுகம் தொண்டமான் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடியபோது.

# ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர்.திரு.தருமநாயகம் – சிவசூரியமூர்த்தி
மலர்வு:- 1951-03-01 உதிர்வு:- 2004-12-26

அமரர்.திருமதி.வசந்தராணி – சிவசூரியமூர்த்தி
மலர்வு:- 1957-01-20 உதிர்வு:- 2004-12-26

அமரர்.செல்வி.சிவசூரியமூர்த்தி – கேசிகா
மலர்வு:- 1995-02-12 உதிர்வு:- 2004-12-26

ஆண்டு ஒன்று ஓடினும் ஆறுதில்லை எங்கள் மனம்
ஆழிப் பேரலையின் அகோரத்தில் மாண்ட எங்கள்
அன்புத் தங்கையோடு அருமை அத்தான் தங்க மகள் கேசிகா
தாங்குதில்லே எங்கள் நெஞ்சம் தவிக்கின்றோம் நாளும் நினைத்து

ஆசைக் கிளியே எம் அருமை மருமகளே
கோர அலை கொன்று தின்ற அத்தானும் தங்கையும்
எங்கு சென்றீர் எம்மை விட்டுப் பூவுலகு பிடிக்கலையோ
பொன்மகளே கேசிகா பொறுக்குதில்லே எங்கள் நெஞ்சு

தாய் சககுடும்பத்தார்
விஷ்ணு கோவில் வீதி
மட்–பழுகாமம் – 02.

தகவல்:– அ.துரைசிங்கம்
பழுகாமம் – 02.



களுத்துறை சிறையில் இருக்கும் கல்லடி றொபட் எழுதிய ''சிறையில் பூத்த உணர்வின் ஒளி'' கவிதை நூல் வெளியீட்டு விழா கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது.



போரதீவுப் பற்று பிரதேச கலாசார விழா நிகழ்வுகள்.





கிளிநொச்சி விவசாய உதவிப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வில்.

# ஓராண்டுப் பிரார்த்தனை

தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலனசபை



சுனாமி அனர்த்தத்தின் கொடூரத்தாண்டவத்தில் உயிரிழந்து ஆகுதியான எம் தேசத்து உடன் பிறப்புக்களுக்கும், உயிர் நீத்த அனைத்து இன மக்களுக்கும் ஓராண்டு நினைவு நாளான அன்று (26.12.2005) எல்லாம் வல்ல எம்பெருமான் அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகராம் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரப் பெருமானின் அருள் கடாட்சத்தால் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கின்றோம். உடமையிழந்து, உயிரிழந்து, இருக்க இல்லறம் இன்றி ஓராண்டு முடிந்த இவ் வேளையிலும் கண்ணீருடனும்,கவலையுடனும் அகதி வாழ்வு வாழும் அனைத்து மக்களின் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலம் அமைந்து சுபீட்சமாகவும், நிம்மதியாகவும் வாழ்க்கை அமைய வேண்டுவதுடன், அன்று பகல் 1000 தீபங்கள் ஏற்றி விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளதால் சகல பொது மக்களும் கலந்து இனியும் இது போன்ற பேரனர்த்தம் எம்மண்ணில் நிகழாதிருக்க இறையருள் புரிய வேண்டுமென இன்றைய நாளில் பிரார்த்திப்போம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

வ.சோதிலிங்கக் குருக்கள்
தலைமையில் விசேட பூசை நடைபெறும்

அ.இராசதுரை
தலைவர் (வண்ணக்கர்)

க.ஆறுமுகம்
பொருளாளர் (வண்ணக்கர்)

இ.சாந்தலிங்கம்
செயலாளர் (வண்ணக்கர்)

ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலனசபை
கொக்கட்டிச்சோலை. 26.12.2005.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 23.12.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது